வள்ளுவ ஆண்டு 2057 – ஐப்பசி – 10 – செவ்வாய்க்கிழமை – 27.10.2026 | பக்கங்கள் – 36 | இதழ் – 11

BEHIND ME MEDIA
WE SEE BOTH AHEAD AND BEHIND
web : behindmenews.org

குறள் 11 : வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று

பொருள் : மழை பெய்ய உலகம் வாழ்ந்துவருவதால், மழையானது உலகத்து வாழும் உயிர்களுக்கு அமிழ்தம் என்று உணரத் தக்கதாகும்.

வாழ்க்கைச் செலவை குறைக்கும் பிரசாரம் Olivia Chow மீண்டும் Toronto மேயரானார்!

வாழ்க்கை செலவை குறைப்பதை மையமாகக் கொண்டு பிரசாரம் மேற்கொண்ட Olivia Chow மீண்டும் டொராண்டோவின் மேயராக இரண்டாவது முறை பதவிக் காலத்தைக் கைப்பற்றி யுள்ளார்.

99.2 சதவீத வாக்குப்பதிவு மையங்களின் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், Olivia Chow 54.2 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட Brad Bradford 41.1 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளார். Olivia Chow தோராயமாக 127,627 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

"Toronto மக்கள் தங்கள் தீர்ப்பை வழங்கிவிட்டார்கள்," என்று திங்கள் கிழமை இரவு தனது ஆதரவாளர்கள் மத்தியில், உரையாற்றிய Olivia Chow கூறினார். "எனக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள், மற்றும் Toronto வைத்தங்கள் வீடாகக் கருதி இங்கு உழைத்து வாழும் அனைவருக்கும் நான் கூறுகிறேன் நான் உங்கள் அனைவருக்கும் மேயர்."

வாழ்க்கை செலவை குறைப்பதை மைய மாகக் கொண்ட பிரசாரம் :

Olivia Chow தனது பிரசாரத்தின் போது பொதுப்போக்குவரத்து கட்டணங்களை உயர்த்தாமல் நிறுத்தி வைப்பதாகவும், வாரத்திற்கு 10 முறை கட்டணம் செலுத்திப் பயணித்த பிறகு பயணங்களை இலவச மாக்குவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

மேலும், பள்ளி ஊட்டச்சத்து திட்டத்தை விரிவாக்கி மதிய உணவையும் சேர்ப்பதாக உறுதியளித்தார். இதன் மூலம் குடும்பங்கள் மளிகைப் பொருட்களுக்கான செலவில் சுமார் $880 களைச் சேமிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

சொத்து வரியை பணவீக்க விகிதத்திற்கு ஏற்பவே உயர்த்துவதாகக் கூறிய Olivia Chow, Brad Brad fort வரி முடக்கத் திட்டம் நீண்ட காலத்தில் நகர மக்களுக்கு அதிக செலவை ஏற்படுத்தும் என எச்சரித்தார்.

தனது தோல்வியை ஒப்புக்கொண்ட Brad Brad fort, Chow வை தொலை பேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்ததாகக் கூறினார்.

2023 ஆம் ஆண்டு இடைத்தேர்தலில் வெற்றி பெற்று மேயரான Olivia Chow வுக்கு, இந்த வெற்றியின் மூலம் முதன்முறையாக 4 ஆண்டுகள் கொண்ட முழுமையான பதவிக்காலம் கிடைத்துள்ளது.



அமோக வெற்றி பெற்றார் நீதன் ஷான்!

Ward 25 - Scarborough - Rouge Park - மாநகராட்சித் தேர்தலில், நீதன் ஷான் 15,727 வாக்குகள் வாக்குகள் பெற்று மீண்டும் நகரசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



நீதன் ஷான் இன உறவுகள் தொடர்பான நகர்ப்புறக் கூட்டமைப்பான Urban Alliance on Race Relations (UARR) அமைப்பின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றினார்.

கல்வித் துறையிலும் தலைமைப் பொறுப்புகளை வகித்துள்ள அவர், Scarboroughவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் Toronto District School Board (TDSB) அறங்காவலராகவும், TDSB தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

2006 முதல் 2010 வரை York Region District School Board அமைப்பின் அறங்காவலராகவும் அவர் சேவையாற்றினார்.

இனநீதிக்காக நீதன் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் நீதி ஆகிய துறைகளில் அமைப்புசார் கொள்கை மாற்றத்தை ஏற்படுத்துவதில் அவர் கவனம் செலுத்துகிறார். மனித உரிமைகளுக்காக மேற்கொண்ட பணிக்காக நீதன் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். அவற்றில் UARR வழங்கிய Race Relations Award மற்றும் Toronto Community Foundation வழங்கிய Vital People Award ஆகியவை அடங்கும். Toronto நகரசபை உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில், நகரின் Youth Equity Champion மற்றும் Newcomer Advocate ஆகிய அங்கீகாரங்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Scarborough Southwest
கவுன்சிலராக பார்த்தி கந்தவேல்!

பார்த்தி கந்தவேல் Toronto மாநகராட்சியின் ward 20 எனப்படும் Scarborough Southwest தொகுதியின் கவுன்சிலராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



Toronto மாநகராட்சித் தேர்தலில், பார்த்தி கந்தவேல் 35.99 சதவீத வாக்குகளைப் பெற்றார். இரண்டாவது இடத்தைப் பிடித்த கெவின் ரூபசிங்கே 30.93 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

வாக்கு எண்ணிக்கை முடிவுகள் ஆரம்பத்தில் மெதுவாகவே வெளியானதால், தேர்தல் போட்டி நீண்ட நேரம் மிகவும் நெருக்கமானதாகக் காணப்பட்டது. சில வாக்குச் சாவடிகளில் ஏற்பட்ட தாமதங்களால், திங்கட்கிழமை இரவு வாக்குப்பதிவு முடிந்து ஒரு மணி நேரத்திற்கும் மேலாக, இரவு 9 மணிக்குப் பின்னரே முடிவுகள் வெளியாகத் தொடங்கின.

2023ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத்தேர்தலில் முதன்முறையாக வார்டு 20 கவுன்சிலராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்த்தி கந்தவேலுக்கு இது தொடர்ந்து இரண்டாவது தேர்தல் வெற்றியாகும். 2022 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்ற கேரி பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, அவருக்குப் பதிலாக நடைபெற்ற இடைத்தேர்தலில் கந்தவேல் வெற்றி பெற்றிருந்தார்.

தனது தேர்தல் தலைமையகத்தில் ஊடகங்களுக்குப் பேட்டியளித்த பார்த்தி கந்தவேல் Toronto மாநகராட்சியில் Scarborough மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பதுடன், ஒட்டுமொத்த நகரத்தையும் வலுப்படுத்தும் பணிகளில் ஈடுபட உள்ளதாகத் தெரிவித்தார். "Scarborough வில் மற்ற நகரப் பகுதிகளுடன் பகிர்ந்துகொள்ளக்கூடிய பல சிறப்பம்சங்கள் உள்ளன. அவற்றைப் பற்றிய கலந்துரையாடல்களை நாம் முன்னெடுக்க வேண்டும்," என்று அவர் கூறினார். 2023ஆம் ஆண்டு முதல் கவுன்சிலராகப் பணியாற்றி வரும் பார்த்தி கந்தவேல், இதற்கு முன்னர் Toronto மாவட்டப் பாடசாலைச் சபையின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Brampton இல் மூன்றாவது முறை மேயராகிறார் Patrick Brown!



திங்கள்கிழமை நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் வாக்காளர்களின் பெருவாரியான ஆதரவுடன் Patrick Brown மேயராக மூன்றாவது முறையாக வெற்றி பெற்றுள்ளார். தற்போதைய மேயரை வீழ்த்த 11 வேட்பாளர்கள் களமிறங்கிய போதிலும், இரவு 9:20 மணி நிலவரப்படி 164 வாக்குப்பதிவு மையங்களில் 134 மையங்களின் முடிவுகள் வெளியான போது, பிரவுன் 55 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அவர் 61,038 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

முன்னதாக 2018 ஆம் ஆண்டு மேயர் தேர்தலில் போட்டியிட்ட வெஸ்லி ஜாக்சன் (Wesley Jackson), அந்த நேரத்தில் 21 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்று (21,934 வாக்குகள்) இரண்டாமிடத்தைப் பிடித்தார். பிரப் கில் (Prabh Gill) 12 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளுடன் (13,079 வாக்குகள்) மூன்றாம் இடத்தைப் பிடித்தார். களத்தில் இருந்த மற்ற ஒன்பது வேட்பாளர்களில் எவரும் ஐந்து சதவீதத்திற்கு மேல் வாக்குகளைப் பெறவில்லை

மிசிசாகாவின் புதிய மேயரானார் Alvin Tedjo

மிசிசாகாவின் புதிய மேயராக Alvin Tedjo தேர்ந்தெடுக்கப் படுவார் என CP24-CTV தேர்தல் பிரிவு கணித்துள்ளது. டெட்ஜோ 39 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இவர் தற்போதைய மேயர் Carolyn Parrish விட 21,000 க்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் முன்னணியில் உள்ளார்.

பாரிஷ் 27 சதவீத வாக்குகளையும், மிசிசாகாவின் முன்னாள் மேயர் Bonnie Crombie தோராயமாக 22 சதவீத வாக்குகளையும் பெற்று மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளார்.

"மிசிசாகா மாற்றத்திற்காக வாக்களித்துள்ளது"



ஆதரவாளர்களின் பலத்த கரகோஷத்திற்கு மத்தியில் பேசிய Tedjo, "மிசிசாகா நகரம் நகர சபையில் மாற்றத்தைக் கோருவதற்கு ஒரு தெளிவான மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை எடுத்துள்ளது.

P- 02

Scarborough Centre இல் மீண்டும் Michael Thompson



நடைபெற்ற டொராண்டோ நகராட்சித் தேர்தலின் அதிகாரப்பூர்வமற்ற முடிவுகளின்படி, வார்டு 21-இல் Michael Thompson முன்னிலையில் இருக்கின்றார். 49 வாக்குச் சாவடிகளின் முடிவுகளும் பதிவான நிலையில் அவருக்கு 16,053 வாக்குகள் கிடைத்திருந்தன. Michael Thompson கனடாவின் டொராண்டோ நகரசபையில் உள்ள வார்டு 21 Scarborough Centre பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நீண்டகால நகரசபை உறுப்பினராக இருந்து வருகிறார்.

டிசம்பர் 2003 முதல் நகரசபை உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார். ஆரம்பத்தில் பழைய வார்டு 37-ஐயும், பின்னர் வார்டு 21 பகுதியையும் பிரதிநிதித்துவப்படுத்தினார். ஜமைக்காவில் பிறந்து, ஸ்கார்பரோ பகுதியில் வளர்ந்தவர். Concordia பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளார்.

டொராண்டோவின் முன்னாள் துணை மேயராகப் பணியாற்றியுள்ளார். பொருளாதார மேம்பாட்டுக் குழுவின் தலைவராகவும், இரவுநேரப் பொருளாதார நடவடிக்கைகளுக்கான டொராண்டோவின் முதல் தூதராகவும் செயல்பட்டுள்ளார்.



பிராந்திய கவுன்சிலராக ரஞ்சித் பரணிவாசகம்

அஜாக்ஸ் நகரின் வார்டு 2 பிராந்திய கவுன்சிலர் தேர்தலில் ரஞ்சித் பரணிவாசகம் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின்படி, அவர் 2,793 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

முன்னாள் Liberal MP Shaun Chen வெற்றி

முன்னாள் Liberal MPயான Shaun Chen, தற்போதைய கவுன்சிலரான Jamaal Myers தோற்கடித்து Scarborough North தொகுதியைக் கைப்பற்றியுள்ளார்.



ஒரு கார் விபத்தே Shaun Chen தனது அரசியல் எதிர்காலத்தைப் பற்றி மறுபரிசீலனை செய்ய முக்கியக் காரணமாக அமைந்தது. ஒட்டாவா விற்குப் பயணித்தபோது ஏற்பட்ட அந்த விபத்து, அவரை Liberal எம்பி பதவியிலிருந்து விலக வைத்ததுடன், வீட்டிற்கு அருகில் இருக்கும் வகையில் Toronto நகரசபை உறுப்பினராகப் போட்டியிடவும் தூண்டியது.

ஒட்டாவா வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவந்த Shaun Chen, தற்போது Scarborough North தொகுதியின் புதிய கவுன்சிலராகப் பொறுப்பேற்க ஆயத்தமாகி வருகிறார்.

Hamilton இல் Keanin Loomis புதிய மேயராகிறார்!



தற்போதைய மேயர் Andrea Horwath தோற்கடித்து Keanin Loomis Hamilton புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என CTV தேர்தல் பிரிவு கணித்துள்ளது.

88 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குப்பதிவு மையங்களின் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், கீனின் லூமிஸ் 41 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

ஒன்டாரியோ என்.டி.பி (NDP) கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஹமில்டன் கவுன்சிலருமான ஆண்ட்ரியா ஹோர்வாத் சுமார் 14 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்று மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டார். ஹமில்டன் நகர கவுன்சிலர் Rob Cooper சுமார் 32 சதவீத வாக்குகளுடன் இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.

ஹமில்டன் வர்த்தக சபையின் (Hamilton Chamber of Commerce) முன்னாள் தலைவரான லூமிஸ், அண்மையில் கனடிய எ.்.கு கட்டுமான நிறுவனத்தின் (Canadian Institute of Steel Construction) தலைவராகவும் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் பணியாற்றினார்.

2022 மாநகராட்சித் தேர்தலில் ஹோர்வாத், லூமிஸை 1,600 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியிருந்தார். இருப்பினும், இம்முறை லூமிஸ் கிட்டத்தட்ட 40,000 வாக்குகள் வித்தியாசத்தில் ஹோர்வாத்தை தோற்கடித்துள்ளார்.

Toronto Centre இல் Curran Stikuts வெற்றி!



வீடற்றோர் நிலை போதைப்பொருள் விற்பனை மற்றும் வன்முறை குறித்த கவலைகள் அப்பகுதி மக்களிடையே முக்கியப் பிரச்சினைகளாக இருந்தன. டேனியல் டேட் மூன்றாம் இடத்தைப் பிடித்தார்.

வீட்டு வசதி Mjuthsuhd Curran Stikuts Toronto Centre தொகுதிக்கான நகரசபை இடத்தைக் கைப்பற்றி யுள்ளார். கோடை காலத்தில் முற்போக்கு வாக்காளர்களின் ஆதரவைத் திரட்டிய இவர் தற்போதைய கவுன்சிலரான Chris Moise வீழ்த்தியுள்ளார்.

Lori lococo niagara falls மேயராகிறார்!



Lori Lococo நயாகரா .ர்பால்ஸின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என CP24-CTV தேர்தல் பிரிவு கணித்துள்ளது.

அனைத்து வாக்குப்பதிவு மையங்களின் முடிவுகளும் வெளியாகியுள்ள நிலையில், 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று, 2010 ஆம் ஆண்டு முதல் மாநகரத்தின் உயரிய பொறுப்பில் இருந்த Jim Diodati தோற்கடித்து லோகோகோ வெற்றி பெற்றுள்ளார்.



மிசிசாகாவின் புதிய மேயரானார் Alvin Tedjo

தொடர்ச்சி

மிசிசாகா நகரத்தின் அடுத்த மேயராக இங்கு நிற்பது என் வாழ்நாளின் மிகப்பெரிய கவுரவமாகும். இது நான் லேசாக எடுத்துக்கொள்ளாத ஒரு மகத்தான பொறுப்பு" என்று கூறினார்.

"இந்தத் தேர்தல் பிரசாரத்தின் போது, நாங்கள் விஷயங்களை எவ்வாறு வித்தியாசமாகச் செய்வோம் மற்றும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் உண்மையான, அர்த்தமுள்ள மாற்றங்களை எவ்வாறு வழங்குவோம் என்பதற்கான விரிவான பார்வையை முன்வைத்தோம். இப்போது அந்தத் திட்டங்களை நிஜமாக்கும் கடினமான பணியைத் தொடங்குவோம்" என்று Tedjo கூறினார்.

தனது பிரசாரத்தில், நகரப் பிரிவின் குடியிருப்புச் சொத்து வரியை இரண்டு ஆண்டுகளுக்கு உயர்த்தாமல் நிறுத்தி வைப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார். மேலும், மூத்த குடிமக்களுக்கான சொத்து வரித் தள்ளுபடியை அதிகரிக்கவும், குடும்பங்களுக்கு நகரத் திட்டங்களை மிகவும் மலிவாகவும் எளிதாகவும் கிடைக்கச் செய்யவும் உறுதியளித்துள்ளார்.



Toronto மாநகராட்சித் தேர்தல் 2026: நகரசபைக்குத் தேர்வானவர்கள் மற்றும் வெளியேறியவர்களின் பட்டியல்



திங்கள்கிழமை நடைபெற்ற Toronto மாநகராட்சித் தேர்தலில் 7 புதிய கவுன்சிலர்களை வாக்காளர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர். இதன் மூலம் தற்போதைய கவுன்சிலர்கள் பலர் தோல்வியடைந்துள்ளதுடன், முன்னாள் கவுன்சிலர் ஒருவர் மீண்டும் நகரசபைக்குத் திரும்பியுள்ளார்.

நீண்டகால கவுன்சிலர் பிரான்சிஸ் நுன்ஸியாடா (Frances Nunziata) மற்றும் மேயர் பதவிக்குப் போட்டியிட்ட பிராட் பிராட்.ஃபோர்ட் (Brad Bradford) ஆகியோர் நகரசபையை விட்டு வெளியேறும் முக்கிய பிரபலங்களில் அடங்குவர்.

அதேவேளை முன்னாள் லிபரல் எம்பி நெய்ட் எர்ஸ்கைன்-ஸ்மித் (Nate Erskine-Smith) மற்றும் முன்னாள் கவுன்சிலர் மைக் லேட்டன் (Mike Layton) ஆகியோர் புதிய உறுப்பினர்களாகச் சேர்கின்றனர். 18 தற்போதைய கவுன்சிலர்கள் (Incumbents) மீண்டும் வெற்றி பெற்றுத் தங்கள் இடங்களைத் தக்கவைத்துக் கொண்டனர். 2023 இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற ஒலிவியா சௌ (Olivia Chow), பிராட்.ஃபோர்ட்டை வீழ்த்தி முதன்முறையாக 4 ஆண்டுகள் கொண்ட முழுமையான மேயர் பதவிக்காலத்தைக் கைப்பற்றியுள்ளார்.

நகரசபைக்குப் புதியவர்கள் மற்றும் வெளியேறியவர்கள் (Who's In and Who's Out) வார்டு 4 (Parkdale-High Park): டயானா சேன் மெக்னாலி (Diana Chan McNally) வெற்றி பெற்றுள்ளார். (முன்னர் இந்த வார்டைப் பிரதிநிதித்துவப்படுத்திய நீண்டகால கவுன்சிலர் கோர்ட் பெர்க்ஸ் இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஓய்வு பெற்றார்).



வார்டு 5 (York South-Weston): பல முயற்சிகளுக்குப் பிறகு சியாரா படோவானி (Chiara Padovani), நகரசபையின் மிக நீண்டகால உறுப்பினரான பிரான்சிஸ் நுன்ஸியாடாவைத் தோற்கடித்துப் புதிய கவுன்சிலராகிறார்.

வார்டு 11 (University-Rosedale): முன்னாள் கவுன்சிலர் மைக் லேட்டன் (Mike Layton) மீண்டும் நகரசபைக்குத் திரும்புகிறார். (டயான் சாக்ஸ் வார்டு 14-இல் போட்டியிடச் சென்றதால் காலியான இடம்).

வார்டு 13 (Toronto Centre): தற்போதைய கவுன்சிலர் கிறிஸ் மோயஸைத் தோற்கடித்து கர்ரன் ஸ்டிகட்ஸ் (Curran Stikuts) வெற்றி பெற்றுள்ளார்.

வார்டு 14 (Toronto-Danforth): சாரா எர்ஹார்ட் (Sara Ehrhardt) புதிய கவுன்சிலராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

(முன்னர் பாலா பிளெட்சர் பிரதிநிதித்துவப்படுத்திய இடம் டயான் சாக்ஸ் இப்போட்டியில் மூன்றாம் இடத்தைப் பிடித்தார்).

வார்டு 19 (Beaches-East York): முன்னாள் எம்பியான நெய்ட் எர்ஸ்கைன்-ஸ்மித் (Nate Erskine-Smith) வெற்றி பெற்றுள்ளார். (பிராட்.ஃபோர்ட் மேயர் தேர்தலில் போட்டியிட்டதால் காலியான இடம்).

வார்டு 23 (Scarborough North): முன்னாள் லிபரல் எம்பி ஷான் சென் (Shaun Chen), தற்போதைய கவுன்சிலர் ஜமால் மையர்ஸைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளார்.

மீண்டும் தேர்வாகியுள்ள தற்போதைய கவுன்சிலர்கள் (Who's Returning) வார்டு 1 (Etobicoke North): வின்சென்ட் கிரிசாண்டி (Vincent Crisanti) வார்டு 2 (Etobicoke Centre): ஸ்டீபன் ஹோலிடே (Stephen Holyday) வார்டு 3 (Etobicoke-Lakeshore): ஆம்பர் மோர்லி (Amber Morley) வார்டு 6 (York Centre): ஜேம்ஸ் பாஸ்டர்னாக் (James Pasternak) வார்டு 7 (Humber River-Black Creek): அந்தோனி பெருஸா (Anthony Perruzza) வார்டு 8 (Eglinton-Lawrence): மைக் கோல் (Mike Colle) வார்டு 9 (Davenport): அலெஜாண்ட்ரா பிராவோ (Alejandra Bravo) வார்டு 10 (Spadina-Fort York): அவுஸ்மா மாலிக் (Ausma Malik) வார்டு 12 (Toronto-St. Paul's): ஜோஷ் மேட்லோ (Josh Matlow) வார்டு 15 (Don Valley West): ரேச்சல் செர்னோஸ் லின் (Rachel Chernos Lin) வார்டு 16 (Don Valley East): ஜான் பர்ன்சைட் (Jon Burnside) வார்டு 17 (Don Valley North): ஷெல்லி கேரல் (Shelley Carroll) வார்டு 18 (Willowdale): லில்லி செங் (Lily Cheng) வார்டு 20 (Scarborough Southwest): பார்த்தி கந்தவேல் (Parthi Kandavel) வார்டு 21 (Scarborough Centre): மைக்கேல் தாம்சன் (Michael Thompson) வார்டு 22 (Scarborough-Agincourt): நிக் மந்தாஸ் (Nick Mantas) வார்டு 24 (Scarborough-Guildwood): போல் ஏன்ஸ்லி (Paul Ainslie) வார்டு 25 (Scarborough-Rouge Park): நீதன் சான் (Neethan Shan).

BEHIND ME MEDIA

British Airways விமானத்தை இயக்கிய ஈழத்தமிழர் பிரதீப் விமல்ராஜ்!



பத்தாண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பின்னர் லண்டன் - கொழும்பு இடையிலான நேரடி விமானச் சேவையை British Airways நிறுவனம் மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில், அதன் முதல் விமானத்தை இயக்கிய விமானிகளுள் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஈழத்தமிழரான சிரேஷ்ட விமானி பிரதீப் விமல்ராஜும் இடம்பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பிறந்து தனது சிறுவயதைக் கழித்த பிரதீப் விமல்ராஜ் British Airways இன் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த விமானப் பயணத்தில் பங்கெடுத்துள்ளமை இலங்கைத் தமிழர்களுக்குப் பெருமை சேர்க்கும் விடயமாக அமைந்துள்ளது.

பத்தாண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பின்னர் இலங்கைக்குத் திரும்பிய British Airways விமானத்தின் பயணத்தில் பங்கெடுத்தமை தனக்கு மிகவும் உணர்வுபூர்வமான தருணம் என பிரதீப் விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

தனது தாயகத்துடனான தொடர்பையும், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விமானப் பயணத்தில் பங்கேற்றதன் மகிழ்ச்சியையும் பெருமையையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

Markham மேயரானார் Frank Scarpitti!



Frank Scarpitti, Ontarioவின் Markham நகரின் நீண்ட கால மேயராகப் பணியாற்றி வருகிறார். இவர் முதன்முதலில் 2006-ல் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பலமுறை மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

மிக அண்மையில், 26 அக்டோபர் 2026 நகராட்சித் தேர்தலில் சுமார் 71% வாக்குகளைப் பெற்று மீண்டும் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முக்கிய விவரங்கள்

O பதவி: மார்க்கத்தின் 7-வது மற்றும் தற்போதைய மேயர் மற்றும் York பிராந்திய மன்றத்தின் உறுப்பினர்.

O சமீபத்திய தேர்தல்: 26 அக்டோபர் 2026-ல் நடந்த தேர்தலில் Martin-Ross மற்றும் Stephen Edgell உள்ளிட்ட போட்டியாளர்களைத் தோற்கடித்து மீண்டும் வெற்றி பெற்றார்.

O உள்ளாட்சி நிர்வாகத்தில் நீண்டகாலப் பணி: 1985-ல் இருந்து பிராந்திய மன்ற உறுப்பினர் மற்றும் துணை மேயர் போன்ற பதவிகள் உட்பட, 30 ஆண்டுகளுக்கும் மேலாக Markham மற்றும் York அரசியலில் பணியாற்றியுள்ளார்.



முன்னாள் லிபரல் எம்பி Nate Erskine-Smith மற்றும் Olivia Chow! வின் வளர்ப்பு மகனான Mike Layton ஆகியோரும் கவுன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

திங்கள்கிழமை இரவு முன்னாள் கவுன்சிலர் Brad Bradford எதிர்த்துப் போட்டியிட்டுப் பெற்ற மாபெரும் வெற்றியின் மூலம் Olivia Chow மேலும் நான்கு ஆண்டுகளுக்கு Toronto நகரை வழிநடத்த ஆயத்தமாகி வருகிறார்.

தனது முக்கிய ஆதரவாளர்கள் பலரும் புதிய கவுன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், முற்போக்குச் சிந்தனை கொண்ட ஒரு புதிய நகரசபையை Olivia Chow வழிநடத்தவுள்ளார். இது அவர் தனது தேர்தல் திட்டங்களையும் கொள்கைகளையும் தடையின்றிச் செயல்படுத்துவதற்குச் சாதகமான சூழலை உருவாக்கியுள்ளது. அவர் 530,000 வாக்குகளைப் பெற்று மாபெரும் வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

கடுமையான போட்டியும் புதிய தேர்தல் பிரச்சார உத்தியும்

2023 மேயர் இடைத்தேர்தலில் Bradford வெறும் 1 சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றிருந்த போதிலும், 2026 ஆம் ஆண்டின் தேர்தலில் அவர் கணிசமான ஆதரவைத் திரட்டினார்.

வாக்குப்பதிவு நாள் நெருங்க நெருங்க Brandforனன் வெற்றி வாய்ப்பு அதிகரிப்பது போல் தோன்றிய வேளையில் Olivia Chowவின் பிரசாரக் குழு எதிர்த்தரப்பின் கொள்கைகளுக்கு எதிராகத் தீவிரப் பிரசாரத்தை முன்னெடுத்தது. குறிப்பாக, நகரத்தின் நீர் மற்றும் கழிவுநீர் சேவைகளை நிர்வகிக்க ஒரு பொது சேவை நிறுவனத்தை உருவாக்குவதாகப் Bradford அளித்த வாக்குறுதியைக் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக்கினார்.

இந்தத் திட்டம் நகரசபைக்கு நிதி திரட்டவும் மக்களுக்குச் செலவைக் குறைக்கவும் உதவும் என Bradford கூறியபோதிலும் இது நன்கு இயங்கி வரும் ஒரு பொதுச் சொத்தை நகரம் இழப்பதற்கும் தனியார்மயமாக்கலுக்கு வழிவகுக்கும் என்றும் Chow எச்சரித்தார். இந்த எச்சரிக்கை Toronto மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒலிவியா சௌவின் பிரசாரப் பிரிவு மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தொழிற்பட்டது. Progress Toronto, Ontario NDP ஆதரவாளர்கள் மற்றும் தொழிலாளர் சங்கங்களின் ஆதரவு ஆகியவை Olivia Chow வின் வெற்றிக்குக் காரணியாக அமைந்தன.

Bradford தரப்பு பல புதிய யோசனைகளை முன்வைத்த போதிலும் Olivia Chow தனது முதல் பதவிக்காலத்தின் சாதனைகளான வாடகைதாரர்கள் பாதுகாப்பு, பொதுப்போக்குவரத்துக் கட்டணம் மற்றும் பள்ளிகளுக்கான ஊட்டச்சத்துத் திட்டம் ஆகியவற்றையே தனது முதன்மைப் பிரசாரமாக வைத்தார்.

முக்கிய வாக்குறுதிகள்:

- TTC பயணிகளுக்கு 10 பயணங்களுக்குப் பிறகு கட்டண வரம்பு (10-ride fare cap).
- வாடகைதாரர்களுக்கான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பு.
- பள்ளி மதிய உணவுத் திட்டம்.
- சுயாதீன மளிகைக் கடைக்காரர்களுக்கான வரி விலக்குகள்.
- மலிவு விலையிலான வீடுகளைத் தொடர்ந்து கட்டுதல்.



செம்மணி மனித புதைகுழி சர்வதேச நீதியை பொறுப்புக்கூறலை வேண்டி நிற்கும் விடயம் - அமைச்சர் ஹெரி ஆனந்தசங்கரி

செம்மணி மனித புதைகுழி என்பது சர்வதேச நீதியை பொறுப்புக்கூறலை வேண்டி நிற்கும் விடயம் என கனடாவின் பொது பாதுகாப்பு அமைச்சர் ஹெரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.



கனடாவின் ஒட்டாவாவில் நேற்று இடம்பெற்ற செம்மணி மனிதப் புதைகுழி குறித்த மாநாட்டில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

சமீபகாலத்தில் 600க்கும் மேற்பட்ட உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக வெளிவருகின்ற தகவல்கள் இலங்கையில் நீதிக்காக மனித உரிமைகளுக்காக போராடும் எங்களுக்கு கடும் மனஉளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

இது யுத்த குற்றங்களுக்காக சர்வதேச சமூகத்தின் கவனத்தை சர்வதேச சமூகத்தின் நீதியை பொறுப்புக்கூறலை எதிர்பார்த்திருக்கும் ஒரு விடயம்.

இலங்கை என்பது பல வருடங்களாக சட்டத்தின் ஆட்சி இடம்பெறாத சர்வதேச குற்றங்களுக்காக பொறுப்புக்கூறல் இல்லாத ஒரு நாடு. யுத்த குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் உட்பட சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு பொறுப்புக்கூறல் இல்லாத நாடு.

செம்மணி மனித புதைகுழியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டமை இலங்கையில் இனப்படுகொலை காலத்தில் வாழ்ந்தவர்களுக்கு மிகப்பெரும் வேதனையையும் துயரத்தையும் அளித்துள்ளன.

அதேவேளை தமிழ் சமூகத்திலும் சர்வதேச அளவிலும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு உத்வேகத்தையும் அளித்துள்ளது.

ஆகவே நாங்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய உறுதிஎடுத்துக் கொள்ளவேண்டிய தருணம் இது.

பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை நோக்கிய ஒட்டுமொத்த பயணம் என்பது ஒரு தலைமுறையிலிருந்து மற்றைய தலைமுறைக்கு கையளித்தல் ஆகும்.

இலங்கையில் இடம்பெற்றவைகளுக்கு பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்து வதற்கான கனடாவின் அர்ப்பணிப்பை நான் மீண்டும் உறுதிசெய்கின்றேன்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான முதன்மை குழுவில் கனடாவும் இடம்பெற்றுள்ளது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் விசாரணைகள் இடம்பெறுகின்றன, 2023 இல் கனடா இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்பதை அங்கீகரித்ததுடன் இலங்கையின் இரண்டு ஜனாதிபதிகள் உட்பட அதிகாரிகளுக்கு எதிராக தடைகளை விதித்தது, கனடாவிற்குள் நுழைவதற்கு அவர்களுக்கு தடைவிதிக்கப்பட்டது.

ஆனால் இது மாத்திரம் போதுமானதல்ல, சமூகத்திற்கும் உண்மைக்காகவும் பொறுப்புக்கூறலிற்காகவும் இன்னமும் நிறையவிடயங்களை செய்யவேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



நிகழ்வின் சில காட்சிப் பதிவுகள்!















செம்மணி ஒரு இனப்படுகொலையின் அடையாளம் - கலாநிதி மரியோ அருள்தாஸ்



கடந்த மூன்று தசாப்தங்களாக உருவெடுத்து வந்த ஒரு யதார்த்தத்தை எதிர்கொள்வதற்காக நாங்கள் இங்கே கூடியிருக்கின்றோம். அது மிகவும் அவசரமானது மிகவும் கனதியானது.

இது செம்மணி மனித புதைகுழிகள் மற்றும் இலங்கையில் தொடரும் கட்டமைக்கப்பட்ட தண்டனையிலிருந்து விடுவித்தல் குறித்த யதார்த்தம். நீதிக்கான அடிப்படை அழுத்தங்களை கனடா எவ்வாறு முன்னெடுக்கலாம் என்ற அடிப்படை கேள்வி தொடர்பானது.

ஈழதமிழ் சமூகத்திற்கு வெளியே உள்ள பலருக்கு செம்மணி ஒரு தொலைதூர பகுதியாக தோன்றலாம்.

ஆனால் உலகளாவிய ரீதியில் பரந்துவாழும் மில்லியன் கணக்கான தமிழர்களுக்கும்,கனடாவை தங்கள் தாயகம் என அழைக்கும் தமிழர்களுக்கும் செம்மணி என்பது உலக வரைபடத்தில் ஒரு இடம்மாத்திரமல்ல அதற்கும் அப்பாற்றபட்டது.

செம்மணி இனப்படுகொலையின் அடையாளம், தீர்வு காணப்படாத அரசவன்முறையின் ஒரு காட்சி. இலங்கை இன்று வரை தொடர்ந்து அனுபவிக்கும் தண்டனையிலிருந்து விடுபாட்டுரிமை மீதான ஒரு குற்றப்பத்திரிகை.

மனித புதைகுழிகள் என்பது போரின் தற்செயலான எச்சங்கள் அல்ல, மாறாக அவை அரசின் நோக்கங்களின் வெளிப்பாடு.

அவை மனித உயிர்களை கொலை செய்து உண்மைகளை மண்ணிற்குள் புதைப்பதற்கான செயற்பாடுகள்.நாங்கள் இது குறித்த விழிப்புணர்வை மீண்டும் ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக இங்கே கூடியிருக்கின்றோம்.

ஏன் செம்மணி இன்று முக்கியமாக உள்ளது என்பதை புரிந்துகொள்வதற்கு நாங்கள் 30 வருடங்களுக்கு முந்தைய கதையை திரும்பி பார்க்கவேண்டும், எவ்வாறு மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன என்பதை மீண்டும் நினைத்து பார்க்கவேண்டும்.

1995இல் இலங்கை இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தை தமிழர்களின் கட்டுப்பாட்டிலிருந்து கைப்பற்றினார்கள், அவர்கள் பல இராணுவமுகாம்கள் சோதனை சாவடிகள் போன்றவற்றை அமைத்து உலகில் அதிகளவு இராணுவ மயப்படுத்தப்பட்ட பிரதேசமாக மாற்றினார்கள்.

பிராந்தியத்தின் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் காணப்பட்ட சோதனைசாவடிகளின் நோக்கம் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதாகயிருந்தாலும் அன்றைய யதார்த்தம் என்பதும் என்ன நடந்தது என்பதும் தமிழ் மக்களின் ஆன்மாவை இன்னமும் காயப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

யாழ்குடாநாட்டின் கடும் மோதல் முடிவிற்கு வந்த பின்னர் குடாநாட்டிற்கு திரும்பி வந்தவர்களில் ஒருவர் 18 வயது கிருஸாந்தி குமாரசுவாமி – அவரின் படம் இங்கே உள்ளது.

அவர் பரீட்சை எழுதிவிட்டு தனது நண்பியின் வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தார், நண்பி இராணுவவாகனம் மோதியதால் உயிரிழந்தவர்,கிருஷாந்த குமாரசுவாமி செம்மணி காவலரண் ஊடாக செல்லும்போது அதிலிருந்த படையினர் அவரை தடுத்து நிறுத்தினார்கள்,

அவரை படையினர் விசாரணைக்கு உட்படுத்துவதை அயலவர் ஒருவர் பார்த்தார். கிருஷாந்தி குமாரசுவாமியை உயிருடன் பார்த்த இறுதி தருணம் அதுதான்.

மகளை காணோம் என கவலையடைந்திருந்த கிருஷாந்தியின் அம்மாவிடம் அயலவர் தான் பார்த்ததை தெரிவித்தார் , தாயார் தனது 16 வயது மகன் பிரணவனுடன் செம்மணி காவலரண் அமைந்திருந்த பகுதிக்கு சென்றார்,அயலவரும் சென்றார், அதன் பின்னர் அவர்களை யாரும் உயிருடன் பார்க்கவில்லை.

அந்த வருடம் 1996 – யாழ்ப்பாணத்தில் நூற்றிற்கும் மேற்பட்டவர்கள் காணாமல்போனார்கள், சர்வதேச மன்னிப்புச்சபை ஒரு நாள் மாத்திரம் 39 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டார்கள்,அதன் பின்னர் எவரும் உயிருடன் திரும்பவில்லை என தெரிவிக்கின்றது.

அந்த வருடம் மாத்திரம் யாழ்ப்பாணத்தில் 700க்கும் அதிகமானவர்கள் காணாமல்போனார்கள் – யாழ்ப்பாணம் என நாங்கள் குறிப்பிடும் பகுதியின் அளவை கருத்தில்கொள்ளும்போது இது மிகப்பெரிய எண்ணிக்கை.

ஏனைய நூற்றுக்கணக்கான சம்பவங்களை போல இல்லாமல் எப்படியோ கிருஷாந்திக்கு நேர்ந்த அவலம் அந்த பயங்கரமான பிரதேசத்தினை உடைத்துக்கொண்டு சர்வதேச கவனத்தை ஈர்த்தது.

தெற்கில் மகளிர் உரிமை அமைப்புகள் போராட்டங்களில் ஈடுபட்டன, மனித உரிமை அமைப்புகளும் குரல்கொடுத்தன, முன்னர் ஒருபோதும் இல்லாத விதத்தில் செயற்பட்ட அரசாங்கம் சில படையினரை கைதுசெய்தது.

கைதுசெய்யப்பட்டவர்கள் செம்மணியில் கிருஸாந்தி தடுத்துவைக்கப்பட்ட காவலரணிற்கு அப்பால் விசாரணையாளர்களை கொண்டு சென்றனர் அங்கு அவர்கள் மனித புதைகுழிக்குள் உடல்களை கண்டுபிடித்தனர்.இதனை தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் போது கிருஸாந்திக்கும் அவரது குடும்பத்தினருக்கும் என்ன நடந்தது என்பது தெரியவந்தது.

ஒரு இராணுவீரர் கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை குறித்த விபரங்களை வெளியிட்டார், நீதிமன்றத்தில் அவர் பலர் சட்டவிரோதமாக படுகொலை செய்யப்பட்டு செம்மணியிலும் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏனைய பிரதேசங்களிலும் புதைக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

அவர் அதற்கான உத்தரவுகளை பிறப்பித்த தளபதிகளின் பெயர் விபரங்களை வெளியிட்டார்.

எட்டு படையினருக்கும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் நீதிமன்றம் தண்டனை வழங்கியது.

ஆனால் இந்த தண்டனையை இலங்கை நீதியை வழங்கதீர்மானித்துள்ளது என்பதற்கான அடையாளமாக கருதக்கூடாது .

BEHIND ME MEDIA



செம்மணி அநீதிக்காகக் குரல் கொடுக்க இவ்வளவு பேர் இங்கு திரண்டுள்ளமை நம்பிக்கையளிக்கின்றது! - கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிதா நாதன்



கனடாவின் ஒட்டாவாவில் நேற்று இடம்பெற்ற செம்மணி மனிதப் புதைகுழி குறித்த மாநாட்டில் செம்மணி அநீதிக்காகக் குரல் கொடுக்க இவ்வளவு பேர் இங்கு திரண்டுள்ளமை நம்பிக்கையளிக்கின்றது என கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிதா நாதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் என்பது – செம்மணி எனக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கமானது, குறகிய அறிவிப்பில் இவ்வளவு பேர் இங்கு திரண்டுள்ளமை எனக்கு நம்பிக்கையளிக்கின்றது.

கடந்த வருடம் நான் உரையாற்றியவேளை 240 மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, இம்முறை அந்த எண்ணிக்கை இரண்டு மடங்காகியுள்ளது, 543 ஆகியிருக்கலாம் என கருதுகின்றேன்.

அந்த மனித எச்சங்களில் குழந்தைகள் சிறுவர்கள் பெண்களின் மனித எச்சங்களும் காணப்படுகின்றன.

செம்மணி மனித புதைகுழியில் இருந்து ஆதாரங்களாக மீட்கப்பட்டவற்றில் பெரும்பாலானவை சிறுவர்களின் புத்தகபைகள் பால்போத்தல்கள் இளம்பெண்களின் வளையல்கள் போன்றவை.

இவை வெறும் பொருட்கள் மாத்திரமல்ல ஒவ்வொன்றும் ஒருவரால் நேசிக்கப்பட்டவருடயவை

செப்டம்பர் மாதம் மனித உரிமை ஆணைக்குழு இந்த மனித புதைகுழிகள் சட்டவிரோத படுகொலைகளுடன் தொடர்புபட்டவையாகயிருக்கலாம் என தெரிவித்துள்ளது.

எனினும் மனித எச்சங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இன்னமும் ஆரம்பமாகவில்லை.

1990களின் ஆரம்பம் முதல் இறுதியுத்தம் வரை காணாமல் போனவர்களின் உறவினர்கள் விடைகளை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

அவர்கள் பல தசாப்தங்களாக காத்திருக்கின்றனர்.தங்கள் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அவர்கள் அறிவதற்கு உரிமையுள்ளவர்கள்.

தொழில்நுட்ப மோசடி அவதானமாக இருங்கள்!



செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் உருவாக்கப்படும் 'டீப்ஃபேக்' (Deepfake) தொழில்நுட்ப மோசடிகள் குறித்து இலங்கை பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் உள்ள புகைப்படங்கள் மற்றும் குறுகிய குரல் பதிவுகளைப் பயன்படுத்தி, உறவினர்கள் அல்லது நண்பர்களின் குரல் மற்றும் முகப்போலிகளை (Deepfake Videos & Voice Recordings) போலிச் சித்தரிப்பாக உருவாக்குகி மோசடி செய்பவர்கள் பணத்தைக் கோருகின்றனர்.

எனவே சந்தேகத்திற்குரிய அழைப்புகள் அல்லது காணொளி அழைப்புகள் வந்தால், உடனடியாகப் பணத்தையோ அல்லது வங்கிக் கணக்கு விபரங்களையோ வழங்க வேண்டாம்.

அத்துடன், சம்பந்தப்பட்ட நபரை வேறு ஒரு நம்பகமான தொடர்பு ஊடகம் (Phone Call / Direct Contact) மூலம் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் பொலிசார் அறிவுறுத்தியுள்ளனர்.

கடவுச்சொற்கள் (Passwords) மற்றும் OTP எண்களை எவருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சைவ மக்களின் சமய மரியாதைக்கு நாட்டில் ஏற்பட்ட அவமதிப்புக்கள் - பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

இந்த நாட்டில் சைவமக்களின் சமய மரியாதைக்கு ஏற்பட்ட அவமதிப்புகளைப் பட்டியலிட்டுக்காட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இறுதிப்போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளாருக்கான நீதியும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு நாட்டையும் அரண்மனை வாழ்வையும் துறந்து ஞானம் கண்ட புத்தர் பெருமானின் சிலை தற்போது நில ஆக்கிரமிப்பின் அடையாளமாக பாவிக்கப்படுவதாகவும் தெரவித்த பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன், வெளிநாட்டு விருந்தினர்களுக்குரிய இராஜதந்திர மரியாதையை வலியுறுத்துகின்ற அதே உறுதியுடன், உள்நாட்டிலும் அனைத்து மக்களுக்கும் உரிய சமய மரியாதையையும் அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

இராஜதந்திர நடைமுறைகளையும் சமய நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி 22.10.2026இன்று பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவால் முன்வைக்கப்பட்ட சபை உத்திவைப்பு வேளையின் போதான பிரேரணையில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இராஜதந்திர நடைமுறைகளையும் சமய நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி இப்பிரேரணையை முன்வைத்த கௌரவ திலித் ஜயவீர அவர்களின் முயற்சியை வரவேற்கிறேன்.

இலங்கைக்கும் தாய்லாந்திற்கும் இடையிலான வரலாற்று உறவுகளை நாம் மதிக்கிறோம். வெளிநாட்டு உயர்மட்ட விருந்தினர் ஒருவர் சமய நிகழ்வுக்காக வருகைதந்தாலும், அவரது பதவிக்கும் வருகையின் தன்மைக்கும் உரிய இராஜதந்திர மரியாதையும் பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும்.

இவ்விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் என்ன? எங்கு குறைகள் ஏற்பட்டன என்பவை தொடர்பில் அரசாங்கம் இச்சபைக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

அதேவேளை, வெளிநாட்டு விருந்தினர்களுக்கான சமய மரியாதையை வலியுறுத்தும் இச்சபையில், உள்நாட்டில் எமது மக்களின் சமய மரியாதைக்கு ஏற்பட்ட அவமதிப்புகளையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

2019ஆம் ஆண்டில் முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நீதிமன்ற உத்தரவையும் மீறி, நூற்றுக்கணக்கான தமிழர்களின் எதிர்ப்பையும் மீறி, பொலிசார், படையினர் உள்ளிட்ட அரச இயந்திரங்கள் குவிந்து பாதுகாப்பு வழங்க, சைவ மக்களின் புனித தீர்த்தக்கேணியோரம் பௌத்த பிக்குவின் உடலம் தகனம் செய்யப்பட்டது. அப்போது எமது மக்களின் சமய உணர்வுகளுக்கு வழங்கப்பட்ட மரியாதை என்ன?

படையினர் சூழ்ந்திருக்க குருந்தூர்மலை ஆதிசிவன் ஆலயத்தில் எமது மக்கள் வழிபட்டுவந்த சூலம் காணாமல் ஆக்கப்பட்டது.

வெடுக்குநாறி மலையில் எமது சமய அடையாளங்கள் சேதப்படுத்தப்பட்டு அகற்றப்பட்டன. இவற்றுக்கான பொறுப்புக்கூறல் எங்கே!

இறுதிப்போரின் போது காணாமல் ஆக்கப்பட்ட அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளாரின் கதியும் இச்சபையில் நினைவுபடுத்துகின்றேன். அவருக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிக்கொண்டுவரப்படவில்லை. நீதி நிலைநாட்டப்படவில்லை.

சிங்கள பௌத்தர்கள் வாழாத முல்லைத்தீவு - கொக்கிளாய் பகுதியில் தனியார் காணியை ஆக்கிரமித்து விகாரை வலிந்து நிருமாணிக்கப்பட்டது. சைவ மக்கள் நிறைந்த வெட்டுவாய்க்கால் பகுதியிலும் வலிந்து விகாரை அமைக்கப்பட்டது. ஆக, இங்கு அமைக்கப்படும் விகாரைகள் வழிபடும் நோக்கத்துக்காக அன்றி, நில ஆக்கிரமிப்பு அடையாளங்களாக அமைக்கப்படுகின்றன.

நாட்டையும் அரண்மனை வாழ்வையும் துறந்து ஞானம் கண்ட புத்தர் பெருமானை, நில ஆக்கிரமிப்பின் அடையாளமாக எமது மக்கள் உணரும் நிலைக்கு கொண்டுவந்த கடந்த கால அரசியல் அணுகுமுறைகள் எவ்வளவு துயரமானவை!

இந்தத் தீவின் வருங்காலம் பல்வகைமையை மதித்துக் கொண்டாடுவதாக அமையவேண்டும். இன, மத நல்லிணக்கம் நடைமுறையிலும் வெளிப்படவேண்டும். வெளிநாட்டு விருந்தினர்களுக்குரிய இராஜதந்திர மரியாதையை வலியுறுத்துகின்ற அதே உறுதியுடன், உள்நாட்டிலும் அனைத்து மக்களுக்கும் உரிய சமய மரியாதையையும் அரசாங்கம் உறுதிப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தி நிறைவுசெய்கிறேன் என்றார்.

BEHIND ME MEDIA

தியாக தீபம் திலீபன் சிலை விவகாரம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் கருத்து

தியாகதீபம் திலீபன் உருவச்சிலையை நிறுவியது தொடர்பில் அரசியல்வாதிகள் உட்பட 14 பேரை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது திலீபனின் சிலைக்கான நிதியை வழங்கியது,அதனை உருவாக்கியது, ஊக்குவித்தது மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது தொடர்பில் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

பொலிஸார் தமது விசாரணைகளின் மூலம் திலீபன் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் என்பதை உறுதி செய்துள்ளனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தரமற்ற நிலக்கரி காரணமாக மின்வெட்டா?



நுரைச்சோலை மின் நிலையத்திற்குத் தரமற்ற நிலக்கரி பயன்படுத்தப்பட்டதன் காரணமாக மின்வெட்டைச் சந்திக்க நேர்ந்ததாக வெளியாகும் குற்றச்சாட்டுகள் உண்மையானவையல்ல என அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

மின் நிலையத்தின் 1 ஆம் இலக்க மின் உற்பத்தி இயந்திரம் பராமரிப்புப் பணிகளுக்காக கடந்த ஜூலை மாதம் முதல் செப்டம்பர் 4 ஆம் திகதி வரை மூடப்பட்டிருந்ததாகவும், செப்டம்பர் 4 ஆம் திகதி முதல் இதற்காக புதிதாகக் கொண்டுவரப்பட்ட நிலக்கரியே பயன்படுத்தப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்காரணமாக நுரைச்சோலை மின் நிலையம் காரணமாக மின்வெட்டு ஏற்பட்டதாக வெளியாகும் செய்திகளை மறுத்த அமைச்சர், இந்த மின் உற்பத்தி இயந்திரம் பழுதடைந்தமை தொடர்பிலும் உள்ளக விசாரணை ஒன்று நடைபெற்று வருவதாகக் கூறினார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ,

"நுரைச்சோலை மின் நிலையத்தின் 1 ஆம் இலக்க மின் உற்பத்தி இயந்திரம் பராமரிப்புப் பணிகளுக்காக 61 நாட்கள் மூடப்பட்டிருந்தது. அதாவது ஜூலை 30 முதல் ஒகஸ்ட் மாதத்திலும், செப்டம்பர் மாதத்திலும் பராமரிப்புப் பணிகளுக்காக மூடப்பட்டிருந்த ஒன்றே இதுவாகும். அடுத்ததாக, இந்த செப்டம்பர் 4 ஆம் திகதி முதல் இவற்றில் புதிய நிலக்கரியே பயன்படுத்தப்படுகிறது. எனவே அந்தச் குற்றச்சாட்டுகள் எவற்றுக்கும் இதனுடன் தொடர்பில்லை. ஏனெனில் நுரைச்சோலை மின் நிலையத்தில் மின் உற்பத்தி இயந்திரங்கள் செயலிழப்பது என்பது அவ்வப்போது நிகழ்வதாகும்.

இப்போது அது இந்த நிலக்கரியின் தரம் தொடர்பில் இணைக்கப்படுகிறது. அத்தகைய பிரச்சினை எதுவும் இல்லை, ஏனெனில் இந்த மின் உற்பத்தி இயந்திரம் இரண்டு மாதங்களாக பராமரிப்புப் பணிகள் காரணமாக மூடப்பட்டிருந்த ஒன்றாகும். அதன் பின்னர் செப்டம்பர் 4 ஆம் திகதி முதல் புதிய கப்பல்களில் வரும் நிலக்கரியே பயன்படுத்தப்படுகிறது. நாளைக்குப் பின்னர் இது இயல்பு நிலைக்குத் திரும்பும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். அத்துடன் இந்த முதலாவது மின் உற்பத்தி இயந்திரம் எவ்வாறு பழுதடைந்தது என்பது குறித்து தற்போது உள்ளக விசாரணை ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது." என்றார்.



3,000 கி.மீ. தொலைவிலிருந்து ரோபோ மூலம் அறுவைச் சிகிச்சை



கொழும்பு கிங்ஸ் மருத்துவமனையில் இரண்டு நோயாளிகளுக்கு, 3,000 கிலோமீற்றருக்கும் அதிகமான தொலைவில் இந்தியாவின் புதுடெல்லியில் இருந்துகொண்டு, மருத்துவ நிபுணர்கள் ரோபோ தொழில்நுட்பத்தின் மூலம் அறுவைச் சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம், இலங்கையில் முதன்முறையாக இரண்டு ரோபோக்கள் மூலம் அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பேராசிரியர் ஸ்ரீநாத் சந்திரசேகர மற்றும் பேராசிரியர் பவந்த கமகே ஆகியோர், அதிவேகத் தொடர்பு வலையமைப்புடன் இணைக்கப்பட்ட ரோபோ அறுவைச் சிகிச்சைத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தச் சிகிச்சைகளை மேற்கொண்டனர்.

நோயாளிகளுக்கு அருகில் மருத்துவர்கள்

அறுவைச் சிகிச்சைகள் நடைபெற்றபோது, கொழும்பு மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அருகில் சிறப்பு அறுவைச் சிகிச்சை மருத்துவர்களும் தயார்நிலையில் இருந்தனர். அவசரத் தேவை ஏற்பட்டால், உடனடியாகத் தலையிடும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



இரண்டு சிகிச்சைகளும் தொலைவிலிருந்து வெற்றிகரமாக நிறைவடைந்ததுடன், அருகிலிருந்த மருத்துவர்கள் தலையிட வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

இந்நிலையில், இச்சாதனை கொழும்பு கிங்ஸ் மருத்துவமனைக்கு ஒரு மைல்கல் மட்டுமல்லாமல், சிறப்பு அறுவைச் சிகிச்சைப் பராமரிப்புக்குத் தூரம் ஒரு தடையாக இருக்க வேண்டியதில்லை என்பதையும் நிரூபித்துள்ளது.

ஒவ்வொரு இலங்கையரும் தாங்கள் எங்கிருந்தாலும் எதிர்கால மேம்பட்ட அறுவைச் சிகிச்சையின் பலன்களைப் பெற்றுக்கொள்ளும் சாத்தியக்கூறுக்கு ஒரு மைல்கல்லாக, இந்தத் தொழில்நுட்பம் இலங்கையின் மருத்துவத் துறையில் ஒரு முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது.

Internet இல்லாவிட்டாலும் Message போகும்?



உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களால் பயன்படுத்தப்பட்டு வரும் முன்னணிச் செயலியான வாட்ஸ்அப் , தனது பயனர்களின் வசதிக்காகத் தொடர்ந்து பல்வேறு புதிய அம்சங்களை அறிமுகம் செய்து வருகிறது. அந்த வகையில், பயனர்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்துக் காத்திருந்த 'மெசேஜ் செடுலிங்' (Message Scheduling) வசதியை மெட்டா நிறுவனம் தற்போது சோதனை அடிப்படையில் கொண்டு வந்துள்ளது.

இதன் மூலம் வாட்ஸ்அப்பில் இனி குறுஞ்செய்திகள் மற்றும் புகைப்படங்களை நாம் விரும்பும் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்கூட்டியே செடூல் செய்து வைத்துக் கொள்ள முடியும்.

புதிய வசதியின் முக்கிய சிறப்பம்சங்கள்:

10 நிமிடங்கள் முதல் 2 வாரங்கள் வரை: பரபரப்பான வேலைப் பளுவிற்கு மத்தியில் முக்கியமான வாழ்த்துகளையோ அல்லது அவசியமான தகவல் களையோ அனுப்ப மறந்துவிடுவோமே என்ற கவலை இனி தேவையில்லை. இந்த அம்சத்தின் மூலம் குறைந்தபட்சம் 10 நிமிடங்கள் முதல் அதிகபட்சமாக 2 வாரங்களுக்கு முன்பே மெசேஜ்களைத் துல்லியமாகச் செடூல் செய்து வைக்கலாம்.

நாம் செடூல் செய்துவிட்ட குறிப்பிட்ட நேரத்தில் நமது செல்போனில் இணைய இணைப்பு இல்லாவிட்டாலும் கூட, மெசேஜ்கள் தானாகவே சம்பந்தப்பட்ட நபர்களுக்குச் சென்று சேர்ந்துவிடும்.

தனிநபர் உரையாடல்கள் மற்றும் குழுக்களிலும் இந்தச் செடூல் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் மெட்டா நிறுவனம் இதனை வடிவமைத்துள்ளது.

ரத்து செய்யும் வசதி: ஒருவேளை செடூல் செய்த மெசேஜை அனுப்ப வேண்டாம் என நினைத்தால், நிர்ணயிக்கப்பட்ட நேரம் வருவதற்குள் அதை எப்போது வேண்டுமானாலும் ரத்து செய்து அளிக்கவும் முடியும்.

WABetaInfo வெளியிட்டுள்ள தகவலின்படி, ஆண்ட்ராய்டு பயனர்களுக்கான வாட்ஸ்அப் பீட்டா பதிப்பில் இந்த அம்சம் தற்போது சோதனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, மிக விரைவில் அனைத்துப் பயனர்களின் பயன்பாட்டிற்கும் இந்த அம்சம் அதிகாரப்பூர்வமாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Plug இல் உள்ள 3-வது Pin இவ்வளவு பெரிய வேலையை செய்யுதா?



வீடுகளில் உள்ள மின்சாதனங்களில் மனித உயிரைக் காப்பாற்றும் எர்த் பின் ஏன் நீளமாகவும் தடிமனாகவும் இருக்கிறது மற்றும் அதன் வியக்க வைக்கும் அறிவியல் ரகசியங்கள் இதோ.

இது ஏதோ சாதாரணமாக டிசைனுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு விஷயம் கிடையாது. மனிதர்களின் உயிரைக் காப்பாற்றும் ஒரு மிக முக்கியமான அறிவியல் தொழில்நுட்பம் இதன் பின்னால் ஆழமாக மறைந்துள்ளது. இந்த மேல்பகுதியைத் தரை இணைப்பு என்று சொல்வார்கள். இந்த பின் மற்றவற்றை விட நீளமாக இருப்பதற்கு மிக முக்கியமான ஒரு காரணம் உள்ளது. நாம் பிளக்கை சொருகும் போது ீயளந மற்றும் நேரவசயட உள்ளே போவதற்கு முன்பாகவே இந்த நீளமான பகுதி முன்கூட்டியே உள்ளே சென்றுவிடும்.

இந்த ஊசி தடிமனாக இருப்பதற்கும் ஒரு பலமான அறிவியல் காரணம் இருக்கிறது. இதைத் தவறுதலாக வேறு சிறிய துவாரங்களில் நுழைத்துவிடக் கூடாது என்பதற்காகவே இப்படி பிரத்யேகமாக வடிவமைத்துள்ளார்கள். மேலும் இயற்பியல் விதிப்படி ஒரு கம்பியின் தடிமன் அதிகமாக இருக்கும் பட்சத்தில் அதன் மின்தடை மிகவும் குறைவாக இருக்கும். மனித உடலை விட இந்த எர்த் பின் மிகவும் குறைவான மின்தடையைக் கொண்டுள்ளதால் மின்கசிவு ஏற்பட்டால் மின்சாரம் நேரடியாகப் பூமிக்குள் உடனடியாக பாதுகாப்பாகப் பாய்ந்துவிடும்.

மின்கசிவு காரணமாக ஏற்படும் ஷார்ட் சர்க்யூட் வீடுகளில் பெரும் தீ விபத்துகளை உருவாக்குகிறது. எனவே இரும்புப் பாகங்கள் கொண்ட எந்த ஒரு பெரிய மின்சாதனத்தையும் தரை இணைப்பு இல்லாமல் பயன்படுத்தவே கூடாது. பலரும் தங்களது பிளக்கில் உள்ள மூன்றாவது பின்னை வசதிக்காக நீக்கிவிட்டு பயன்படுத்துவார்கள்.

பிரதமர் ஹரிணி வெளியிட்ட முக்கிய அறிவிப்பு!



உயர்ந்த தகுதிகளும் திறமைகளும் கொண்ட மனிதவளத்தை கல்வி அமைப்பில் இணைத்துக் கொள்வதற்கான முறையான வேலைத்திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கடவலவெவ மகா வித்தியாலய மாணவர்களுக்காக புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடி கட்டடத்தை கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான எட்டு வகுப்பறைகளை உள்ளடக்கிய இந்த கட்டடத்தின் நிர்மாணப் பணிகளுக்காக அரசாங்கம் சுமார் 55 மில்லியன் ரூபாயை முதலீடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், இந்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வரும் கல்விச் சீர்திருத்தங்களின் முதன்மை நோக்கம், அறிவும் திறன்களும் நற்பண்புகளும் நிறைந்த முழுமையான குடிமக்களை நாட்டிற்கு வழங்குவதாகும் எனக் குறிப்பிட்டார்.

குழந்தைகளை தேர்வுகளுக்கு மட்டும் தயார்படுத்துவதோடு அரசாங்கத்தின் இலக்கு முடிந்துவிடுவதில்லை எனச் சுட்டிக்காட்டிய அவர், சமுதாயப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்கும் தங்களது அறிவை நடைமுறைரீதியாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு தலைமுறையை உருவாக்குவதே இதன் நோக்கமாகும் என்றும் வலியுறுத்தினார்.

இதற்காக புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துதல், ஆசிரியர் பயிற்சிகள் மற்றும் பாடசாலை உள்கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், 2027ஆம் ஆண்டில் கல்வி உருமாற்றத்திற்காக கணிசமான முதலீட்டை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

மேலும், பல ஆண்டுகளாக தாமதமடைந்திருந்த ஆசிரியர் மற்றும் அதிபர் நியமனங்கள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதாகவும், கல்வி முறையை மேலும் வலுப்படுத்த தகுதி மற்றும் தனிநபர் திறன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாணவர்களின் கல்வி தொடர்பில் தற்போது பெற்றோர் சுமக்கும் பொறுப்பின் ஒரு பகுதியை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்திய பிரதமர், மாணவர்களின் திறமைகளை வளர்த்து, நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்வதற்குத் தேவையான வாய்ப்புகளை வழங்குவதே இந்த கல்விச் சீர்திருத்தங்களின் மற்றொரு நோக்கமாகும் என்றும் தெரிவித்தார்.

BEHIND ME MEDIA

இலங்கையில் தொடர்ந்து வரும் புத்தகத் தடுப்பு: முக்கிய நடவடிக்கை!



இலங்கையில் தொடர்ந்து வரும் புத்தகத் தடுப்புத் தொடர்பாக ஜனாதிபதியினதும் அமைச்சினதும் திணைக்களத்தினதும் ஊடகங்களினதும் தலையீட்டைக் கோரி இந்தக் கடிதம் எழுத்தாளர்களின் சார்பில் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

இதில் தங்கள் பெயர்களை இணைக்க விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை Kirishanth300@gmail.com என்ற மின்னஞ் சலுக்கோ அல்லது 0775889397 எனும் வட்ஸ் அப் இலக்கத்திற்கோ, கொமெண்ட் பெட்டியிலோ தெரிவியுங்கள்.

கனடா வெளிவிவகார அதிகாரிகளிடம் செம்மணி அநீதிக்கு விசாரணை வேண்டுமென சிறீதரன் எம்.பி. கோரிக்கை!

கனடாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையிலான குழுவினர், கனேடிய வெளிவிவகாரத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகளுடன் தலைநகர் ஒட்டாவாவில் விசேட சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர்.



கனேடிய வெளிவிவகாரத் திணைக்களத்தின் இந்தோ - பசிபிக் பிராந்தியத்துக்கான உதவிப் பிரதி அமைச்சர் வெல்டன் எப், இலங்கைத் தொடர்புகளுக்கான பிரதிப் பணிப்பாளர் டெய்ட்ரே யூகிச் மற்றும் சிரேஷ்ட அதிகாரி அரியேல் சொபானி ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

இச்சந்திப்பின் போது, இலங்கையில் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் மனித உரிமை மீறல்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், நில ஆக்கிரமிப்பு மற்றும் நீதி மறுக்கப்படுவது தொடர்பில் கனேடிய அதிகாரிகளுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. குறிப்பாக, செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளில் இதுவரை 583 மனித என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய சிறீதரன் எம்.பி., சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன் கூடிய சுயாதீனமான தடயவியல் விசாரணை நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அத்துடன், தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விவகாரம் குறித்தும் கனேடிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. முல்லைத்தீவு - கேப்பாப்பிலவில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள 171 ஏக்கர் பூர்வீகக் காணிகளையும், யாழ். வலிகாமம் வடக்கில் 2,117 ஏக்கர் காணிகளையும் உடனடியாக உரிய உரிமையாளர்களிடம் மீள ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தையிட்டி காணிப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமைகள் மறுக்கப்படுவதுடன், நல்லூரில் தியாக தீபம் திலீபனின் நினைவுச் சிலை அகற்றப்பட்ட விவகாரத்தையும் சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டினார். போர் முடிவடைந்து ஆண்டுகள் பல கடந்தும் தமிழ் மக்கள் தமது பூர்வீக நிலங்களில் மீள்குடியேற முடியாத சூழல் தொடர்வதையும், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் கேள்விகள் தீர்க்கப்படாமல் உள்ளதையும் எடுத்துரைத்த தமிழ் அரசுக் கட்சியின் குழுவினர், சர்வதேச மனித உரிமைப் பொறிமுறைகள் ஊடாக கனடா தனது இராஜதந்திரப் பங்களிப்பைத் தொடர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

இச்சந்திப்பின் நிறைவில், ஈழத்தமிழர்களுக்கு எதிராக கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட செம்மணிப் படுகொலை, கேப்பாப்பிலவு மற்றும் வலிகாமம் வடக்கு காணி விடுவிப்புகள் தொடர்பான விரிவான ஆவணத் தொகுப்புகள் கனேடிய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கான வாய்மூல சமர்ப்பணம் நிறைவு

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ‘பயங்கரவாதத்திலிருந்து அரசினைப் பாதுகாப்பதற்கான சட்டமூலத்தை’ சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான வாய்மொழி சமர்ப்பணங்கள் நேற்று உயர்நீதிமன்றத்தில் நிறைவடைந்தன.

இந்த வழக்குகளுக்குரிய எழுத்துப்பூர்வ சமர்ப்பணங்கள் ஏதேனும் இருப்பின், அவற்றை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தாக்கல் செய்யுமாறு பிரதம நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேன தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

அதன் பின்னர், இந்தச் சட்டமூலத்தின் அரசியலமைப்புத் தன்மை குறித்த உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானம் பாராளுமன்றத்தின் சபாநாயகருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்பேசாரா ஜஸ்மின் இராணுவ புலனாய்வாளரால் கண்காணிக்கப்பட்டாரா?

இராணுவபுலனாய்வு பிரிவை சேர்ந்த ஒருவர் உயிர்த்தஞாயிறு தாக்குதலிற்கு முன்னரே சாராஜஸ்மினை கண்காணித்தார் என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தீலீப பீரிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகள் முன்னெடுக்கப பட்டவேளை நீதிமன்றத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது

இராணுவபுலனாய்வு பிரிவை சேர்ந்த ராஜன் என்பவர் இலங்கை இராணுவத்தை சேர்ந்த கோப்ரல் சுரங்க என்பவருக்கு தகவல் ஒன்றை வழங்கினார்.

அதன்பின்னர் உயிர்த்தஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட இன்சாவ் என்பவரின் உறவினரின் வீட்டை கண்காணிக்குமாறு சுரங்க ராஜனை கேட்டுக்கொண்டார்.

ராஜன் மிகவும் திறமையாக அந்த வீட்டிற்குள் சென்றார்.அந்த வீட்டிற்கு யார் வருகின்றனர் என்பதை கண்காணித்தார்.
அவர் அங்கிருந்தவேளை முஸ்லீம் பெண்கள் போல ஆடையணிந்த பெண்ணொருவரையும் ஆண் ஒருவரையும் பார்த்தார்.ராஜன் அவர்களுடன் கதைத்தார்.

அந்த பெண் தமிழில் கதைத்தார் ஆனால் அந்த பெண்பயன்படுத்திய மொழி அந்த பகுதிக்கு உரியதல்ல மட்டக்களப்பை சேர்ந்தவர் போல உரையாடுகின்றார் என ராஜன் சுரங்கவிற்கு தெரியப்படுத்தினார்.

ராஜன் அந்த பெண்ணின் தோற்றத்தையும் அவதானித்துவைத்துக்கொண்டார்.

உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னர் சாராஜஸ்மினின் புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியானவேளை ராஜன் அந்த பெண்தான் இவர் என்பதை சுரங்கவிடம் தெரிவித்தார். ஆனால் சுரங்க ராஜனிடம் இனி இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தவேண்டாம் மறந்துவிடுமாறு கேட்டுக்கொண்டார்.



இதன் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் கிடைத்த தகவல்களை மறைப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றமை தெளிவாக தெரிகின்றது இது சுரேஸ் சாலேயின் அனுமதியுடனேயே இடம்பெற்றுள்ளது என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

விஜயா நகைமாடத்தின்
‘Makka 2026'
























Toronto தங்க நகைமாளிகையான Vijaya Jewellers விஜயா நகைமாடத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு V J Productions வழங்கிய “Makka 2026” இன் மாபெரும் இசை நிகழ்வு பற்றிய Meet & Greet மற்றும் “Makka 2026” கொண்டாட்டம்!













BEHIND ME MEDIA

27-10-26

கார்த்திகை விரதம்



கார்த்திகை விரதம்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 கார்த்திக 05
கிருத்திகை அதிகாலை நீராடி முருகனை வழிபட்டு ஒருவேளை உண்டு ஏற்கும் உன்னத கார்த்திகை விரதம்.
பிரதமை கா.08.38 வரை, பின்பு துவிதியை - பரணி மா.06.11 வரை, பின்பு கார்த்திகை.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 10 | OCT - TUE செவ்வாய் | ஜமாஅத்துல் அவ்வல் 15 | தேய்பிறை 300 / 065

தேய். பிரதமை 06.30 (கா. 08.38) பரணி 30.22 (மா. 06.11) தியாஜ் 58.48
சித்த யோகம். **கார்த்திகை விரதம்**. திருநெல்வேலி ஸ்ரீகாந்திமதியம்மன்
காலை வெள்ளி சப்பரத்திலும் இரவு கமல வாகனத்திலும் திருவீதியுலா.
திருப்போரூர் ஸ்ரீமுருகப் பெருமான் பால் அபிஷேகம். பெரிய நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	03.00	12.00	09.00
மாலை: 4.45-5.45	7.30-8.30	04.30	01.30	10.30
சூலம் : வடக்கு பரிகாரம் : பால்	துலா லக்கனம் இருப்பு நா. 3 வி. 30		சந்திராஷ்டமம் சித்திரை சுவாதி	
கரணம்: 7.30-9	சூரிய உதயம் : 6.02			

சனி: ரா: 3 சிம்-வியா, 27 மகரா, 27 கடகே | செ | வி கே | பூ சு | கீழ் ↓ | திதி துவிதியை

கேளாமல் கேட்டது கடன், நாடாமல் கேட்டது உறவு

ராசிபலன்
மேஷம் - இன்பம்
ரிஷபம் - களிப்பு
மிதுனம் - சோதனை
கடகம் - சுகம்
சிம்மம் - சலனம்
கன்னி - ஆதாயம்
துலாம் - மறதி
விருச்சி - சிக்கல்
தனுசு - வெற்றி
மகரம் - துணிவு
கும்பம் - லாபம்
மீனம் - ஆக்கம்

28-10-26



வாஸ்து நாள்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 கார்த்திக 06
வாஸ்து பகவான் கண் விழித்திருக்கும் காலம் - பூமி பூஜை செய்வது அதிர்ஷ்டம் அமைதி அருளும்.
துவிதியை கா.06.48 வரை, பின்பு திரிதியை - கார்த்திகை மா.04.52 வரை, பின்பு ரோகிணி.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 11 | OCT - WED புதன் | ஜமாஅத்துல் அவ்வல் 16 | தேய்பிறை 301 / 064

தேய். துவிதியை 01.54 (கா. 06.48) திரிதியை 54.53 (கா. 03.59) கார்த்திகை
27.06 (மா. 04.52) சேஷம் 02.48 அமிர்த 27.06 மேல் சித்த யோகம்.
சந்ரோதய கௌரீ விரதம். **வாஸ்து நாள்.** காலை 07.44 முதல் 08.20
வரை வாஸ்து செய்ய நன்று. சிறிய நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 9.15-10.15	10.45-11.45	12.00	10.30	07.30
மாலை: 4.45-5.45	6.30-7.30	01.30	12.00	09.00
சூலம் : வடக்கு பரிகாரம் : பால்	துலா லக்கனம் இருப்பு நா. 3 வி. 20		சந்திராஷ்டமம் சுவாதி விசாகம்	
கரணம்: 6-7.30	சூரிய உதயம் : 6.02			

சனி: ரா: 3 சிம்-வியா, 27 மகரா, 27 கடகே | செ | வி கே | பூ சு | கீழ் ↓ | திதி திரிதியை

நாழும் தெரிந்தவனுக்கு நலிலது கெட்டதும் தெரியும்

ராசிபலன்
மேஷம் - நிறைவு
ரிஷபம் - பெருமை
மிதுனம் - பொறுமை
கடகம் - வெற்றி
சிம்மம் - கவலை
கன்னி - சோதனை
துலாம் - ஊக்கம்
விருச்சி - மகிழ்ச்சி
தனுசு - நலம்
மகரம் - தடங்கல்
கும்பம் - செலவு
மீனம் - சுகம்

29-10-26



சங்கடஹர சதுர்த்தி

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 கார்த்திக 07
விநாயகரை வழிபட்டு விரதம் இருந்து, தடைகள் துன்பங்கள் நீங்கி, காரியம் கைகூடும் சங்கடஹர சதுர்த்தி.
திரிதியை கா.03.59 வரை, பின்பு சதுர்த்தி - ரோகிணி மா.03.22 வரை, பின்பு மிருகசீருஷம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 12 | OCT - THU வியாழன் | ஜமாஅத்துல் அவ்வல் 17 | தேய்பிறை 302 / 063

தேய். சதுர்த்தி 50.35 (கா. 02.16) ரோகிணி 23.21 (மா. 03.22) தியாஜ் 04.38,
36.25 மரண யோகம். **சங்கடஹர சதுர்த்தி.** திருநெல்வேலி ஸ்ரீகாந்திமதி
அம்மன் காலை காமதேனு வாகனத்திலும் மாலை விருஷப வாகனத்திலும்
திருவீதியுலா. கோவில்பட்டி ஸ்ரீசெண்பகவல்லி அம்மன் புறப்பாடு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை 10.45-11.45	----------	01.30	09.00	06.00
மாலை: 12.15-1.15	6.30-7.30	03.00	10.30	07.30
சூலம் : தெற்கு பரிகாரம் : தைலம்	துலா லக்கனம் இருப்பு நா. 3 வி. 10		சந்திராஷ்டமம் விசாகம் அனுஷம்	
கரணம்: 3-4.30	சூரிய உதயம் : 6.02			

சனி: ரா: 3 சிம்-வியா, 27 மகரா, 27 கடகே | செ | வி கே | பூ சு | மேல் ↑ | திதி சதுர்த்தி

பெருமையும் சிறுமையும் வாயால் வரும்

ராசிபலன்
மேஷம் - போட்டி
ரிஷபம் - சிரமம்
மிதுனம் - உற்சாகம்
கடகம் - சிக்கல்
சிம்மம் - முயற்சி
கன்னி - செலவு
துலாம் - ஆக்கம்
விருச்சி - இன்பம்
தனுசு - பாசம்
மகரம் - மறதி
கும்பம் - லாபம்
மீனம் - அமைதி

30-10-2026



பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி



சுபமுகூர்த்தம்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 கார்த்திக 08
திருமணம், புதுமனை, புதிய துவக்கம் எதுவும் செய்ய உகந்த சுபயோக சுபதினம் இன்று.
சதுர்த்தி கா.02.16 வரை, பஞ்சமி மா.11.55 வரை, பின்பு ஷஷ்டி - மிருகசீருஷம் மா.01.45, பின்பு திருவாதிரை.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 13 | OCT - FRI வெள்ளி | ஜமாஅத்துல் அவ்வல் 18 | தேய்பிறை 303 / 062

தேய். பஞ்சமி 44.39 (மா. 11.55) மிருகசீருஷம் 19.16 (மா. 01.45) தியாஜ்
38.52 சித்த யோகம். **சுபமுகூர்த்தம். பசும்பொன் முத்துராமலிங்கத்**
தேவர் ஜெயந்தி. வீரவநல்லூர் ஸ்ரீமரகதாம்பிகை, தென்காசி உலகம்மை
இத்தலங்களில் திருவீதியுலா.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 9.15-10.15	12.15-1.15	10.30	07.30	03.00
மாலை: 4.45-5.45	6.30-7.30	12.00	09.00	04.30
சூலம் : மேற்கு பரிகாரம் : வெல்லம்	துலா லக்கனம் இருப்பு நா. 3 வி. 00		சந்திராஷ்டமம் அனுஷம் கேட்டை	
கரணம்: 1.30-3	சூரிய உதயம் : 6.03			

சனி: ரா: 3 சிம்-வியா, 27 மகரா, 27 கடகே | செ | வி கே | பூ சு | சம ↔ | திதி பஞ்சமி

அள்ளி கொடுத்தால் கம்மா, அளந்து கொடுத்தால் கடன்

ராசிபலன்
மேஷம் - பகை
ரிஷபம் - நட்பு
மிதுனம் - செலவு
கடகம் - உற்சாகம்
சிம்மம் - நன்மை
கன்னி - விருத்தி
துலாம் - உழைப்பு
விருச்சி - நற்செயல்
தனுசு - அமைதி
மகரம் - ஆதாயம்
கும்பம் - பாராட்டு
மீனம் - ஆக்கம்

31-10-26



தேய்பிறை ஷஷ்டி விரதம்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 கார்த்திக 09
முருகப் பெருமானின் அருளும், செல்வம், கல்வி, ஆரோக்கியம் தரும் தேய்பிறை ஷஷ்டி விரதம் இன்று.
ஷஷ்டி மா.09.33 வரை, பின்பு ஸப்தமி - திருவாதிரை மா.12.07 வரை, பின்பு புனர்பூசம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 14 | OCT - SAT சனி | ஜமாஅத்துல் அவ்வல் 19 | தேய்பிறை 304 / 061

தேய். ஷஷ்டி 38.46 (மா. 09.33) திருவாதிரை 15.10 (மா.12.07) தியாஜ் 43.15
சித்த யோகம். **தேய்பிறை ஷஷ்டி விரதம்.** திருநெல்வேலி ஸ்ரீகாந்திமதி
அம்மன் அன்ன வாகனத்தில் திருவீதியுலா. குச்சனூர் ஸ்ரீசனி பகவானுக்கு
அபிஷேக ஆராதனை செய்ய நன்று. கெரூட தரிசனம் நன்று.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	09.00	06.00	01.30
மாலை: 4.45-5.45	9.30-10.30	10.30	07.30	03.00
சூலம் : கிழக்கு பரிகாரம் : தயிர்	துலா லக்கனம் இருப்பு நா. 2 வி. 50		சந்திராஷ்டமம் கேட்டை மூலம்	
கரணம்: 12-1.30	சூரிய உதயம் : 6.03			

சனி: ரா: 3 சிம்-வியா, 27 மகரா, 27 கடகே | செ | வி கே | பூ சு | மேல் ↑ | திதி ஷஷ்டி

எல்லாருக்கும் நன்பன் யாருக்கும் நன்பன் அல்ல

ராசிபலன்
மேஷம் - பேராசை
ரிஷபம் - நிறைவு
மிதுனம் - சுகம்
கடகம் - எதிர்ப்பு
சிம்மம் - சலனம்
கன்னி - குழப்பம்
துலாம் - சோதனை
விருச்சி - பரிவு
தனுசு - நட்பு
மகரம் - வரவு
கும்பம் - ஆதாயம்
மீனம் - போட்டி

1-11-26



சுபமுகூர்த்தம்

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 10
புனித வாழ்வு வாழ்ந்த கிறித்துவர் அனைவரையும் நினைவுகூரும் புனிதர் அனைவர் பெருவிழா இன்று.
ஸப்தமி மா.07.19 வரை, பின்பு அஷ்டமி - புனர்பூசம் கா.10.32 வரை, பின்பு பூசம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 15 | NOV - SUN ஞாயிறு | ஜமாஅத்துல் அவ்வல் 20 | தேய்பிறை 305 / 060

தேய். ஸப்தமி 33.10 (மா. 07.19) புனர்பூசம் 11.13 (கா. 10.32) தியாஜ் 30.02
சித்த யோகம். அலப்பியம். **சுபமுகூர்த்தம். ஆல்செய்ன்ட்ஸ் டே.**
கோவில்பட்டி ஸ்ரீசெண்பகவல்லி அம்மன் திருவீதியுலா. நாட்டரசன்கோட்டை
ஸ்ரீகண்ணுடையநாயகி அபிஷேக ஆராதனை செய்ய நன்று.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 7.45-8.45	10.45-11.45	04.30	03.00	12.00
மாலை: 3.15-4.15	1.30-2.30	06.00	04.30	01.30
சூலம் : மேற்கு பரிகாரம் : வெல்லம்	துலா லக்கனம் இருப்பு நா. 2 வி. 40		சந்திராஷ்டமம் மூலம்	
கரணம்: 10.30-12	சூரிய உதயம் : 6.03			

சனி: ரா: 3 சிம்-வியா, 27 மகரா, 27 கடகே | செ | வி கே | பூ சு | சம ↔ | திதி ஸப்தமி

பெருமையும் சிறுமையும் வாயால் வரும்

ராசிபலன்
மேஷம் - நற்செயல்
ரிஷபம் - உற்சாகம்
மிதுனம் - ஓய்வு
கடகம் - சாதனை
சிம்மம் - நட்பு
கன்னி - மகிழ்ச்சி
துலாம் - விவேகம்
விருச்சி - வெற்றி
தனுசு - குழப்பம்
மகரம் - சலனம்
கும்பம் - நிறைவு
மீனம் - மேன்மை

2-11-2026

அஷ்டமி

தட்சிணாயனம். ஷரத் ருது. குளிர் காலம். துலாம் மாதம். கிருஷ்ண பட்சம். சக வருடம் 1948 கார்த்திக 11
புனிதராய் வாழ்ந்த கிறித்துவர்கள் ஆன்மாவினை நினைவுகூரும் அனைத்து ஆன்மாக்கள் தினம் இன்று.
அஷ்டமி மா.05.13 வரை, பின்பு நவமி - பூசம் கா.09.04 வரை, பின்பு ஆயில்யம்.

ஸ்ரீ பராபவ ஐப்பசி 16 | NOV - MON திங்கள் | ஜமாஅத்துல் அவ்வல் 21 | தேய்பிறை 306 / 059

தேய். அஷ்டமி 27.55 (மா.05.13) பூசம் 07.33 (கா.09.04) தியாஜ் 37.55 சித்த.
ஆல்சோல்ஸ்டே. தென்காசி உலகம்மை, தூத்துக்குடி ஸ்ரீபாகம்பிரியாள்
பவனி. திருநெல்வேலி ஸ்ரீகாந்திமதி அம்மன் காலை வெள்ளி சப்பரத்தில்
கோலாட்ட அலங்காரம், இரவு தங்கக்கிளி வாகன பவனி. சிறிய நகசு.

நல்லநேரம்	கௌ.ந.நெ.	இராகு	குளிகை	எமகண்டம்
காலை: 6.15-7.15	9.15-10.15	07.30	01.30	10.30
மாலை: 4.45-5.45	7.30-8.30	09.00	03.00	12.00
சூலம் : கிழக்கு பரிகாரம் : தயிர்	துலா லக்கனம் இருப்பு நா. 2 வி. 30		சந்திராஷ்டமம் பூராடம்	
கரணம்: 9-10.30	சூரிய உதயம் : 6.03			

சனி: ரா: 3 சிம்-வியா, 27 மகரா, 27 கடகே | செ | வி கே | பூ சு | கீழ் ↓ | திதி அஷ்டமி

அள்ளி கொடுத்ததால் கம்மா, அளந்து கொடுத்தால் கடன்

ராசிபலன்
மேஷம் - போட்டி
ரிஷபம் - பொறுமை
மிதுனம் - நலம்
கடகம் - லாபம்
சிம்மம் - இரக்கம்
கன்னி - சிந்தனை
துலாம் - மறதி
விருச்சி - சாதனை
தனுசு - நட்பு
மகரம் - வெற்றி
கும்பம் - அசதி
மீனம் - புகழ்

BEHIND ME MEDIA

CANADA
HUMANITY
SINCE 2024
BEHIND ME
FOUNDATION

மனிதநேயம் - Behind me foundation

வாழ்வாதாரத்தைத் தேடும் கரங்களை பலப்படுத்தும் நோக்கோடு கடந்த 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது **மனிதநேயம் - Behind me foundation** நிறுவனம் தனிநபர்களுக்கும் பேரிடர்களால் நிலைகுலையும் மக்களுக்குமான சேவைகளைத் தொடர்ச்சியாக ஆற்றிவருகின்றது.

உதவிகள் தேவைப்படுவோர் **Behind me foundation** ஊடாக எம்மைத் தொடர்புகொள்ளும் பட்சத்தில் உங்களுக்கான தேவைகளை நாம் எமது ஊடகங்களின் வாயிலாக அறிவித்து தனி நபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக உங்களுக்கான அனுசரணைகளைப் பெற்றுத் தருவோம்.



எமது சேவைகள்

- உதவிகளை பெற்றவர்கள் - வழங்கியவர்கள் பணம் மற்றும் பொருள் விபரங்களின் வெளிப்படைத்தன்மை பேணப்படும்.
- உதவி தேவைப்படும் மக்கள் மற்றும் காரணங்கள்
- உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள்
- உதவிகள் உரியவர்களைச் சென்றடைந்த உறுதிப்படுத்தல்கள்

எமது **Behind me International Media** ஊடக வலையமைப்பில் பகிரப்படும்

தொடர்புக்கு

இலங்கை	-	+94 76239 0159
இந்தியா	-	+ 91 917632 3079
கனடா	-	+ 437 688 3493
மின்னஞ்சல்	-	info@behindmemedia.com

BEHIND ME
FOUNDATION

உதவுவது நம் கடமை
மாற்றம் கொண்டுவருவது நம் குறிக்கோள்

நாம் இணைவோம்... பலரை உயர்வோம்...



புதிய பயங்கரவாத தடைச்சட்டம் குறித்து அர்ச்சுனா எம்.பி அதிருப்தி!



தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய பயங்கரவாத தடைச்சட்டம் பொதுமக்கள் என வரும் பொழுது வேறு விதமாகவும், அரசியல் தலைவர்கள் என வரும் பொழுது வேறு விதமாகவும் செயற்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் உரையாற்றிய அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அகிம்சை வழியில் போராடி உயிரிழந்த தியாக தீபம் திலீபன் சிலை அகற்றல் விவகாரம் கடந்த சில வாரங்களாக தமிழர்கள் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

அதற்கான வழக்கும் யாழ். நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையில், சாட்சியங்கள் யாரும் வழக்கில் முன்னிலையாகவில்லை என நீதிமன்றம் வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளது. யாழ். மாநகர சபையின் முதல்வர் மதிவதனி, சிலையை வைப்பதற்கு அனுமதி கோரிய கஜேந்திரன் பொன்னம்பலம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஆகியோர் சட்டத்திற்கு முன்னர் இதுவரை நிறுத்தப்படவில்லை.

சட்டம் அனைவருக்கும் சமம் எனக் கூறும் அரசாங்கம், இந்த விடயத்தைக் கண்டுகொள்ளாமல் விட்டதற்கான காரணம் என்ன? அதேபோன்று, பொதுமக்கள் என வரும் பொழுது அரசாங்கம் வேறு விதமாகவும், அரசியல் தலைவர்கள் என வரும் பொழுது வேறு விதமாகவும் செயற்படுவதாக எனக்குத் தோன்றுகின்றது என்றார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் நல்லூரில் தியாக தீபம் திலீபனின் சிலை நிறுவப்பட்ட சம்பவம் தொடர்பில் அரசியல்வாதிகள் உள்ளிட்ட 14 பேரிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நல்லூரில் திலீபனின் சிலையை நிறுவுவதற்கான நிதியுதவி வழங்குதல், சிலையை நிர்மாணித்தல், அதனை விளம்பரப்படுத்துதல் மற்றும் சிலை திறப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் தொடர்புடையதாகக் கூறப்படும் 14 பேரிடமே இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், திலீபன் தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினராக இருந்தவர் என்பது விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், நல்லூரில் நிறுவப்பட்டிருந்த திலீபனின் சிலையைப் பொலிஸார் கைப்பற்றி, வழக்குப் பொருளாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய மேலதிக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.



BEHIND ME MEDIA

பெண்ணின் வாழ்க்கைப் பயணம் ஏன் கடினமானது? - பிள்ளைகளுக்கு சிறுவயதிலிருந்தே கற்றுக் கொடுங்கள்!



பிற பெண்களைப் பற்றி அவளிடம் குறைகூறாதீர்கள் மற்றைய பெண்கள் பற்றிய கிசு கிசுக்களை பேசுவதை நிறுத்திவிட்டு ஒரு பெண் தன்னுடைய வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எவ்வாறான கஷ்டங்களை அனுபவிக்கிறாள் ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பயணம் எவ்வளவு கடினமானது என பெண்ணின் கடின உழைப்பைப் பாராட்டுங்கள்...





மற்றைய பெண்கள் பற்றி குறைகூறாதீர்கள்

மற்றப் பெண்ணைப் பற்றி, அவளிடம் குறைகூறாதீர்கள் உங்கள் வீட்டில், யாரும் அப்படிக் குறைகூறுவதற்குக் கூட இடமளிக்காதீர்கள். மற்றைய பெண்கள் பற்றிய கிசு கிசுகளை பேசுவதை நிறுத்திவிட்டு, ஒரு பெண், தன்னுடைய வாழ்க்கையில் முன்னேறுவதற்கு, எவ்வாறான கஷ்டங்களை அனுபவிக்கிறாள், ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பயணம் எவ்வளவு கடினமானது என, பெண்ணின் கடின உழைப்பைப் பாராட்டுங்கள்.

அவளையும் பேச விடுங்கள்

இக்காலத்துக் குழந்தைகள், பல ஊடகங்களைப் பார்த்து, பல தகவல்களைப் பெற்றுக்கொள்கின்றனர். அவளுடன் சேர்ந்து தொலைக்காட்சி பார்த்து, சில முக்கியமான சம்பவங்கள் குறித்து, அவள் என்ன நினைக்கிறாள் என்பதை, சாதாரணமாகக் கலந்துரையாடுங்கள். அவளுடைய மனதில் உள்ளது என்ன என்பதை வெளிப்படுத்த விடுங்கள். அவள் எதை நம்புகிறாளோ, அதற்காகப் போராடுவதற்கு, அவளுக்கு ஊக்கமளியுங்கள்.

நீங்கள் அவளை நேசிக்கின்றீர்கள் என்பதை அவள் அறியவேண்டும்

நீங்கள், அவள் மீது அன்பு கொண்டுள்ளீர்கள் என்பதை, அவள் அறிந்திருக்கவேண்டியது கட்டாயமாகும். அவளை நம்புங்கள், இது, அவளது சுய நம்பிக்கையையே மேலும் அதிகமாகும்.

விமர்சனங்களின் முக்கியத்துவம்

சரியானது மற்றும் தவறானவற்றுக்கு இடையேயான வேறுபாட்டைக் கருத்தில் கொள்ளும் விதமான விமர்சனங்களும் முக்கியமானதாகும். அவர்களது ஒவ்வொரு சாதனைகளையும் நீங்கள் பாராட்டுவதைப் போன்றே, அவர்கள் தவறு செய்யும் போது, அவற்றை திருத்தி, எது சரியானது என்பதையும் தவறானதைச் செய்தால் என்னவாகும் என்பதையும் விளங்கப்படுத்துங்கள். அவளுக்கு, நல்ல நடத்தைகளை உள்ளீர்ப்பது என்பது, மிகவும் முக்கியமானதாகும்.

இந்த உலகை, பெண் குழந்தைகளும் ஆள வேண்டும் என்பதே, பல பெற்றோரின் கனவாக அமைகிறது.

உலகை எதிர்கொள்வதற்காக, சிறு வயதிலிருந்தே, பெண்கள் குழந்தைகளும் தயார்படுத்தப்படல் வேண்டும். ஒருவரில் தங்கியிருக்காது, தீர்மானிக்கும் திறன் இயல்பாகவே ஏற்படுத்திவிடல் வேண்டும்.

இதனை எத்தனை பெற்றோர் செய்கின்றனர். அல்லது எத்தனை பெற்றோர், ஒரு பெண் குழந்தையை ஆண் குழந்தைக்கு சமனாக வளர்க்கின்றனர்?

இந்தச் சமூகமானது, பாலின சார்பு கொண்டதாகக் காணப்படுகின்றது என்பது, நாம் அறிந்ததே.

இத்தகைய ஒரு சமூகத்தில், ஒரு பெண், சுயமரியாதையுடன் வாழ்வதற்கான பணியை முன்னெடுப்பது கடினமே. என்றாலும், இச்சமூகத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், இந்த சமுதாயத்தில் சுய மரியாதையுடன் வாழவேண்டும் என்ற முக்கியமான பொறுப்பு, பெற்றோர்களிடத்திலேயே உண்டு.

பெற்றோர்களாகிய உங்களது நடவடிக்கைகளும் வார்த்தைகளும், பெண் குழந்தைகளின் எதிர்காலத்தில், ஒரு வெற்றிப்பாதையை இட்டுச் செல்லவேண்டும்.

முன்மாதிரியாக இருங்கள்

பெண் பிள்ளைகளின் உடல் தொடர்பான அதிக கவனம் செலுத்துவதில், தாய்மாருக்கு அதிக பங்குண்டு. அவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருங்கள். அவர்களுக்கு முன்னால், உங்கள் உடல் தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதையோ அல்லது உங்கள் உடல் தொடர்பாக அதிகம் கேள்வியெழுப்புவதையோ தவிருங்கள். உங்கள் குழந்தை, உங்களைப் பார்த்தே விடயங்களைக் கற்றுக்கொள்வர்.

நவநாகரிகத்தைப் பின்பற்ற விடுங்கள்

அவளுக்கு மனது அவளுக்கு என்ன சொல்கிறதோ, அதைப் பின்பற்றி, அவளுக்குள் இருக்கும் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு வழிவிடுங்கள். விளையாட்டுத்துறையோ, நாடகக்கலையோ, இசையோ எதுவாக இருந்தாலும் புதிய செயற்பாடுகளை முயன்று பார்ப்பதற்கு வழிசெய்யுங்கள். புதிய விடயங்களை முயல்வதன் மூலம், அவளது தன்னம்பிக்கை வளர்ச்சியடையும்.

தோற்றத்துக்கு முக்கியத்துவம் அளிக்காதீர்கள்

அவளது தார்மீகத்தை அதிகரிக்க, அவளைப் பாராட்ட வேண்டும் ஆனால், ‘‘நீ மிகவும் அழகாக இருக்கிறாய்’’ என்று பாராட்டுவதைக் குறையுங்கள். அவளிடமுள்ள நேர்மை, இரக்கம் போன்ற குணங்களைப் பாராட்டுங்கள். அதேபோன்று, உங்கள் உள் தோற்றத்திலும் நீங்கள் கவனமாக இருத்தல் அவசியம். அவள், எப்போதும் தாயைப் பார்த்தே பழக ஆரம்பிப்பாள்.

அவளது முயற்சியைப் புகழுங்கள்

அவளுடைய இலக்கை அடைவதற்காக, அவள் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் பாராட்டுங்கள். ஒரு விடயத்தில் அவள் தோல்வியடைந்துவிட்டாலும், அதை ஏற்றுக்கொண்டு, அவள் மீண்டும் முயன்று வெற்றி யடைவதற்கான ஊக்கத்தை வழங்குங்கள்.

கனடாவின் ஒரு பகுதியாக நீடிக்க Alberta வாக்காளர்கள் அமோக ஆதரவு

Alberta மக்கள் கனடாவிலேயே தொடர்வதற்கு அமோகமாக வாக்களித்துள்ளனர். மேலும் ஒரு பிணைப்புள்ள வாக்கெடுப்பு (Binding referendum) மூலம் பிரிந்து செல்லும் முன்மொழிவை அவர்கள் நிராகரித்துள்ளனர்.

பெரும்பாலான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், மாகாணத்தில் உள்ள மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமான வாக்காளர்கள் சுதந்திரத்திற்காக அழுத்தம் கொடுப்பதற்குப் பதிலாக, நாட்டின் ஒரு பகுதியாகவே நீடிக்கத் தேர்ந்தெடுத்துள்ளதாக 'Elections Alberta' தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை உரையாற்றிய பிரதமர் Mark Carney "இது கனடாவிற்கு ஒரு சிறந்த முடிவாகும். Alberta மக்கள் ஒற்றுமையைத் தேர்ந்தெடுத்துள்ளது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது" என்று கூறினார்.

பொதுமக்களின் மனுவுக்கு பதிலளிக்கும் விதமாக, இந்த வாக்கெடுப்பு இந்த ஆண்டின் தொடக்கத்தில் மாகாணத் தலைவர் Danielle Smith நடத்தப்பட்டது. ளுஅவை தனித்து பிரிந்து செல்லும் முயற்சியை எதிர்த்தபோதிலும், வாக்களிப்பதற்கான பொதுமக்களின் விருப்பத்தை மறுக்க முடியாது என்று கூறினார்.

ஆரம்பக்கட்ட முடிவுகளை வரவேற்ற அவர்: "ஒருங்கிணைந்த கனடாவில் ஒரு வலுவான Alberta விற்காக மக்கள் வாக்களித்துள்ளனர்" என்று கருத்துத் தெரிவித்தார். மாகாணத்தின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து Alberta மக்களுக்கு செவ்வாய்க்கிழமைக்கு பின்னர் உரையற்றவுள்ளதாக ஸ்மித் கூறினார்.

கனடாவிலிருந்து சுதந்திரம் பெற வேண்டும் என்பதற்கு ஆதரவாகப் பேசிய பல பிரிவினை வாதிகள், எண்ணெய் வளம் மிக்க இந்த மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சியை, ழுவவயறயவில் உள்ள கனடாவின் மத்திய அரசின் சுற்றுச்சூழல் கொள்கைகள் முடக்கி யுள்ளதாகக் கூறினர்.

ஆனால் இந்த பிரிவினையை எதிர்த்தவர்கள் - பிரதமர் Carney உட்பட - அமெரிக்காவுடனான வர்த்தக போர் உள்ளிட்ட வெளிப்புற அழுத்தங்களை எதிர்கொள்ள கனடா ஒருமித்த கருத்துடன் செயல்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர்.

ழுவவயறயவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குச் சென்ற கார்னி செய்தியாளர்களிடம் கூறுகையில், அன்றைய தினம் காலையில் Smith திடம் பேசியதாகவும், "கூட்டுறவு கூட்டாட்சி உணர்வுடன், குடியேற்றம் மற்றும் இதர பொதுவான முன்னுரிமைப் பிரச்சினைகள் குறித்து முன்னோக்கிச் செல்வது பற்றி" விவாதித்ததாகவும் கூறினார்.

நுனஅழனெழெ இல் உள்ள பிரிவினைவாத ஆதரவாளர்களின் கூட்டத்தில், திட்டமிடப்பட்ட முடிவுகளைக் கண்டதும் அங்கு இருந்தவர்களின் உற்சாகமான பேச்சு சட்டென்று அமைதியானது.

கனடிய ஒளிபரப்பு நிறுவனமான CBC மற்றும் பிற ஊடகங்களால் இரவோடு இரவாக தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட பிறகு, அங்கிருந்தவர்களின் மனநிலை கவலையடைந்தது. பிபிசி கலந்துகொண்ட அந்த சந்திப்பு விரைவாக முடிவுக்கு வந்ததுடன், மக்கள் வீட்டிற்குச் சென்றனர்.

இருப்பினும், பிரிவினைவாத தலைவர்களில் ஒருவரான Jeffrey Rath, "எங்கள் இயக்கம் நிற்கப் போவதில்லை, நாங்கள் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வோம்" என்று சவாலாகக் கூறினார்.

கால்கரியைச் சேர்ந்த வழக்கறிஞரான ராத், பிபிசி வேர்ல்ட் சர்வீஸின் நியூஸ்டே நிகழ்ச்சியில் பேசுகையில், திங்கள்கிழமை நடந்த வாக்கெடுப்பை "முதல் படியாக" தான் பார்ப்பதாகவும், இது இயக்கத்திற்கு சில "மதிப்புமிக்க பாடங்களை" கற்றுக்கொடுத்துள்ளதாகவும் கூறினார்.

தங்களுக்கு வேண்டிய முடிவு கிடைக்கும் வரை சுதந்திரம் குறித்த வாக்கெடுப்புகளை தொடர்ந்து நடத்த அவரது இயக்கம் அழுத்தம் கொடுக்குமா என்று கேட்டதற்கு, "ஏன் கூடாது?" என்று பதிலளித்தார். மேலும் "கணிதமும் பொருளாதாரமும்" தன் பக்க நியாயத்திற்கே சாதகமாக உள்ளதாக வாதிட்டார்.

சுமார் 300,000 கையெழுத்துக்களைச் சேகரித்து, பிரிவினை குறித்து பிணைப்புள்ள வாக்கெடுப்பைக் கோரிய அடிமட்டக் குழுவின் கோரிக்கைக்குப் பதிலளிக்கும் விதமாகவே Smith இந்த வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்தார்.

அந்த மனுவில் பழங்குடியின முதன்மை தேசங்கள் மக்களிடம் ஆலோசனை நடத்தத் தவறியதாகக் கூறி ஒரு நீதிபதியால் முடக்கப்பட்டது - இருப்பினும், Smith வாக்கெடுப்பை நடத்த முடிவு செய்தார்.

பிரிவினையை எதிர்த்த மற்றொரு குழு 400,000 க்கும் மேற்பட்ட மக்களிடம் கையெழுத்து சேகரித்தது.

வாக்காளர்கள் முதல் விருப்பத்தைத் தேர்ந்தெடுத்தால், தான் ஆட்சியில் இருக்கும் வரை பிரிவினை குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படாது என்று வாக்களிப்பிற்கு முன்பே ஸ்மித் கூறியிருந்தார்.

முடிவுகள் எதிராக வந்தபோதிலும், Alberta இறையாண்மை சுற்றியுள்ள விவாதங்கள் இன்னும் முடியவில்லை.



தங்கள் லட்சியத்திற்கு அதிக அனுதாபம் காட்டும் ஒரு தலைவரை நிறுவும் நம்பிக்கையில், ஐக்கிய பழமைவாதக் கட்சிக்குள்ளேயே ஸ்மித்தை அதிகாரத்திலிருந்து வெளியேற்ற பிரிவினைவாத தலைவர்கள் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். மற்றொரு பிரிவினைவாத தலைவரான Mitch Sylvestre, வாக்குப்பதிவு நாளன்று பிபிசியிடம் பேசுகையில், தனது தரப்பு தோற்றால் சுதந்திரத்திற்கான ஆசையைக் கட்டுப்படுத்த "நிறைய வேலைகள் செய்யப்பட வேண்டும்" என்று கூறினார்.

கனடா முன்னரும் தனது ஒற்றுமைக்கான சவால்களை எதிர்நோக்கி யுள்ளது. Quebec மாகாணம் 1980 மற்றும் 1995 ஆகிய ஆண்டுகளில் சுதந்திரம் தொடர்பான இரண்டு வாக்கெடுப்புகளை நடத்தியது. இரண்டும் தோல்வியடைந்தன, ஆனால் கியூபெக் சுதந்திர அச்சுறுத்தலைப் பயன்படுத்தி கனடாவின் மத்திய அரசின் மீது குறிப்பிடத்தக்க அரசியல் செல்வாக்கைப் பெற்றதாக ஆல்பர்ட்டா பிரிவினைவாதிகள் நம்புகின்றனர்.

வாக்கெடுப்பு கேள்விக்கான பதில்கள் முதலில் எண்ணப்பட்டாலும், திங்கள்கிழமை வாக்குச்சீட்டில் மேலும் ஒன்பது பிணைப்பற்ற கேள்விகள் இருந்தன. அவற்றில் ஐந்து கேள்விகள் குடியேற்றம் தொடர்பாகவும், மற்ற நான்கு கேள்விகள் கனடிய அரசியலமைப்பிலும் கவனம் செலுத்தின. குடியேற்ற அளவுகள் மீதான கட்டுப்பாட்டை மாகாணம் அதிகரிப்பதற்கான திட்டங்கள் உட்பட பெரும்பாலானவை வெற்றிபெறும் என்று ஆரம்பகால முடிவுகள் தெரிவிக்கின்றன.

ஒக்டோபர் 21ம் திகதி யாழ்.மருத்துவமனையில் நிகழ்ந்தது என்ன?



யாழ்ப்பாணத்தில் படுகொலை தமிழ் ஈழத்திற்கு எதிரான ராஜீவ்காந்தியின் அழுக்கு நிறைந்த போர் என்ற கட்டுரையில் யாழ் மருத்துவமனை படுகொலை குறித்து குறிப்பிடப்பட்டுள்ள பகுதி(1988 அயசஊ-ூ)

ஒக்டோபர் 21ம் திகதி யாழ்ப்பாணம் மருத்துவமனையில் நிகழ்ந்தது இதுதான்.

இந்திய இராணுவத்தின் விசேட படைப்பிரிவான பிளக்கட்டின் படைப்பிரிவொன்று யாழ்ப்பாணம் மருத்துவமனைக்குள் புகுந்து கண்மூடித்தனமான துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட்டது.

பலநோயாளிகள் அவர்கள் படுத்திருந்த கட்டில்களிலேயே கொல்லப்பட்டனர் பல மருத்துவ ஊழியர்களும் கொல்லப்பட்டனர்.

தங்கள் சீருடையால் இலகுவாக அடையாளம் காணப்படக்கூடியவர்களாகயிருந்த அந்த விசேட படைப்பிரிவினர் மருத்துவமனையில் இருந்த 64 பேரையும் எக்ஸ்-ரே அறைக்குள் செல்லுமாறு மிரட்டினார்கள்,அதன் பின்னர் கைக்குண்டு தாக்குதல்களை மேற்கொண்டனர் பின்னர் துப்பாக்கி பிரயோகத்திலும் ஈடுபட்டனர்.மூன்று மருத்துவர்கள்,ஆறுமருத்துவ தாதிமார் ஒரு தலைமை மருத்துவதாதி உட்பட பலர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களுக்குள் மறைந்திருந்தவர்கள் மாத்திரமே உயிர் தப்பமுடிந்தது.

இந்த வெறியாட்டத்தை நேரில் பார்த்தவர் சிவகுருநாதன் – உயிர்தப்பிய சிலரில் ஒருவர் அவர் தான் நேரில் பார்த்ததை தொழிலாளர் பார்வை நிருபரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

□அன்று எனது மனைவி அனுமதிக்கப்பட்டிருந்த 8வது வோர்ட்டில் நான் இருந்தேன்,இந்திய அமைதிப்படையினர் மருத்துவமனையின் பின்புறத்திலிருந்து கண்மூடித்தனமாக துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டபடி உள்ளேநுழைந்தனர்.

சிலஊழியர்கள் எக்ஸ்- ரே அறையை நோக்கி ஓடினார்கள் நானும் எனது மனைவியும் அவர்களை பின்தொடர்ந்து அங்கு சென்றோம்,எக்ஸ்-ரே அறைக்குள் முதலில் சென்றவர்களில் நானும் ஒருவன் , பின்னர் ஏனையவர்களும் வந்தார்கள்,அறைநிரம்பிவிட்டது நாங்கள் சுவரோடு சுவராக மிகவும் இருந்தோம், பின்னர் தாக்குதலை மேற்கொண்டவர்கள் ஒரு குழுவினரை விரட்டிக்கொண்டு எக்ஸ்- ரே அறைக்குள் நுழைந்தனர்,அனைவரையும் உள்ளே தள்ளியவர்கள் கைக்குண்டுகளை வீசினார்கள்,துப்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட்டார்கள்,அங்கிருந்தவர்கள் அலறிக்கொண்டு ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர்.

துப்பாக்கி சூட்டு சத்தங்கள் அந்த இடத்தையே உலுக்கினன, அதைத்தொடர்ந்து இயந்திரதுப்பாக்கிகளின் சத்தம்கேட்டது,காலில் ஒரு கடுமையான வலியை நான் உணர்ந்தேன், நான் கீழே விழுந்தேன், மற்றவர்கள் என்மீது விழுந்துகொண்டிருந்தனர்.சிறிது நேரத்தில் எலலாம் அமைதியானது, எனக்கு அருகில் கிடந்த மனைவியை பார்க்க தவழ்ந்து சென்றேன், நான் அவளை தூக்கியபோது அவள் வலியால் முனகிக்கொண்டே கீழே விழுந்தாள்.

நான் அங்கிருந்து தவழ்ந்து சென்று உயிரை பிடித்துக்கொண்டு வெளியேறி நல்லூர் சென்றேன், நான் எனது மனைவியை பார்ப்பதற்காகவே அன்று மருத்துவமனைக்கு சென்றிருந்தேன்.

ஒக்டோபர் பத்தாம் திகதி உரும்பிராயில் இந்திய இராணுவத்தினரின் தாக்குதலில் எனது மனைவி காயமடைந்தார் இந்திய இராணுவத்தினரின் எறிகணை தாக்குதலில் இருந்து தப்ப முயன்றவேளை நான் எனது ஐந்து பிள்ளைகளையும் இழந்தேன் நாங்கள் வீதியை கடக்க முயன்றவேளை அவர்கள் கொல்லப்பட்டனர் ஆறு பேர் கொல்லப்பட்டனர். எனது மூத்த மகளுக்கு 15 வயது .

இந்த சம்பவத்தின் பின்னர் இந்திய இராணுவத்தினர் மருத்துவமனை தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதாக அறிவித்தனர்.

படுகொலை இடம்பெற்றவேளை மருத்துவமனையில் பணியில் இருக்காத மருத்துவர் குழந்தைகள் நல நிபுணர் மருத்துவர் சிவபாதசுந்தரம் மருநாள் காலை மிகவும் மனவேதனையுடன் மருத்துவமனைக்கு சென்றார்,அங்கு நடந்துசென்றுகொண்டிருந்தவேளை அவரையும் சுட்டுக்கொன்றனர். என சிவகுருநாதன் தெரிவித்தார்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் முக்கிய இலக்காக மருத்துவமனைகள் காணப்பட்டன,தமிழர் தேசதின் முதுகெலும்பை முறிப்பதற்கான ஒரு தந்திரோபாயமாக அவர்கள் அதனை கருதினார்கள்.

தெல்லிப்பளை மானிப்பாய் இணுவில் மூளாய் மருத்துவமனைகளும் இலக்குவைக்கப்பட்டன,சில பணியாளர்கள் கொல்லப்பட்டனர் அவை தங்கள் சேவைகளை கைவிடப்படவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன.

BEHIND ME MEDIA

கடற்கரைப் பகுதியில் 475 kg க்கும் அதிகமான ஐஸ் மற்றும் ஹெரோயின்!

மாத்தறை, தலல்ல, நாவோட்டுன்ன கடல் மற்றும் கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, 475 கிலோ கிராமுக்கும் அதிகமான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் தொகையைக் கைப்பற்றியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குக் கிடைத்த நம்பகரமான தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட கூட்டு நடவடிக்கையின்போது, நாவோட்டுன்ன கடற்கரையில் இருந்த போதைப்பொருள் என சந்தேகிக்கப்படும் 10 சாக்குப்பைகளும், 11 பயணப் பைகளும் ஒரு டிங்கு படகும் கைப்பற்றப்பட்டன.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரின் நிபுணத்துவ உதவியுடன் இப்போதைப்பொருள் தொகை தொடர்பில் மேற் கொள் ளப் பட்ட மேலதிக பரிசோதனையில், அத்தொகுதியில் 200 கிலோ கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளும், 275 கிலோ கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப்பொருளும் உள்ளமை உறுதிப படுத்தப்பட்டது.

குறித்த போதைப்பொருள் தொகையும் டிங்கு படகும் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தால் மனித உரிமைகளுக்கு கடும் பாதிப்பு

AMNESTY INTERNATIONAL

அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ள 'பயங்கரவாதத்திலிருந்து அரசினைப் பாதுகாப்பதற் கான சட்டமூலம்' மூலமாக மனித உரிமைகள் கடுமையாக மீறப்படுவதற்கும் உரிமைகள் சவாலுக்குள்ளாவதற்கும் கடுமையான அச்சுறுத்தல் காணப்படுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, முன்மொழியப்பட்டுள்ள புதிய சட்டத்தின் மூலம் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் சமூகத்திற்குள் மீண்டும் உறுதிப்படுத்தப்படுவதற்கான பாரிய அபாயம் தோன்றியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் இறுதியில் வெளியிடப்பட்ட ஆரம்ப வடிவத்துடன் ஒப்பிடும்போது சில திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், நீண்ட காலமாக அடக்குமுறையாகப் பயன்படுத்தப்பட்ட பயங்கர வாதத் தடைச் சட்டத்திற்கு (PTA) பதிலாக அறிமுகப் படுத்தப்படவுள்ள இந்தச் சட்டமூலமும் தொடர்ந்தும் மிகவிரிவான மற்றும் தெளிவற்ற பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணங்களைக் கொண்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்தைக் விமர்சிப்பவர்கள், சர்ச்சைக்குரிய கருத்துக் களைத் தெரிவிப்பவர்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிராக அதிகாரிகளால் அவ்வப்போது ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட இவ்வாறான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் திருத்துவது குறித்துக் தீவிரக் கவனமும் பரிசீலனையும் செலுத்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய சட்டமூலத்தின் ஊடாக நடைபெற வேண்டியது கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களிலிருந்து விலகுவதுதானேயன்றி, அதிகாரிகளுக்கு அடக்குமுறைக்காக மேலும் புதிய கருவிகளை வழங்குவதல்ல எனவும் அந்த அமைப்பு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன் பயங்கரவாதம் தொடர்பில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகுபவர்களை ஓராண்டு வரை தடுப்புக் காவலில் வைப்பதற்கும், வழக்கு விசாரணையைத் தொடங்குவதற்கு முன்னர் மேலும் ஓராண்டு காலம் தடுப்புக் காவலில் வைப்பதற்கும் இந்தச் சட்டம் அனுமதி வழங்குவதாகவும் அந்த அமைப்பு கூறுகிறது. இதற்கமைய வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்னர் கூட ஒரு நபரை இரண்டு ஆண்டுகள் தடுத்து வைத்திருக்க முடியும் என்பதோடு, இது மனித உரிமைகளையும் நியாயமான வழக்கு விசாரணைக்கான உரிமையையும் கடுமையாக மீறும் செயலாகும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது.


BEHIND ME MEDIA
BEHIND ME MEDIA
Now in JAFFNA
NEW OFFICE • NEW OPPORTUNITIES
SAME BIG VISION
யாழ்ப்பாணத்தில்
உங்கள் திறமையை
வெளிப்படுத்த
ஒரு புதிய வாய்ப்பு!
யாழ்ப்பாணம்
JAFFNA
Behind Me International Media
நிறுவனத்தின் புதிய Jaffna Office
தற்போது திறக்கப்பட்டுள்ளது!
219, Kandy Road, Jaffna – A9 Road
Join Our Team
STRATEGY
BRAND
GROWTH
Administration Officer
Marketing Executive
Video Editors
Video Jockeys – Presenters
WE'RE LOOKING FOR
Administration Officer & Marketing Executive
Relevant work experience
Strong English communication skills
Professional & hardworking attitude
IF YOU ARE A
Video Editor or Video Jockey / Presenter
Passionate about media and content creation
Ready to showcase your talent
Eager to grow in the media industry
This is your chance!
GROW YOUR CAREER
BE PART OF A CREATIVE TEAM
MAKE AN IMPACT THROUGH MEDIA
Media
Marketing
Digital Content
Your Future Starts Here!
APPLY NOW!
Send your Resume / CV to
info@behindmemedia.com
LET'S CREATE BIGGER STORIES TOGETHER!
FROM JAFFNA TO A BIGGER TOMORROW





பல்கேரியா பகுதியில் பூமிக்கடியில் கிடைத்த 1500 வருட பொக்கிஷம்...



ஐரோப்பிய நாடான பல்கேரியா பகுதியில் நடைபெற்ற அகழாய்வு பணிகள் வரலாற்று ஆய்வாளர்களை தற்போது பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. அங்குள்ள ஒரு மிக பழமையான இடத்தில் சுமார் 1500 ஆண்டுகள் முந்தைய அபூர்வமான தடயங்கள் பத்திரமாக கண்டறியப்பட்டுள்ளன. இந்த மாபெரும் கண்டுபிடிப்பு அங்கு அந்த காலத்தில் வாழ்ந்த பண்டைய மக்களின் மதம் கலாச்சாரம் மற்றும் விசித்திரமான வழிபாட்டு முறைகள் பற்றிய பல புதிய சுவாரஸ்யமான தகவல்களை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

பாலக் டெரே (Balak Dere) என்ற இடத்தில் இவைய்லோ கனேவ் (Ivaylo Kanev) தலைமையிலான ஒரு மிகப்பெரிய வரலாற்று ஆய்வுக்குழுவினர் சமீபத்தில் தங்களின் அகழாய்வு பணிகளை மிக தீவிரமாக மேற்கொண்டனர். அப்போது மண்ணுக்கு அடியில் பளிங்கு கல்லால் மிக நேர்த்தியாக செதுக்கப்பட்ட ஒரு பழங்கால சிற்பம் மிகவும் பாதுகாப்பான நிலையில் கண்டெடுக்கப்பட்டது. அந்த வரலாற்று சிறப்புமிக்க அரிய கல்லில் இயற்கை மற்றும் அபரிமிதமான வளமைக்கான தெய்வமான சிபெல் (Cybele) உருவம் மிக அழகாக செதுக்கப்பட்டுள்ளது.

அந்த முக்கிய தெய்வத்துடன் இணைந்து நீர் மற்றும் அடர்ந்த காடுகளை பாதுகாக்கும் 3 நிம்ப்ஸ் (Nymphs) தேவதைகளின் உருவங்களும் அதில் காணப்படுகின்றன. பொதுவாக சிபெல் தெய்வத்துடன் இந்த தேவதைகள் இணைந்து காணப்படும் அமைப்பு உலக வரலாற்றில் மிகவும் அரிதானது. இந்த அசாதாரணமான சிலைகளின் கலவை அங்கு வாழ்ந்த மக்கள் இயற்கை வளங்களை எந்த அளவிற்கு மிகவும் புனிதமாக மதித்து தீவிரமாக வழிபட்டு வந்தார்கள் என்பதை நமக்கு தெளிவாக உணர்த்துகிறது.

ஆர்டா ஆற்றின் மிக அருகில் இந்த பிரம்மாண்டமான ஆன்மீக தலம் அழகாக அமைந்துள்ளது. சுமார் 49 அடி நீளம் கொண்ட அந்த பிரம்மாண்ட கட்டிடத்தில் 3 வெவ்வேறு தனித்தனி அறைகள் இருந்ததற்கான உறுதியான சான்றுகள் ஆய்வாளர்களுக்கு கிடைத்துள்ளன. அதில் ஒரு அறையில் மிக நேர்த்தியான பலிபீடம் அமைக்கப்பட்டிருந்தது. மற்ற அறைகள் புனிதமான சடங்குகள் செய்வதற்கும் மக்களின் காணிக்கைகளை பாதுகாப்பாக வைப்பதற்கும் பிரத்தியேகமாக அப்போது பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் அந்த பழமையான கட்டிடத்தை சுற்றி ஒரு சிறிய நீர்வழிப்பாதை மிகவும் நுட்பமாக அமைக்கப்பட்டிருந்ததை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். நீருடன் நேரடியாக தொடர்புடைய தேவதைகள் அங்கு வைத்து தொடர்ந்து வழிபடப்பட்டதால் இந்த சிறப்பான மற்றும் பிரத்யேக ஏற்பாடு அங்கு செய்யப்பட்டிருக்கலாம் என உறுதியாக நம்பப்படுகிறது. இதுபோன்ற கட்டமைப்பு அந்த காலகட்டத்து மக்களின் மிக சிறந்த மற்றும் ஆச்சரியமூட்டும் கட்டிடக்கலை மற்றும் ஆன்மீக சிந்தனைக்கு ஒரு தலைசிறந்த எடுத்துக்காட்டாக இன்று வரை கம்பீரமாக திகழ்கிறது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க தலம் கிபி 3 ஆம் நூற்றாண்டு முதல் மக்களின் தொடர் பயன்பாட்டில் இருந்துள்ளது. பின்னர் ரோமானிய பேரரசில் பல புதிய மத மாற்றங்கள் வேகமாக நடைபெற்ற ஒரு குழப்பமான காலகட்டத்தில் இந்த வழிபாட்டு தலம் ஒரு மோசமான தீ விபத்தில் சிக்கி முழுமையாக அழிந்துள்ளது. சரியாக கிபி 5 ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் இந்த மாபெரும் துயர சம்பவம் அங்கு அரங்கேறியுள்ளது.

இந்த கோரமான தீ விபத்து தற்செயலாக நடந்ததா அல்லது மத ரீதியான மோதல்களின் காரணமாக திட்டமிட்டு கொடூரமாக நடத்தப்பட்டதா என்பதற்கான தெளிவான ஆதாரங்கள் இன்னும் ஆய்வாளர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனாலும் அந்த கொடிய தீயில் எரிந்த சுவடுகள் இன்றும் அந்த பழமையான சுவர்களில் மிக ஆழமாக பதிந்துள்ளன. இது வரலாற்றின் ஒரு இருண்ட மற்றும் மர்மமான பக்கத்தை நமக்கு எடுத்துரைக்கும் ஒரு மௌன சாட்சியாகவே காலங்களை தாண்டி இன்றும் அமைதியாக நிற்கிறது.

இந்த புகழ்வாய்ந்த பாலக் டெரே பகுதியில் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பல கட்டங்களாக மிக தீவிரமான அகழாய்வு பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள நிலப்பரப்பில் 3 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையிலான பல காலகட்டங்களை சேர்ந்த விசித்திரமான தொல்பொருட்கள் தொடர்ந்து கிடைத்து கொண்டே இருக்கின்றன. அங்கு வாழ்ந்த சமூகங்களின் வாழ்க்கை முறை பல நூற்றாண்டுகளில் எப்படி மாறியது என்பதை இவை சுட்டிக்காட்டுகின்றன.

நாணயங்கள் மற்றும் பழைய கட்டிடங்களின் எச்சங்கள் போன்ற பல விலைமதிப்பற்ற அரிய பொருட்கள் இங்கு தொடர்ந்து பாதுகாப்பாக சேகரிக்கப்பட்டுள்ளன. பூமிக்கு அடியில் பல நூற்றாண்டுகளாக யாருக்கும் தெரியாமல் உறங்கிக்கொண்டிருந்த ஒரு பிரம்மாண்டமான வரலாறு இந்த பழங்கால சிற்பம் மூலமாக மீண்டும் இன்று உயிர் பெற்று எழுந்துள்ளது.

மரங்களை கட்டிப்பிடித்து சாதனை?



ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கானாவை சேர்ந்த வாலிபர் ஒருவர், மரங்களை கட்டிப்பிடித்து உலக கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

வனவியல் ஆர்வலரான அபுபக்கர் தாஹிரு எனும் 29 வயது இளைஞரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

இவர், சராசரியாக ஒரு நிமிடத்திற்கு 19 மரங்கள் அளவிலாக, ஒரு மணி நேரத்தில் 1,123 மரங்களை கட்டிப்பிடித்துள்ளார்.

இந்த சாதனையானது டஸ்கெகி தேசிய வனப்பகுதியில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

சாதனை பற்றி அபுபக்கர் கூறுகையில், இந்த உலக சாதனையை அடைவது நம்ப முடியாத அளவுக்கு வெகுமதி அளிக்கிறது. இது நமது சுற்றுச்சூழல் அமைப்பின் மரங்களின் முக்கிய பங்கை எடுத்து காட்டுவதற்கான ஒரு அர்த்தமுள்ள செயலாகும் என்றார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பை ஊக்குவிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த சாதனை தொடர்பான காணொளியை உலக கின்னஸ் சாதனை நிறுவனம் இணையத்தில் பகிர்ந்துள்ளது.

மனித உருவ ரோபோ உருவாக்கும் Open AI!

செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை உருவாக்குவதில் OpenAI ஒரு முன்னணி நிறுவனம் ஆகும். தற்போது, அந்நிறுவனம் மனித உருவ ரோபோக்கள் துறையிலும் நுழைய விரும்புவதாக தெரிவித்துள்ளது.

ஓபன்ஏஐ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சாம் ஆல்ட்மேன், தங்கள் நிறுவனம் மனித உருவ ரோபோக்களை உருவாக்கும் பணிகளி ஈடுபட்டு வருவதை உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் அவற்றில் ஒன்றின் முதல் தோற்றத்தை நீங்கள் மிக விரைவில் காணலாம்.

சோர்சஸ் பாட்காஸ்டில் பேசிய ஆல்ட்மேன், உலகம் மனிதர்களுக்காகவே சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

"உலகம் பெரும்பாலும் மக்களுக்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த வடிவமைப்புடன் பொருந்துவது நன்றாகத் தெரிகிறது," என்று அவர் கூறினார். அதாவது, வேறு எந்த வடிவத்தையும் விட, ஒரு மனித உருவ ரோபோவே சுற்றி நகர்வதற்கும், கதவுகள் மற்றும் கருவிகள் போன்ற பொருட்களுடன் ஊடாடுவதற்கும் மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று சாம் ஆல்ட்மேன் நம்புகிறார்.

"2027 இல் ஓபன்ஏஐ நிறுவனத்தின் மனித உருவ ரோபோவின் அருமையான செயல்விளக்கம் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இன்னும் சில ஆண்டுகளுக்குத் தெருக்களில் ரோபோக்கள் நடமாடும் என்று நான் நினைக்கவில்லை," என்று அவர் .்பார்ச்சூன் பத்திரிகையிடம் கூறினார். இந்த மனித உருவ ரோபோ எப்படி இருக்கும் என்பது குறித்த எந்த விவரங்களை ஓபன்ஏஐ தலைமை நிர்வாக அதிகாரி வெளியிடவில்லை என்றாலும், அந்த ரோபோவின் உள்ளே என்ன இருக்கிறது என்பதுதான் மிகவும் முக்கியம் என்று அவர் வலியுறுத்தினார்.

சாம் ஆல்ட்மேனின் கூற்றுப்படி, ரோபோவின் வடிவமைப்பு விவரங்களை விட, "அந்த ரோபோவை இயங்க வைக்கும் மூளையை உண்மையில் கண்டறிவதுதான் முக்கியம்."

ஒரு மனித உருவ ரோபோவில் இயங்கும் கைகள், கால்கள் மற்றும் விரல்கள் உட்பட பல பாகங்கள் உள்ளன. ஆனால் அந்த ரோபோ பொதுவாக, கேமராக்கள் மற்றும் சென்சார்களில் இருந்து வரும் தரவுகளை செயலாக்கி, இயக்கங்களை திட்டமிட்டு செயல்படுத்தக்கூடிய செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை சார்ந்திருக்கிறது. ரோபோக்களுக்குத் தேவையான செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதற்காக, ஓபன்ஏஐ நிறுவனம் கடந்த ஆண்டு ஒரு மனித உருவ ரோபோ ஆய்வகத்தை அமைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.



BEHIND ME MEDIA

பலமான நிலையில் கோட்டாபயவுக்கு எதிரான விசாரணைகள்?

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் விசாரணைகள் பலமான நிலையில் உள்ளதாக சட்டமா அதிபர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு கடந்த புதன்கிழமை அறிவித்துள்ளார்.

குறித்த பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை திசை திருப்பியமை தொடர்பாக சுரேஷ் சலே உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராக நிலுவையில் உள்ள வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரான சுரேஷ் சலேவை தாம் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டதாகவும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தன்னை நன்றாக நடத்துவதாக சந்தேகநபர் சலே தன்னிடம் கூறியதாகவும் கோட்டை நீதவான் பசான் அமரசேன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை திசை திருப்பியமை தொடர்பாக, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளரும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலுமான சுரேஷ் சலே உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இன்று மீண்டும் அழைக்கப்பட்டபோது, நீதவான் பசான் அமரசேன குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் பின்வருமாறு வினவினார்:

இவ்வழக்கின் மூன்றாவது சந்தேகநபரும், தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தடுப்புக் காவலில் உள்ளவருமான சுரேஷ் சலேவை நான் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டேன்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தம்மை மிகவும் நன்றாக உபசரிப்பதாக அவர் கூறினார். அவர் சில உணவு வகைகளைக் கோரியிருந்தார். அவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

அதற்கு அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதன் பின்னர், சுரேஷ் சலே சார்பாக ஆஜரான சட்டத்தரணி அசித் சிறிவர்தன திறந்த நீதிமன்றத்தில் பின்வருமாறு கூறினார்:

எனது கட்சிக்காரரை வெலிசறைக்கு அனுப்புவதை விட குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் வைத்திருப்பதே நல்லது.

அதேபோல, எனது கட்சிக்காரரை வைத்தியசாலையில் அனுமதிப்பது அவசியம் எனத் தெரிவித்த மாத்திரத்திலேயே, உடனடியாக அதற்கு அறிவுறுத்தல்களை வழங்கித் தேவையான சிகிச்சைகளை மேற்கொள்ள வழிசெய்தமைக்காக மேலதிக சொலிசிட்டர் ஜெனரலுக்கு நான் விசேடமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதன்போது சலே தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேற்படி விசாரணைகள் குறித்து மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார்.

"கனம் நீதவான் அவர்களே, 121 நாட்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இந்தச் சந்தேகநபர், முன்பு இருந்ததை விடவும் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் நலமாக உள்ளார்.

முடங்கிக் கிடந்த விசாரணைகள் தற்போது விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த வாரம் நாங்கள் சில முக்கிய சாட்சிகளிடம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தோம்.

அவர்களுள் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல்களை வழங்கிய மிக்கேல் சேவியர் வில்வரசிங்கம் அல்லது ராஜன் என்பவரும் ஒருவர். இவர் இராணுவத்தின் கோப்ரல் சுரங்க என்பவருடன் தொடர்பில் இருந்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறன்று குண்டை வெடிக்கச் செய்த இன்சா.ப் அஹமட்டின் மாமனாரான அலவுதீன் எனும் வர்த்தகர் குறித்து நான் முந்தைய நாளில் குறிப்பிட்டிருந்தேன்.

அவரின் நண்பரான தீபன் என்பவரின் வீட்டில் என்ன நடக்கிறது என ஆராய இராணுவம் இந்தத் தகவல் வழங்குநரான ராஜனை அனுப்பியுள்ளது.

அன்றைய தினம் தீபனின் வீட்டில் கருப்பு புர்கா அணிந்த பெண்ணொருவரும் வேறொரு ஆணும் இருந்துள்ளனர். அவர்கள் மட்டக்களப்புப் பிரதேச பேச்சுவழக்கிலான தமிழ் மொழியில் பேசியுள்ளனர்.

இந்த உரையாடல் தொடர்பான தகவல்களை ராஜன் சுரங்கவிற்கு அறிவித்துள்ளார். இது ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னதாக நடந்துள்ளது.

தாக்குதலுக்குப் பின்னர் தொலைக்காட்சிச் செய்தி அலைவரிசைகளில் செய்திகள் ஒளிபரப்பானபோது, அன்று தான் பார்த்தது சாரா ஜெஸ்மின் என்பதை ராஜன் அடையாளம் கண்டுள்ளார்.

அந்த சாரா ஜெஸ்மின் தான் முதலில் இறந்துவிட்டதாகவும், பின்னர் இல்லை என்றும் கூறப்பட்டவர். எப்படியோ இந்த அடையாளங்காணலை ராஜன் சுரங்கவிடம் கூறியபோது, "இவற்றையெல்லாம் மண்டையில் ஏற்றிக்கொள்ள வேண்டாம், அமைதியாக இருங்கள், மறந்துவிடுங்கள் என சுரங்க கூறியுள்ளார்.

எப்படியோ இந்தத் தகவல்கள் அனைத்தும் மக்கள் மயமாவதையும் வெளிப்படுவதையும் இந்தச் சந்தேகநபரான சுரேஷ் சலேவின் அனுசரணையுடனே அல்லது அறிதலுடனே தடுத்துள்ளனர்.

தற்போது வரை வெளிவந்துள்ள தகவல்களின்படி, இந்த சலே என்பவர் முன்னாள் எல்.டி.டி.ஈ உறுப்பினரான கருணா அம்மானுக்குப் போலி இராஜதந்திர கடவுச்சீட்டைத் தயாரித்து பிரித்தானியாவிற்கு அனுப்பி வைத்துள்ளார்.

"இராணுவத்தைச் சேர்ந்த சலே மற்றும் அன்சார் ஆகியோரே எனக்கு இந்தக் கடவுச்சீட்டைத் தயாரித்துத் தந்தனர் என கருணா கூறுகிறார். இது சுற்றாடல் அமைச்சின் செயலாளரெனக் கூறப்படும் கோகில துஷ்மந்த என்பவரின் பெயரிலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அப்படி ஒரு நபர் இருக்கவில்லை. அந்தக் கடவுச்சீட்டைப் பயன்படுத்திச் சென்று கருணா அம்மான் பிடிபட்ட பின்னர், பிரித்தானிய சிறையில் அடைக்கப்பட்டு மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அதேபோல இந்தச் சந்தேகநபர் சலேவிடம் பல கடவுச்சீட்டுகள் உள்ளன. இது தொடர்பாக வெளியுறவு அமைச்சு ஊடாக விசாரணைகளை மேற்கொள்ள நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், அண்மையில் தீர்ப்பளிக்கப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் வழக்கில் சிறையிலுள்ள மூன்று குற்றவாளிகளிடம் வாக்குமூலங்களைப் பெறுவதற்கு அனுமதி கோரினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முதன்மை வழக்கு தான் அண்மையில் மூவர் அடங்கிய மேல் நீதிமன்ற அமர்வின் முன் நிறைவடைந்தது.

அதில் தங்களைக் குற்றவாளிகளாகத் தீர்மானித்த போதிலும், நாங்கள் சிறைக்குச் சென்றாலும், உண்மையிலேயே இதனுடன் தொடர்புடையவர்கள் வெளியே தான் இருக்கிறார்கள் என மூன்று குற்றவாளிகளும் பயமின்றி நீதிபதிகள் குழாம் முன்னிலையில் கூறுகிறார்கள்.

இது ஒரு பாரதூரமான கூற்றாகும். அதற்கமைய மில்ஹான், ரிஸ்கான் மற்றும் செல்னுல் ஆப்தீன் ஆகியோரிடம் வாக்குமூலங்களைப் பெற அனுமதி வழங்குங்கள்.

அதன்பின்னர் சந்தேகநபர் சுரேஷ் சலே சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி சவீந்திர பெர்னாண்டோ தனது சமர்ப்பணங்களை முன்வைத்தார்.

இதற்கு முன்னரும் நான் கூறியுள்ளேன். இந்த வழக்கில் வாக்குமூலங்கள், மட்டுமே உள்ளன. எந்தவொரு சாட்சியமும் இல்லை. எனது கட்சிக்காரரிடம் பல கடவுச்சீட்டுகள் இருப்பதாகக் கூறினால், அவற்றின் எண்கள் என்ன? அவை எவ்வாறு பெறப்பட்டன என்று கூற வேண்டும்.

இல்லையெனில் சலேவிடம் 2, 03 கடவுச்சீட்டுகள் இருந்தன என்ற செய்தியே ஊடகங்களுக்குச் செல்லும். மற்றது, எனக் கூறப்படும் கருணா அம்மானுக்குக் கடவுச்சீட்டு தயாரிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் காலத்தில் எனது கட்சிக்காரர் பிரான்ஸில் இருந்தார். பிரான்ஸில் இருந்துகொண்டு இலங்கையில் எவ்வாறு கடவுச்சீட்டு தயாரிக்க முடியும்?

இதன்போது நீதவான், மேலதிக சொலிசிட்டர் ஜெனரலிடம் பின்வருமாறு கேள்வியெழுப்பினார்.

இவ்வழக்குடன் தொடர்புடைய வகையில் வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ஒருவர், மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதற்கு அந்த வெளிநாட்டுப் பயணத் தடையை நீக்குமாறு மனுவொன்றின் ஊடாகக் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் தற்போது இவ்வழக்கில் சந்தேகநபராகப் பெயரிடப்படவில்லை. அது தொடர்பான விசாரணைகள் எவ்வாறான நிலையில் உள்ளன?

அதற்கு மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் பின்வருமாறு பதிலளித்தார்:

அந்த மனுவின் பிரதியொன்றை சட்டத்தரணி எனக்கும் அனுப்பியிருந்தார். சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட இருதய அறுவைச்சிகிச்சைக்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகளுக்காக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு நவம்பர் நடுப்பகுதி வரை 02 வாரங்களுக்கு வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் தற்போது சந்தேகநபராகப் பெயரிடப்படாததற்கு காரணம், கனம்பொருந்தியோரே, ஏனைய சந்தேகநபர்கள் தொடர்பாக மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய விசாரணைகள் நிலுவையில் உள்ளமையும், முன்னாள் ஜனாதிபதி தாக்கல் செய்த வழக்கு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளமையுமே ஆகும்.

இருப்பினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பான விசாரணைகள் தற்போது பலமான நிலையில் உள்ளன. எனினும் அவர் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல விரும்பினால், மனிதநேய அடிப்படையில் அதற்கு அனுமதியளிக்க முடியும்.

அதற்கமைய, கருத்துக்களை ஆராய்ந்த கோட்டை நீதவான் பசான் அமரசேன, முறைப்பாட்டாளர்களின் கோரிக்கைகளுக்கு அனுமதியளித்ததுடன், விசாரணைப் முன்னேற்றத்தைப் சமர்ப்பிப்பதற்காக வழக்கை நவம்பர் 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.





BEHIND ME MEDIA

ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவுகளுக்கான தேவைகள்!

35 வயது பெண்களுக்கு இரும்புச்சத்து குறைபாடு, கால்சியம் குறைபாடு, போலிக் அமிலக் குறைபாடு, ஆஸ்டியோபோரோசிஸ், தசை சோர்வு போன்ற பிரச்சினைகள் ஏற்பட தொடங்குகின்றன.

உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும், சுகாதார பிரச்சினைகளை சமாளிப்பதற்கும் ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவுகளை சாப்பிடுவது அவசியமாகிறது. கர்ப்ப காலத்தில் இரும்பு சத்து அதிகம் தேவைப்படும்.

கோழி இறைச்சி, மீன், கீரை, பீன்ஸ், பச்சை இலை காய்கறிகள், பயறு, தானியங்கள் உள்ளிட்டவற்றில் இரும்பு சத்து அதிகம் நிறைந்திருக்கும். மேலும் வைட்டமின் சி நிறைந்த உணவுகளையும் சாப்பிட வேண்டும்.

குழந்தைகளுக்கு தேவையான அயோடின் தாய்மார்களிடம் இருந்து கிடைக்கும். அதனால் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் போதுமான அளவு அயோடின் உட்கொள்ள வேண்டியது அவசியம்.

அதுமட்டுமின்றி தைராய்டு சுரப்பியின் சீரான செயல்பாட்டிற்கு அயோடின் முக்கியமானது.

அதனால் கடல் உணவுகள், முட்டை, பால், தானியங்கள் என அயோடின் நிறைந்திருக்கும் உணவு பொருட்களை தவறாமல் சாப்பிட வேண்டும். வயது அதிகரிக்கும்போது தசைகள் பலவீனமடைய தொடங்கும்.

அதனை தவிர்ப்பதற்கு கோழி, மீன், பீன்ஸ், பயறு, குறைந்த கொழுப்புள்ள தயிர், பால், பாலாடைக்கட்டிகள், நட்ஸ்கள், கொட்டைகள், முட்டை போன்றவற்றை சாப்பிடலாம்.

நரம்பு திசுகள், மூளையின் செயல்பாடு மற்றும் சிவப்பு ரத்த அணுக்கள் உற்பத்திக்கு வைட்டமின் பி 12 அவசியமானது. அவை அதிகம் நிறைந்த மீன், இறைச்சி, முட்டை, பால், பால் பொருட்களை தவறாமல் சாப்பிட வேண்டும்.



எலும்புகளின் ஆரோக்கியத்திற்கு கால்சியம் மற்றும் வைட்டமின் டி உட்கொள்வது நல்லது.

குறைந்த கொழுப்புள்ள பால், தயிர், பாலாடைக்கட்டி, கொழுப்பு நிறைந்த மத்தி மீன் போன்றவை கால்சியம் நிறைந்த உணவு பொருட்கள். கால்சியத்தின் வளர்சிதை மாற்றத்திற்கு வைட்டமின் டி முக்கியமானது. நேரடி சூரிய ஒளி மூலமும் பெறலாம்.

இதயம், எலும்பு மற்றும் மூளையின் ஆரோக்கியத்துக்கு ஒமேகா 3 அவசியம். கடல் உணவுகள், நட்ஸ்கள், ஆளி விதை, சோயா பீன் எண்ணெய், முட்டை, தயிர், ஜுஸ், பால், சோயா பானங்கள் போன்றவை ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்தவை.

பழங்கள்,காய்கறிகளில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால் அவற்றை தினமும் சாப்பிட வேண்டும். வயது அதிகரிக்கும்போது ஊட்டச்சத்தின் தேவையும் அதிகரிக்கும் என்பதால் உணவு அட்டவணை தயாரித்து அதற்கேற்ப உணவு பழக்கவழக்கங்களை பின்பற்றி வரலாம்.

வெள்ளரிக்காய் குளிர்க்காலத்தில் சாப்பிடலாமா?



கோடைகாலம் மட்டுமின்றி தினமும் சாப்பிட வேண்டிய ஒரு அருமையான காய் வெள்ளரிக்காய்.

வெள்ளரிக்காயில் 95மூ தண்ணீர் நிறைந்துள்ளதால், உடலை எப்போதும் நீரேற்றத்துடன் வைத்திருக்க உதவும். உடலின் வெப்பநிலையை சீராக வைத்து, உள்ளுறுப்புகளை குளிர்ச்சியாக வைத்திருக்க இது பெரிதும் உதவுகிறது.

சாலட், ஜுஸ், பச்சடி அல்லது அப்படியே பச்சையாகவும் தினமும் சாப்பிடலாம். சர்க்கரை நோய் உள்ளவர்கள் தங்கள் உணவில் தாராளமாக வெள்ளரிக்காயைச் சேர்த்துக் கொள்ளலாம்.

இதில் கலோரிகள் மிக மிக குறைவு. உடல் எடையை குறைக்க நினைப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த சாய்ஸ்..இதில் உள்ள அதிகப்படியான நார்ச்சத்து செரிமானத்தை சீராக்கி, மலச்சிக்கல் பிரச்சனையை தீர்க்கிறது.

தொடர்ந்து வெள்ளரிக்காய் சாப்பிட்டு வந்தால், சிறுநீரகக் கற்கள் உருவாகும் அபாயம் குறையும். வெள்ளரிக்காய் சாறு சருமத்திற்கு இயற்கையான பொலிவையும் ஈரப்பதத்தையும் தருகிறது.

வெள்ளரிக்காய் துண்டுகளை கண்களின் மேல் வைத்தால், கண்கள் குளிர்ச்சியடைந்து, கருவளையங்கள் மறையும்..வைட்டமின் சி நிறைந்துள்ளதால் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை இது பலப்படுத்துகிறது.

செம்மணி விடயத்தில் சர்வதேச குற்றவியல் விசாரணை அவசியம் பேராசிரியர் ராஜ் சோமதேவா பௌத்த தேசியவாதி - கஜேந்திரகுமார் எம்.பி.

BEHIND ME MEDIA

பேராசிரியர் ராஜ் சோமதேவா செயற்பட்டார். ராஜ் சோமதேவா ஒரு சிங்கள, பௌத்த தேசியவாதி ஆவார். இவர் ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இயங்குகின்றார் என்பது தற்போதைய அவரின் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான அறிக்கை மூலம் வெளிவந்துள்ளது.

உள்ளக விசாரணைகள் உண்மைகளை ஒருபோதும் வெளிப்படுத்தாது. அரசு நேர்மையாகச் செயற்பட விரும்புகின்றது என்றால், சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இணங்க வேண்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பாகப் பேராசிரியர் ராஜ் சோமதேவா தனது அறிக்கையின் 17ஆவது பக்கத்தில், சுகாதார விபத்து காரணமாகக் கணிசமான நபர்கள் உயிரிழந்து புதைக்கப்பட்டுள்ளமையுடன் செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதைகுழி ஒத்துப்போவதாகவும், அதனை நிராகரிப்பதற்கு எவ்விதமான காரணமும் இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அதே பந்தியில், இதுவரை கண்டறியப்பட்டுள்ள உடல்கள் தொடர்பில் நிபுணத்துவ குறைபாடுகள் காரணமாக இன்னும் எத்தனையோ விடயங்கள் செய்ய வேண்டியுள்ள காரணத்தால் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் இறுதி முடிவுகளை அறிவிக்க முடியாது என்று குறிப்பிட்டுவிட்டு, சுகாதார விபத்தில் நடந்ததை போன்ற கருத்தையும் பதிவு செய்கின்றார். பேராசிரியர் ராஜ் சோமதேவா எந்த அடிப்படையில் தனது அறிக்கையில் இந்தக் கருத்துக்களைக் குறிப்பிட்டார்?

17 பக்கங்களை உள்ளடக்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிட்ட விபத்து தொடர்பிலும் விபட்டை உறுதிப்படுத்தும் வகையிலும் ஆதாரங்கள் எதனையும் சமர்ப்பிக்காமல், முடிவுக்கு வர முடியாது என்று கூறிக்கொண்டு, குறிப்பிட்ட விடயத்தை அழுத்திக் கூறும் வகையில் குறிப்பிட்டுள்ளார் என்றால், அவரின் நிகழ்ச்சி நிரல் தொடர்பில் கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது.

இதேவேளை, அவர் இதற்கு முன்னர் மூன்று அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். அவர் தனது தனிப்பட்ட முடிவுகளை அவற்றில் குறிப்பிட்டுள்ளார். முதலாவது அறிக்கையில் பாரிய புதைகுழி என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன், இதற்கு முன்னர் செம்மணி தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் தமிழ்த் தேசியவாதத்தை எதிர்த்த தரப்புகளும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

ராஜன் ஹூல் என்பவர் 1999ஆம் ஆண்டில் வெளியிட்ட அறிக்கையொன்றில், செம்மணியில் உடல்கள் ஆடைகள் இன்றிப் புதைக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டு முகாம்களில் இருந்து கொண்டுசென்று செம்மணியில் புதைக்கப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், செம்மணி தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்த் தேசியப் பேரவையின் நிலைப்பாடானது, தொல்லியல் நிபுணர் ராஜ் சோமதேவா என்பவர் ஒரு நிகழ்ச்சி நிரலுடன் இயங்குகின்றார் என்பதாகும். இதனை நாங்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம். அவருடைய கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பிலும் தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம்.



செம்மணி விடயத்தில் உள்ளக விசாரணைகள் உண்மைகளை ஒருபோதும் வெளிப்படுத்தாது. அரசு நேர்மையாகச் செயற்பட விரும்புகின்றது என்றால் சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இணங்க வேண்டும்!

கோட்டாபய ராஜபக்ஷவினால் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் தொடர்பான குழு அமைக்கப்பட்டபோது, பேராசிரியர் ராஜ் சோமதேவவையும் அதில் இணைத்திருந்தார். அவரொரு சிங்கள, பௌத்த தேசிய வாதியாவார். அவர் ஒரு நிகழ்ச்சி நிரலில்தான் இயங்குகின்றார் என்பது இப்போது உறுதியாகியுள்ளது.

இதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணை களை இந்த நாட்டுக்குள் நடத்த முடியாது என்பதனைத் தொடர்ச்சியாகக் குறிப்பிட்டு வருகின்றோம்.

இந்த அரசு நேர்மையாகச் செயற்பட விரும்புகின்றது என்றால், சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு இணங்க வேண்டும். இந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் தனித்துச் செய்யவில்லை. இதனால், சர்வதேச விசாரணைக்கு இணங்காமல் உண்மை யைக்கண்டறிய முடியாது. இப்போதாவது அரசு கண்களைத் திறக்க வேண்டும்.

செம்மணியில் கிட்டத்தட்ட 600 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இன்னும் 600 உடல்கள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பாரதூரமான குற்றம் நடந்துள்ள சம்பவத்தில் அரசு அக்கறை செலுத்த வேண்டும். அரசிடம் இனவாதம் இல்லை என நிரூபிப்பதென்றால், முன்னைய ஆட்சி யாளர்களில் இருந்து வேறுபட்டவர்கள் என்பதனை நிரூபிப்பதாக இருந்தால், தயவுசெய்து இந்த விடயத்திலாவது சர்வதேச குற்றவியல் விசாரணையைத் தடுக்காமல் இதற்கு இணங்க வேண்டும்." - என்றார்.







சினிமா

BEHIND ME MEDIA

இரு மொழிகளில் நான்கு திரைப்படங்களைத் தயாரிக்கும் ஹன்ஸா என்டர்டெய்ன்மென்ட்



சின்ன திரை நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்குவதில் அனுபவம் மிக்க ஹன்சா விஷன் நிறுவனம் தற்போது ஹன்ஸா என்டர்டெய்ன்மென்ட் எனும் புதிய நிறுவனத்தை தொடங்கி, அதனூடாக தமிழ், மலையாளம் என இரண்டு மொழிகளில் நான்கு புதிய திரைப்படங்களைத் தயாரிக்கிறது. இதற்கான அதிகாரப்பூர்வமான அறிவிப்பும், தொடக்க விழாவும் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

இது தொடர்பாக ஹன்ஸா என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுஜாதா நாராயணன் தெரிவிக்கையில், "எங்கள் நிறுவனம் முதல் கட்டமாக நான்கு கதைகளை உருவாக்க உள்ளது. இதில் ஒரு மலையாள திரைப்படமும், மூன்று தமிழ் திரைப்படங்களும் இடம்பெற்றுள்ளன. மலையாளத்தில் உருவாகும் திரைப்படத்தை இந்து வி. எஸ். எழுதி இயக்குகிறார். தமிழில் இயக்குநர்கள் சர்ஜுன் கே .எம். அருண் பிரகாஷ், விக்ரம் ஸ்ரீதரன் ஆகிய மூவரும் மூன்று திரைப்படங்களை இயக்குகிறார்கள். இந்த படைப்புகள் அனைத்தும் முன்னணி டிஜிட்டல் தளங்களில் வெளியாகும். இத்துடன் பல மொழிகளிலும் இணைய தொடர்களை தயாரிக்கும் திட்டமும் உள்ளது" என்றார்.

இதனிடையே நான்கு திரைப்படங்களுக்கான பணிகளில் இரண்டு படைப்புகளுக்கான முன் தயாரிப்பு பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் தொடங்கும் என படக் குழுவினர் அறிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



அல்லு அர்ஜுன் ரஜினியை கிண்டல் செய்தாரா?

தெலுங்கு நடிகர் அல்லு அர்ஜுன், சமீபத்தில் ரஜினிகாந்த் நடிப்பில் வெளிவந்த ஜெயிலர் 2 திரைப்படத்தை பற்றி பதிவிட்ட டிவிட்டானாது இன்று நாடு முழுக்க வைரலாகியுள்ளது. அவரது பாராட்டு செய்தியினை பெரும்பாலானவர்கள் சிலாகித்து செய்தியாக வெளியிட்டுள்ளனர். அதே நேரம் சமூக வலைதளங்களில் ஒரு சிலர், அல்லு அர்ஜுன் கருத்துக்களை வேறு மாதிரியாக திரித்தும் பதிவிட்டுள்ளனர்.

தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டாராக ரஜினிகாந்த் 50 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறார். எம்ஜிஆர் மற்றும் சிவாஜியின் திரையுலக காலத்தில் திரையில் அறிமுகமானவர் ரஜினிகாந்த். ரஜினி காந்த் தலைமுறை இளம் நடிகர்கள் திரையுலகில் முன்னேறும் போது, அவருக்கு முந்தைய தலைமுறையினர் தமிழ் சினிமாவில் துணை வேடங்களுக்கு மாறிக்கொண்டனர்.ரஜினிகாந்த் தொடர்ந்து கமலுடன் போட்டி போட்டு தனக்கென்று ஒரு பெரிய ரசிகர் கூட்டத்தை உருவாக்கி இருந்தார்.

அவருக்கு அடுத்த தலைமுறையில் விஜய் மற்றும் அஜித் ஆகியோர் திரையில் அறிமுகமாகி ஏராளமான இளைஞர்களை கவர்ந்தனர். ஆனால், அந்த காலகட்டத்திலும் ரஜினி சூப்பர் ஸ்டார் ஆகவே இருந்தார். ரஜினியின் தலைமுறை நடிகர் பலரும் துணைக் கதாபாத்திரங்கள் , கதாநாயகன், கதாநாயகியின் அப்பா வேடம், குணச்சித்திர வேடங்களில் நடிக்க தொடங்கி பல வருடங்கள் ஆகிவிட்டது.

ரஜினிகாந்த் மட்டும் 75 வயதை தொட்டும் இன்றுவரை கதாநாயகனாகவே தொடர்ச்சியாக நடித்து வருகிறார். இந்நிலையில் ஜெயிலர் -2 திரைப்படத்தின் மாபெரும் வெற்றி ரஜினிகாந்த் மேலும் மகிழ்ச்சி ஆக்கியுள்ளது. கமல் உள்ளிட்ட திரைத் துறையை சேர்ந்த பல நடிகர்களும் இந்த திரைப்படத்தை பாராட்டி வருகின்றனர். உலகளவில் ₹600 கோடி வசூலை ஜெயிலர் 2 திரைப்படம் நெருங்கிவிட்டது. இதை, தெலுங்கு சினிமா உலகின் பான் இந்தியா நடிகரான அல்லு அர்ஜுன் பாராட்டியுள்ளது அதிக கவனம் பெற்று வருகிறது. புஷ்பா மற்றும் புஷ்பா 2 திரைப்படத்தின் மூலமாக தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்ற நடிகராக அல்லு அர்ஜுன் மாறினார். அவரது ஓ பதிவில், "இது ஒரு உண்மையான ரஜினி சாரின் காட்சி பெட்டகம், அவரது நட்சத்திர அந்தஸ்து, ஆரா மற்றும் ஆளுமைக்கு ஒரு மிகச்சிறந்த உதாரணம்! விறுவிறுப்பான அட்ரினலினை பம்ப் செய்யக் கூடிய, ஒரு கமர்ஷியல் என்டர்டெய்னர்! சகோதரர் அனிருத் கொன்று விட்டார் (இசையால்)! படத்தில் பணியாற்றிய அனைத்து கலைஞர்கள், தொழில்நுட்பக் குழுவினர் மற்றும் தயாரிப்பாளர் என அனைவரும் தங்கள் முழு அர்ப்பணிப்பையும் கொடுத்துள்ளனர். ஷோமேன் நெல்சன், மிகச் சிறந்ததொரு வெற்றிப் படத்தை அதிரடியாகக் கொடுத்துள்ளார்!

சட்டை கூட கலையாமல், 500 கோடி ரூபாய்க்கும் மேல் வசூலை அள்ளக்கூடிய ஒரே நபர் ரஜினிதான்! முழு குழுவினருக்கும் வாழ்த்துகள்! @sunpictures " என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரம்மாண்ட திருமண அழைப்பிதழ் வைரல்

பிரபல திரைப்பட தயாரிப்பாளரும், துபாயைச் சேர்ந்த முசு குழுமத்தின் தலைவருமான கண்ணன் ரவியின் மகன் தீபக் ரவியின் திருமண பத்திரிகை தற்போது சமூக வலைத்தளங்களில் பெரும் வைரலாகி வருகிறது. இதற்காக சினிமா மற்றும் அரசியல் பிரபலங்களுக்கு கண்ணன் ரவி நேரில் சென்று வழங்கி வரும் பிரம்மாண்ட திருமண அழைப்பிதழ் பெட்டிதான் இணையத்தில் பேசுபொருளாகியுள்ளது.

திருமண பத்திரிகை மயில் தோகை வடிவமைப்புடன் ஆடம்பர கலை அம்சத்துடன் அழைப்பிதழ் பெட்டியைத் திறந்தவுடன், உள்ளே இருக்கும் திருமணப் பத்திரிகை ஒரு மயில் தோகை விரிப்பது போல அழகாக வெளிவருகிறது. இந்த விவிஐபி அழைப்பிதழ் பெட்டியில் தங்க நிற விநாயகர் சிலை, மயில் இறகு அலங்காரங்கள் மற்றும் இனிப்புகள் வைப்பதற்கான தனித்தனி அடுக்கு இழுப்பறைகள் இடம்பெற்றுள்ளது.

பிரபல திரைப்பட தயாரிப்பாளரும், துபாயைச் சேர்ந்த முசு குழுமத்தின் தலைவருமான கண்ணன் ரவி சினிமா பிரபலங்களின் வீடுகளுக்கே நேரடியாகச் சென்று இந்த அழைப்பிதழை வழங்கி வருகிறார். மேலும் மலையாள மற்றும் தமிழ் நடிகர் சுராஜ் வெஞ்சாரமூடு இந்த பத்திரிகையைத் திறந்து பார்த்து, "இப்படி ஒரு பத்திரிகையை என் வாழ்க்கையிலேயே பார்த்ததில்லை" என ஆச்சரியப்படும் காணொளி சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி வருகிறமை குறிப்பிடத்தக்கதாகும்.



அத்தோடு உலகநாயகன் கமல்ஹாசன், நடிகர் சரத்குமார், சிவகார்த்திகேயன் மற்றும் ஈரோடு மகேஷ் உள்ளிட்ட பல பிரபலங்களுக்கு இந்த பிரம்மாண்ட பத்திரிகை வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பிரபலங்கள் ஆச்சரிய மடைந்து, தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

டிஜிட்டல் வீடியோ திரை பத்திரிகை யைத் திறந்தவுடன், அதில் பொருத்தப் பட்டுள்ள எல்.இ.டி திரையில் ஒரு காணொளி தானாகவே இயங்கத் தொடங்குகிறது. இது ஒரு சாதாரண அழைப்பிதழாக இல்லாமல், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய எல்.இ.டி திரை கொண்ட டிஜிட்டல் காணொளி அழைப்பிதழாக வடிவமைக்கப்பட்டுள்ளது மேலும் தனித்துவத்தினை உறுதி செய்கிறது எனலாம்.





பிரபல ஜோதிடர் பிரசாந்த் கினி நடிகர் அஜித் விரைவில் அரசியலுக்கு வருவார் என்று அதிர்ச்சி கணிப்புகளை வெளியிட்டுள்ளார். அதேநேரம் தற்போது அரசியலில் இயங்க ஆர்வம் காட்டி வரும் நடிகர் தனுஷ் எதிர்காலம் பற்றியும் தனது கணிப்புகளை அவர் கூறியுள்ளார். ஆனால், சிவகார்த்திகேயனின் எதிர்காலம் குறித்து அவர் எதுவும் கூறாதது , அவரது ரசிகர்களை ஏங்க வைத்துள்ளது. இந்த கணிப்புகள் வெளியாகி சமூக ஊடகங்களில் பெரிய விவாதத்தை கிளப்பி உள்ளது.

இந்திய அளவில் சமூக வலைதளங்களில் மிகவும் பிரபலமான ஜோதிடர் பிரசாந்த் கினி , இவரது கணிப்புகள் பெரும்பாலும் துல்லியமாக நடைபெற்றுள்ளன. இதன் காரணமாக இவருக்கு ஏராளமான ரசிகர்களும் உள்ளனர்.

இவரது கணிப்புகளுக்கு பெரும் எதிர்பார்ப்பு உண்டு. இவர் சர்வதேச அளவிலும், இந்தியா மற்றும் மாநிலங்கள் அளவிலும் தனது கணிப்புகளை வெளியிட்டு வருகிறார். மிகவும் குறிப்பாக சர்வதேச சூழல்கள், போர், ஆட்சி மாற்றம், அரசியல் எதிர்காலம் போன்றவற்றையே மையப்படுத்தி இவர் கணிப்புகளை வெளியிடுகிறார். பிரசாந்தின் முந்தைய கணிப்புகளில் நேபாளத்தில் நடைபெற்ற ஆட்சி கவிப்பு, ஜென் சி தலைமுறையினரின் போராட்டம் ஆகியவற்றை துல்லியமாக, அவை நடைபெறும் முன்னரே கணித்து வெளியிட்டு இருந்தார். சமீபத்தில் சமீபத்தில் சில மாதங்களுக்கு முன்னர் பிரான்ஸ் நாட்டில் மதரீதியாக வன்முறைகள் நடைபெறும் என்று கணித்து வெளியிட்டு இருந்தார். மேலும் ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர்களை பற்றியும், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே போர் துவங்கி, உலகம் முழுக்க எரிபொருள் தட்டுப்பாடு நிலவ இருக்கும், என்பதையும் முன்கூட்டியே கணித்து வெளியிட்டு இருந்தார்.

இவர் கூறிய இந்த கணிப்புகள் அனைத்தும் நடைபெற்றதால் அவரது கணிப்புகளுக்கு மவுசு கூடியது. இவர் தற்போது நடிகர் தனுஷ் குறித்தும் நடிகர் அஜித் குறித்தும் வெளியிட்டுள்ள கணிப்புகள் வரவேற்பினை பெற்று வருகிறது. பிரசாந்த் தனுஷ் பற்றி , "தனுஷ் விரைவில் 2028 அல்லது 29ஆம் ஆண்டு கால வாக்கில் அரசியலில் நுழைவார் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், விஜய்க்கு கிடைத்தது போன்ற உடனடியான வெற்றி அவருக்கு கிடைக்காது. அதே வேளையில் ஒரு நடிகராக அவருக்கு மிகவும் பிரகாசமான எதிர்காலம் உண்டு , விஜய் போன்று வெற்றி பெற வேண்டும் என்றால் அது அஜித்தால் மட்டும் முடியும்" என்று கூறியுள்ளார். இன்னொரு பதிவில், "தல அஜித் 2032 ஆம் ஆண்டு வாக்கில் அரசியலுக்கு வருவார் , அவரால் அதிமுக மீண்டும் உயிர் பெறும். அதுவரை அதிமுகவிற்கு எந்த ஒரு பெரிய வெற்றியும் கிடைக்காது," என்று பிரசாந்த் குறிப்பிட்டுள்ளார். இந்த கணிப்புகள் இன்று சமூக வலைதளங்களில் அதிகம் பேசுபொருள் ஆகியுள்ளது. தனுஷ் அரசியலுக்கு வருவதற்காக வேலைகள் செய்து வருவது அனைவரும் அறிந்தது தான். ஆனால், நடிகர் அஜித் நீண்ட காலமாக போது சமூகத்திலிருந்து விலகி இருக்கிறார். அவர் தான் நடித்த சினிமாவின் விளம்பர நிகழ்ச்சிகளுக்கு கூட செல்ல மாட்டார். திரைத்துறை சார்ந்த எந்த ஒரு நிகழ்வுக்கும் அவர் செல்வதுமில்லை. பொது நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்து கொள்வதில்லை , விஜய் போன்று நீண்ட காலம் ரசிகர்களுடன் தொடர்பிலும் அவர் இல்லை. இந்த நிலையில் அவர் எவ்வாறு அரசியலுக்கு வருவார்? அது போன்ற மனநிலையில் அவர் இருக்கிறாரா? போன்ற விவாதங்கள் தொடங்கியுள்ளது.



அத்தியாயம் - 6

பாண்டுராஜன் ஒருநாள் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான்.

காட்டில் மிருகங்கள் இல்லாததால் காட்டின் உள்ளே வெகுதூரம் சென்றான்.

அப்போது ஒருமுனிவரும் அவரின் மனைவியும் மானாக உருமாறி விளையாடிக்கொண்டிருந்தார்கள்.

மானுருவில் விளையாடுபவர் முனிவர் என்று அறியாத அதன்பின் அவர்கள் பல காலம் காட்டில் வசித்து வந்தனர். பாண்டு அம்மானின் மீது அம்பு தொடுத்தான்.

அம்பு தைத்தவுடன் மானுருவில் விளையாடிய முனிவர் தனது சுய உருவைப் பெற்றார்.

அவருக்குக் கடுங்கோபம் வந்தது "விளையாடும் மிருகங்களை ஈவிரக்கமின்றி கொல்ல முயன்ற பாதகனே,

நீ உன் மனைவியுடன் சேர்ந்தால் மரணம் உண்டாகும்" எனச் சபித்தார்.

முனிவரின் சாபத்தால் மனமுடைந்த பாண்டு இராச்சியத் தைப் பீஷ்மனிடம் ஒப்படைத்து விட்டு மனைவியருடன் காட்டுக்குச் சென்று தவம் செய்தான்.

பாண்டுவின் நிலையைப் புரிந்து கொண்ட குந்தி,

தனக்கு முன்பு துருவாசமுனிவர் உபதேசித்த மந்திரத்தைப் பற்றிக் கூறி அதை உச்சரிக்க அனுமதி கோரினாள்.

பாண்டு அதற்கு உடன்படக் குந்தியும் மாத்திரியும் அம் மந்திரங்களைத் தேவர்களை நினைத்து உச்சரித்துப் பஞ்ச பாண்டவர்களைப் பெற்றெடுத்தனர்.

ஒரு நாள் பாண்டுவும் மாத்திரியும் தனிமையில் இருந்த போது பாண்டு காமவசப்பட்டுத் தனக்கிடப்பட்ட சாபத்தை மறந்து அவளோடு கூடியிருக்கையில் அவனது உயிர் பிரிந்தது.

தன்னால் தான் பாண்டு இறந்தான் எனக் கவலைப்பட்ட மாத்திரி பாண்டுவைத் தகனம் செய்த போது அச் சிதையில் விழுந்து மாண்டாள்.

பாண்டு இறந்த செய்தியைக் கேள்விப்பட்ட பீஷ்மர் மிகுந்த துக்கம் அடைந்தார்.

விதுரனும் பீஷ்மரும் வியாச முனிவரும் திருதராட்டினனும் முறைப்படி கிரியைகளைச் செய்தனர்.

நாட்டு மக்கள் பெருந்துன்பங்கொண்டு அழுது புலம்பினர்.

அதன் பின் சத்தியவதி அம்பிகையையும் அம்பாலிகை யையும் அழைத்துக் கொண்டு காட்டுக்குச் சென்று தவஞ்செய்தாள்

அடுத்த வாரம் தொடரும்

பசியில் தவிக்கும் போது ஒரு பிஸ்கட்டின் விலை என்னவாக இருக்கும்?



பசியில் தவிக்கும் போது ஒரு பிஸ்கட்டின் விலை என்னவென்று தெரியுமா? 1909-ல் அண்டார்டிகா உறைபனியில் சிக்கிய எர்னஸ்ட் ஷாகில்டன், தன் கடைசி பிஸ்கட்டை மரணத்தின் விளிம்பில் இருந்த சகாவிற்காகத் தியாகம் செய்தார். உலகப் பணத்தாலும் வாங்க முடியாத அந்த ஒற்றைப் பிஸ்கட் கதை, ஒரு உண்மையான தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்ற உன்னதப் பாடத்தை நமக்குக் கற்றுத் தருகிறது.

மனித வாழ்க்கையில்தான் எத்தனை விதமான அறுசுவை உண்டிகள்! விதவிதமான உணவு வகைகளை ருசித்து அனுபவித்துச் சாப்பிடுகிறோம்.

ஆனால் அவற்றின் மதிப்பை என்றேனும் எண்ணிப் பார்த்திருக்கிறோமா?

ஒரு பிஸ்கட்டைக் கொடுத்தால் 'பூ' இவ்வளவு தானா என்று எள்ளி நகையாடுவோம்.

ஆனால் ஒரு பிஸ்கட்டின் மதிப்பு எவ்வளவு தெரியுமா?

ஒரு பிஸ்கட்டின் கதையைப் பார்ப்போம்.

1909ம் ஆண்டு. ஜனவரி மாதம். அண்டார்டிகாவில் உறைபனியில் எர்னஸ்ட் ஷாகில்டன் தனது மூன்று சகாக்களுடன் தங்கள் ஸ்லெட்ஜ் வண்டிகளில் பயணப்பட்டுக் கொண்டிருந்தார். தென் துருவத்தை அடையும் முயற்சியில் தோல்வியுற்று கையிலிருந்த அனைத்து உணவுப் பொருள்களும் தீர்ந்து விட பசி தாளாமல் கையிலிருந்த பிஸ்கட்டுகளை ரேஷன் முறையில் அனைவரும் பகிர்ந்து கொண்டனர்.

அந்தக் குழுவில் இருந்த ∴ப்ராங்க் வைல்ட் என்பவர் இனியும் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது என்ற நிலையை அடைந்தார்.

ஷாகில்டன் எந்த வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தன் கையிலிருந்த கடைசி பிஸ்கட்டை எடுத்து அவரிடம் தந்தார்.

வைல்ட் அதை வாங்க மறுத்தார். உடனே ஷாகில்டன் வைல்டிடம் அதை அவர் வாங்க மறுத்தால் அந்த பிஸ்கட்டை தான் உறைபனியில் புதைத்து விடுவேன் என்றார். உடனே வைல்ட் அதை வாங்க ஒப்புக் கொண்டார்.

பசியால் வருந்தும் ஒருவரே அந்த பிஸ்கட்டின் உண்மையான விலையைப் புரிந்து கொள்ள முடியும் என்றார் அவர்.

அந்தக் கணத்தில் ஷாகில்டன் ஒரு குழுவின் தலைவர் எப்படிப்பட்ட தியாகத்தை தனது உயர் நிலைமையையும். அதிகாரத்தையும் கருதாமல் செய்ய வேண்டும் என்பதை நிரூபித்தார்.

தனது சகாக்கள் துன்பப்படும் போது அவர்களை அவர் துன்பப்பட விடவில்லை. அவர்களுடன் அதே ஸ்லெட்ஜ் வண்டிகளில் தான் அவர் சென்றார்.

அவர்கள் சாப்பிட்ட அதே உணவைத் தான் அதே ரேஷன் அளவில் தான் உண்டார். ஒரே டெண்டில் தான் அவரும் அவர்களுடன் உறங்கினார். சேர்ந்து பகிர்ந்து கொண்ட அந்த கடுமையான துன்பமே அவரது தலைமைக்கான மதிப்பையும் அடையாளத்தையும் அளித்தது.

தன்னுடன் கூட வரும் சகாவின் துன்பத்தைப் போக்க தன்னிடம் இருப்பதை தியாகம் செய்யும் ஒரு பண்பே அவரது உண்மையான தலைமைப் பொறுப்பின் மகத்துவத்தை உணர்த்தியது. அத்துடன் அந்த தியாகமானது ஷாகில்டனின் உண்மையான தேவையைத் தியாகம் செய்ததை உணர்த்துகிறது. அந்தக் கணத்தில் அந்த இடத்தில் ஒவ்வொரு கலோரி உணவும் விலை மதிப்பே இல்லாததாகும். தன்னிடம் இருந்த ஒரே ஒரு பிஸ்கட்டை அவர் கொடுத்தது அவரது உயிரைத் தக்க வைப்பதையும் இழந்த ஒன்றாகும்.

1909-ல் அண்டார்டிகா உறைபனியில் சிக்கிய எர்னஸ்ட் ஷாகில்டன் தன் கடைசி பிஸ்கட்டை மரணத்தின் விளிம்பில் இருந்த சகாவிற்காகத் தியாகம் செய்தார். உலகப் பணத்தாலும் வாங்க முடியாத அந்த ஒற்றைப் பிஸ்கட் கதை ஒரு உண்மையான தலைவர் எப்படி இருக்க வேண்டும் என்ற உன்னதப் பாடத்தை நமக்குக் கற்றுத் தருகிறது.

பெயருக்குத் தியாகம் செய்வது என்பதற்கும் உண்மையான தியாகம் என்பதற்கும் உள்ள வேறுபாடு இது தான்!

இன்றைய பல தலைவர்கள் பெயருக்குப் பல விஷயங்களைத் தியாகம் செய்கின்றனர். அந்த தியாகத்தினால் அவர்களுக்கு ஒரு நஷ்டமும் ஏற்படப்போவதில்லை.

இன்னொரு விஷயம் யாருக்குமே தெரியாமல் அந்தரங்கமாய் அவர் செய்த செயலானது, அவருக்குப் புகழைப் பெற்றுத் தரப்போவதில்லை என்பதையும் அவர் அறிந்ததே தான்.

ஒரு சிறந்த தலைவராக மாறுவதற்கான உத்வேகத்தைப் பெறுங்கள்.

தலைமை தாங்கும் போது உருவாகும் சின்னச் சின்ன கணங்களும் கூட குழுவின் நெருக்கத்தை அதிகமாக்க உதவும். அவை யாராலும் பார்க்கப்படாமல் கூட இருக்கலாம். அந்தச் சிறிய கணங்கள் தாம் வாழ்நாள் முழுவதும் அதை அனுபவித்தவருக்கு நினைவில் இருக்கும்.

ஷாகில்டனுக்கோ இது வழக்கமான ஒரு செயலாகத் தான் இருந்தது. குழுவினருடன் அனைத்தையும் பகிர்வது, ஒரே டெண்டில் உறங்குவது இவையெல்லாம் அண்டார்டிகா பனிச்சறுக்கு சாகஸத்தின் ஒரு அங்கமாகவே இருந்தது.



இந்த பிஸ்கட் சம்பவம் அனைவருக்குமான ஒரு உதாரணமாகவும், குறிப்பாகத் தலைமைப் பொறுப்பை ஏற்பவர்களுக்கான சிறப்பான செயலாகவும் திகழ்கிறது.

தன் சகாவுக்காக தன்னையே இழக்கக்கூடத் தயாராக இருக்கும் இந்த பிஸ்கட் சம்பவம் ஒவ்வொரு தலைவரும் கடைப்பிடிக்க வேண்டிய உன்னத வழிமுறையாகும், இல்லையா?!

உண்மையான தலைவர்களின் தியாக மனப்பான்மை மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகளில் எப்படி முடிவெடுக்க வேண்டும் என்ற தெளிவான புரிதலைப் பெற்று, உங்கள் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கையில் ஒரு சிறந்த தலைவராக மாறுவதற்கான உத்வேகத்தைப் பெறுங்கள்.

PTA முதல் PS-TB வரை: இலங்கை பெயரினை மட்டுமே மாற்றுகிறதா?

1979 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ஒழிப்பதற்கு அதிபர் அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கம் முடிவு செய்துள்ளதன் மூலம் இலங்கையின் பல தசாப்த கால அசாதாரண பாதுகாப்புச் சட்டங்கள் ஒரு திருப்புமுனையை எட்டியுள்ளன.

இதற்குப் பதிலாக பாதுகாப்புப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலத்தை“ அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

இருந்தபோதிலும், சர்வதேச மன்னிப்புச் சபை நடத்திய முழுமையான சட்டப்பூர்வ பகுப்பாய்வு மற்றும் குடிமைச் சமூகங்கள் மற்றும் சட்ட நிபுணர்களின் ஆய்வுகள், மாநில அடக்குமுறை மரபுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்குப் பதிலாக நவீனமயமாக்கப்பட்ட சட்ட வடிவத்தின் கீழ் தன்னிச்சையான நிறைவேற்று அதிகாரங்களை இந்த புதிய சட்டம் நிலைநிறுத்த முற்படுவதாகக் குறிப்பிடுகின்றன.

உள்நாட்டு குடிமக்கள், வெளிநாட்டு பார்வையாளர்கள் மனித உரிமை பாதுகாவலர்கள் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு இந்தச் சட்டமூலம் மனித உரிமைகள், நீதித்துறை சுதந்திரம் மற்றும் இலங்கையின் பரந்த பொருளாதார ஸ்திரத்தன்மை ஆகியவற்றில் தொலைநோக்கு தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்று கூறுகின்றனர்.

புதிய சட்டமூலத்தைச் சுற்றியுள்ள கவலைகளைப் புரிந்து கொள்ள அது மாற்ற முற்படும் சட்டத்தின் வரலாற்றை ஆராய வேண்டும்.

1979 ஆம் ஆண்டில் உள்நாட்டு அமைதியின்மையின் தொடக்கத்தில் தற்காலிக அவசரகால நடவடிக்கையாக இயற்றப்பட்ட PTA, 1982 ஆம் ஆண்டில் நிரந்தரமாகச் சட்டமாக்கப்பட்டதுடன், நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கையின் பாதுகாப்புக் கட்டமைப்பின் மூலக்கல்லாக மாறியது.

வரலாற்று ரீதியாக, முறையான மாநில அடக்குமுறை தன்னிச்சையான கைதுகள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான முதன்மைக் கருவியாக PTA செயல்பட்டது.

இச்சட்டம் இன சிறுபான்மையினர் அரசியல் கருத்து வேறுபாடு உடையவர்கள், ஊடகவியலாளர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக விகிதாசாரமின்றி பயன்படுத்தப்பட்டது என்று பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர்.

ீவுயு இன் கீழ் முறையான குற்றச்சாட்டுகள் அல்லது அர்த்தமுள்ள நீதித்துறை மறுஆய்வு இல்லாமல் பாதுகாப்பு அமைச்சரால் வெளியிடப்படும் நிர்வாகத் தடுப்புக் கட்டளைகளின் கீழ் தனிநபர்கள் 18 மாதங்கள் வரை தடுத்து வைக்கப்படலாம்.

மூத்த பொலிஸ் அதிகாரிகளிடம் செய்யப்படும் வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இச்சட்டம் தனித்துவமாக மாற்றியது, இது சித்திரவதைகள், கட்டாயப்படுத்தப்பட்ட வாக்கு மூலங்கள் மற்றும் நீட்டிக்கப்பட்ட தனிமைச் சிறைவாசம் ஆகியவற்றுக்கான கட்டமைப்பு ஊக்கங்களை உருவாக்கியது.

பரந்த விலக்கு விதிகள் மூலம் பாதுகாப்புப் பணியாளர்களைப் பாதுகாப்பதன் மூலமும், சந்தேக நபர்களுக்கு சட்ட உதவி அல்லது பிணையை உடனடியாக வழங்கு மறுப்பதன் மூலமும், அரச தரப்பினர் ஏறக்குறைய முழுமையான தண்டனையிலிருந்து விலக்கு பெற்றுச் செயல்பட ீவுயு வழிவகுத்தது, இதனால் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட நிவாரணம் பெற முடியாமல் போனது.

தொடர்ச்சியான அரசாங்கங்களின் தொடர்ச்சியான வாக்குறுதிகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட வெளிப்படையான உறுதிமொழிகள் இருந்தபோதிலும், PTA தொடர்ந்து தீவிரமாகப் பயன்படுத்தப்பட்டது, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டிலும் டஜன் கணக்கான தடுப்புக் காவல்களை மனித உரிமைத் தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மாநிலப் பாதுகாப்புப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலம் 2025 இன் பிற்பகுதி போன்ற முந்தைய சட்ட வடிவங்களுடன் ஒப்பிடும்போது சிறிய மாற்றங்களை அறிமுகப்படுத்துகிறது.

குறிப்பாக, புதுப்பிக்கப்பட்ட வரைவு, அமைப்புகளைத் தடை செய்வது தொடர்பான நிர்வாக முடிவுகள் மீது நீதித்துறை மேற்பார்வையைப் புகுத்துகிறது மற்றும் தேசிய இறையாண்மையை மீறும் நோக்கத்திலான செயல்களை முன்னர் குற்றமாக்கிய தெளிவற்ற விதிகளை நீக்குகிறது.

இருந்தபோதிலும், சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டுவது போல, புதிய சட்டமூலம் குறிப்பிடத்தக்க சாம்பல் நிறப் பகுதிகளையும் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்குக் குறைவான கட்டமைப்பு குறைபாடுகளையும் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

”அதிகாரிகளால் கருத்து வேறுபாடுகள், அரசாங்க விமர்சகர்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிராக மீண்டும் மீண்டும் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தையும் திருத்துவதற்கான எந்தவொரு முயற்சியும் மிகுந்த துல்லியமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்” என்று சர்வதேச மன்னிப்புச் சதியின் தெற்காசிய பணிப்பாளர் ஸ்மிருதி சிங் கூறினார்.



”புதிய சட்டமூலம் இந்த அடக்குமுறை மரபிலிருந்து துண்டித்துக் கொள்ள வேண்டுமே தவிர, அதிகாரிகளுக்கு கருத்து வேறுபாடுகளை மௌனமாக்க புதிய கருவிகளை வழங்கக்கூடாது.”

”தீவிர மனித உரிமை கவலைகள்”

“இது போன்ற சட்டங்களை துஷ்பிரயோகம் செய்யும் இலங்கையின் வரலாறு வலுவான, அமல்படுத்தக் கூடிய பாதுகாப்புகளை அவசியமாக்குகிறது, ஆனால் இவை சட்டமூலத்தில் போதுமான அளவு கவனிக்கப்படவில்லை, இது தீவிர மனித உரிமை கவலைகளை ஏற்படுத்துகிறது.”

முந்தைய வரைவுகளை விட குறுகியதாக இருந்தாலும், PS-TB இல் பயங்கரவாதத்தின் வரையறையானது ஆபத்தான முறையில் விரிவடையும் தன்மையைக் கொண்டுள்ளது.

அமைதியான போராட்டங்கள், தொழிற்சங்க நடவடிக்கைகள், குடிமைசார் வக்காலத்துகள் அல்லது மருத்துவ மற்றும் மனிதாபிமான உதவிகள் ஆகியவை பயங்கரவாதக் குற்றங்களாக வகைப் படுத்தப்படுவதிலிருந்து சட்டமூலம் வெளிப்படையாக விலக்கவில்லை.

மாறாக, அத்தகைய நடவடிக்கைகள் தாங்களாகவே ஒரு குற்றத்தை நிரூபிக்கப் போதுமானவை அல்ல என்று மட்டுமே அது குறிப்பிடுகிறது, இந்தத் தகுதிநிலை அகநிலை விளக்கத்திற்கும் குடிமைசார் கருத்து வேறுபாடுகளை சாத்தியமான முறையில் குற்றமாக்குவதற்கும் கணிசமான இடத்தை விட்டுச்செல்கிறது.

மேலும், கணிசமான பொருளாதார இழப்புக்கான எளிய சாத்தியக்கூட்டை ஏற்படுத்தும் செயல்களுக்கு இச்சட்டமூலம் தண்டனை அளிக்கிறது, இது பாரிய வேலைநிறுத்தங்கள் அல்லது முற்றுகைகளைப் பயங்கரவாதச் செயல்களாக வகைப்படுத்தக் கூடிய குறைந்த வரம்பை ஏற்படுத்துகிறது.

”குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதற்கு முன்பு ஒருவரை ஒரு வருடம் வரை தடுத்து வைக்க அனுமதிக்கப படுவது, மேலும் ஒரு வருட காலம் விசாரணைக் கைதியாகத் தடுத்து வைக்கப்படும் சாத்தியக்கூறுடன் சேர்ந்து, தன்னிச்சையான தடுப்புக் காவல் மற்றும் நியாயமான விசாரணைக்கான உரிமை குறித்த கடுமையான கவலைகளை எழுப்புகிறது. வழக்கு விசாரணையை மாநிலம் தாமதப்படுத்தும் அதேவேளையில் யாரும் தடுப்புக் காவலில் ஆண்டுகளில் காலத்தைக் கழிக்கக் கூடாது” என்று ஸ்மிருதி சிங் கூறினார்.

“இலங்கை நாடாளுமன்றம் இந்த சட்டமூலத்தை வாபஸ் பெற்று, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப சட்டத்தை சீர்திருத்துமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இது செய்யப்படும் வரை, PTA மேலும் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது.”

பரந்த வரையறைகளுக்கு மேலதிகமாக, முன்மொழியப்பட்ட சட்டத்திற்குள் உள்ள நடைமுறைப் பாதுகாப்புகள் ஆழமாக சமரசம் செய்யப்பட்டுள்ளன.

விசாரணைக்கு முந்தைய சுதந்திர இழப்பின் ஒட்டுமொத்த இரண்டு ஆண்டு காலமானது, குற்றமற்றவர் என்ற அனுமானம், நியாயமான காலக்கெடுவுக்குள் நியாயமான விசாரணைக்கான உரிமை மற்றும் தன்னிச்சையான தடுப்புக் காவலில் இருந்து பாதுகாப்பு ஆகியவற்றைக் கடுமையாக பலவீனப்படுத்துகிறது.

மேலும், தடுப்புக் கட்டளைகளின் சட்டபத்திறமையை ஆய்வு செய்ய ஒரு மறுஆய்வுக் குழுவை சட்டமூலம் அமைத்தாலும், அதன் உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சரால் நேரடியாக நியமிக்கப்படுகிறார்கள், அதாவது நிர்வாகத்தால் நியமிக்கப்பட்ட குழுவானது வழக்கமான குற்றவியல் நீதி அமைப்பிற்குள் சுதந்திரமான, பக்கச்சார்பற்ற நீதித்துறை மேற்பார்விக்கு மாற்றாக இருக்க முடியாது.

பரந்த பொலிஸ் அதிகாரங்கள்

தேடுதல், கைது செய்தல் மற்றும் பறிமுதல் செய்யும் அதிகாரம் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரங்களை ஆயுதப் படைகள் மற்றும் கடலோர காவல்படைக்கும் இந்த வரைவு நீட்டிக்கிறது, அதே நேரத்தில் சந்தேக நபர்களின் சலுகைகளுக்குப் பதிலாக இருபது ஆண்டுகள் வரை வழக்குத் தொடர்வதை ஒத்திவைக்க அல்லது தற்காலிகமாக நிறுத்த உயர் நீதிமன்ற ஒப்புதலுடன் அட்டர்னி ஜெனரலுக்கு அதிகாரம் அளிக்கிறது, இதனால் தனிநபர்கள் பல தசாப்தங்களாக வழக்கு விசாரணைக்கு முகங்கொடுக்கும் நிலைக்கு ஆளாகின்றனர்.

தற்போதைய வடிவில் PS-TB இன் நிறைவேற்ற மானது அரசியல், சமூக மற்றும் பொருளாதார துறைகளில் ஆழமான அபாயங்களைக் கொண்டுள்ளது.

உள்நாட்டு பொதுமக்கள் மற்றும் குடிமைச் சமூகத்திற்கு, தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் குடிமைசார் வக்காலத்துகளை வெளிப்படையாகப் பாதுகாக்கத் தவறுவதன் மூலம் ஜனநாயக வெளிப்பாட்டின் மீது ஒரு அச்சுறுத்தல் தாக்கத்தை உருவாக்குவதற்கு சட்டம் வழிவகுப்பதாக கூறுகின்றனர், அரசாங்கக் கொள்கைகளை எதிர்க்கும் போதெல்லாம் குடிமக்களையும் அரசு சாரா நிறுவனங்களையும் ஆயுதமேந்திய சட்ட நடவடிக்கைகளின் நிரந்தர அச்சுறுத்தலுக்கு இது வெளிப்படுத்துகிறது.

வெளிநாட்டு பிரஜைகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு, பொலிசாருக்கு பரவலான கைது அதிகாரங்களை வழங்கும் மற்றும் குற்றச்சாட்டு இல்லாமல் நீட்டிக்கப்பட்ட தடுப்புக் காவலுக்கு அனுமதிக்கும் மிகப்பரந்த பாதுகாப்பு விதிகள், உணர்வுபூர்வமான அரசியல் சூழல் மாற்றங்களின் போது அதிகார வரம்பு அபாயங்களை அதிகரிக்கின்றன.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேச வர்த்தக பங்காளிகள் நீண்டகால உறுதிப்பாட்டிற்கு அவசியமான நிறுவன ஸ்திரத்தன்மை மற்றும் கணிக்கக்கூடிய சட்டத்தின் ஆட்சியை கருத்தில் கொள்ள வேண்டும்.

நிறைவேற்று அதிகார வரம்பை அனுமதிக்கும் தேசிய பாதுகாப்பு கட்டமைப்பு நிறுவன ஆளுமை தரநிலைகளையும், மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுமை (ESG) இணக்கத்தையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

முக்கியமாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் அளவுகோல்களுடன் சீரமைக்கத் தவறுவது, ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP+ வரிச்சலுகை திட்டம் போன்ற முக்கிய சர்வதேச மாநாடுகளுடன் இணங்குவதைச் சார்ந்துள்ள இலங்கையின் முக்கிய ஏற்றுமதி விருப்பத் தேர்வுக்கான அணுகலை ஆபத்தில் ஆழ்த்துகிறது.

PTA ஐ மாற்றுவது என்பது மாநிலத்தால் அனுமதிக்கப்பட்ட தண்டனையற்ற காலப்பகுதியுடன் இலங்கையின் உறுதியான முறிவைக் குறிப்பதாக இருந்தது.

இருந்தபோதிலும், மாநிலப் பாதுகாப்புப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலம் உச்ச நீதிமன்றத்தில் அரசியலமைப்பு ஆய்வு மற்றும் நாடாளுமன்ற விவாதத்தை நோக்கி நகரும் போது, முன்மொழியப்பட்ட சட்டம் நிறைவேற்று அதிகாரத்தை மீண்டும் பொட்டலம் கட்டுகிறது என்பதை சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் சட்ட நிபுணர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.

பாதுகாப்பான, நிலையான மற்றும் பொருளாதார ரீதியாக செழிப்பான சமூகத்தை உருவாக்குவதற்கு, ஐ.நா தரநிலைகளுடன் கண்டிப்பாக சீரமைக்கப்பட்ட, பயங்கரவாதக் குற்றங்களை தெளிவாக வரையறுக்கும், நீதித்துறை மேற்பார்வையைப் பாதுகாக்கும், அமைதியான கருத்து வேறுபாடுகளைப் பாதுகாக்கும் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் கீழ் சமமான பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பு இலங்கைக்கு தேவைப்படுகிறது.

கனடா மீது வரி விதித்த டிரம்பை எள்ளி நகையாடிய ஒபாமா



ஒஹியோவில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களுக்கான பிரச்சாரக் கூட்டத்தில் சனிக்கிழமை உரையாற்றிய முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, கனடா மீதான அதிபர் டொனால்ட் டிரம்பின் வரி விதிப்பைச் சுட்டிக்காட்டி உரையாடினார். "அவர்கள் வடக்கில் உள்ள நமது அன்பான அண்டை வீட்டாரைப் போன்றவர்கள் அவரோ அவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறாரா?"

சனிக்கிழமையன்று முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, டிரம்ப் நிர்வாகத்தின் வரி விதிப்பு முறையைக் கடுமையாக விமர்சித்ததோடு, நீண்டகால நட்பு நாடான கனடாவுடன் வர்த்தகப் போரில் ஈடுபடுவதன் விசித்திரத்தனத்தைக் கேலி செய்தார்.

"அவர் இப்போது தொடங்கும் பெரிய வர்த்தகப் போர், மிகவும் புகழ்பெற்ற அந்த "தீய சாம்ராஜ்யமான" கனடாவுடன் தான்," என்று கிளீவ்லேண்டில் நடைபெற்ற ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களின் பிரச்சாரக் கூட்டத்தில் ஒபாமா கூறினார்.

"இவர்கள்தான் நமக்கு ஆயிடந ளுலசரி மற்றும் Martin Short அளித்தவர்கள்... அவர்கள் மிகவும் நல்ல மனிதர்கள்," என்று அவர் நகைச்சுவையாகக் கூறினார். "அவர்கள் வடக்கில் உள்ள நமது அன்பான அண்டை வீட்டார், அவரோ அவர்களுடன் வம்புக்குச் செல்கிறாரா?"

அமெரிக்க இடைக்காலத் தேர்தலுக்கு முன்னதாக ஜனநாயகக் கட்சியினருக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்து வரும் ஒபாமா, டொனால்ட் டிரம்பின் வரிக் கொள்கையைப் பொதுப்படையாகவும் விமர்சித்தார். இந்த வரிகள், விலையேற்றத்தால் சுமையைச் சுமக்கும் அமெரிக்க நுகர்வோர் மீது எதிர்பார்த்த எதிர்மறையான தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளன என்று அவர் கூறினார்.

அதிகரித்து வரும் இந்த விலையேற்றம் இடைக்காலத் தேர்தலில் குடியரசுக் கட்சியினரின் வெற்றி வாய்ப்புகளை, குறிப்பாக எல்லை மாநிலங்களில் பாதித்துள்ளது. இதன் காரணமாக, சில கனடிய பொருட்கள் மீதான வரியை நீக்க திட்டமிட்டுள்ளதாக டிரம்ப் வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளார்.

அமெரிக்க இடைக்காலத் தேர்தலுக்கு முன் கனடா மீதான சில வரிகளை நீக்க டிரம்ப் நடவடிக்கை:

அமெரிக்க இடைக்காலத் தேர்தலுக்கு முன்னதாக, டிரம்ப் நிர்வாகம் சில கனடிய பொருட்கள் மீதான 50 சதவீத வரியை நீக்கி வருகிறது, ஆனால் மற்ற பொருட்கள் மீது புதிய வரிகளைச் சேர்க்கிறது. ஒரு வர்த்தக ஒப்பந்தம் விரைவில் எட்டப்படலாம் என்று அதிபர் சூசகமாகத் தெரிவித்தார், ஆனால் பிரதமர் ஆயசம ஊயசநெல இதில் அதிக எச்சரிக்கையுடன் உள்ளார்.

கனடா-அமெரிக்க வர்த்தக அமைச்சர் Dominic LeBlanc சிபிசி நியூஸின் "பவர் ரூ பாலிடிக்ஸ்" நிகழ்ச்சியில் பேசுகையில், நவம்பர் 3 ஆம் தேதி வாக்களிப்பிற்கு முன்னர் எந்தவொரு ஒப்பந்தமும் எட்டப்படும் என்று ஒட்டாவா எதிர்பார்க்கவில்லை என்று கூறினார்.

சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல் மற்றும் வர்த்தக சமநிலையின்மையை எதிர்ப்பதாகக் கூறி கடந்த ஆண்டு டிரம்ப் முதன்முதலில் வரி விதிப்புப் பிரச்சாரத்தைத் தொடங்கியதிலிருந்தே அமெரிக்காவும் கனடாவும் பரஸ்பர வரி விதிப்பில் ஈடுபட்டு வருகின்றன. ஆகஸ்ட் மாதத்தில் இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் முறிந்தன.

டிரம்ப் தனது பிரச்சாரக் கூட்டப் பேச்சுகளில் கனடாவைத் தொடர்ந்து சாடி வருகிறார்.

"ஒரு கட்டத்தில், நாம் ஒரு அற்புதமான ஒப்பந்தத்தை செய்யப் போகிறோம்," என்று அக். 17 அன்று கென்டக்கியில் உள்ள ஹைலேண்ட் ஹைட்ஸில் நடைபெற்ற கூட்டத்தின் போது டிரம்ப் கூறினார்.

"ஆனால் பல ஆண்டுகளாக நாம் கோடிக்கணக்கான டாலர்களை இழந்துள்ளோம், அவர்கள் மிகவும் துணிச்சல் அடைந்துவிட்டதாக உணர்ந்தார்கள்."

முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை "தோல்வியடைந்தவர்" என்று அழைத்த டிரம்ப், அவருக்குப் பின் வந்த மார்க் கார்னியை இலக்கு வைத்துப் பேசியபோது ஆதரவாளர்கள் ஆரவாரம் செய்தனர்.

BEHIND ME MEDIA

பங்களாதேஷ் பெண்ணைச் சுரண்டிய 2 Saskatchewan ஆண்களுக்குச் சிறை

ஸ்காட்செவ Saskatchewan னில் இரண்டு ஆண்களால் கடத்தப்பட்டு, சுரண்டப்பட்டு - அவர்களில் ஒருவரால் பலமுறை பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பங்களாதேஷ் பெண் ஒருவர், தான் இப்போது அச்சத்துடன் வாழ்வதாகவும், யாரையும் நம்ப முடியாமல் தவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

"என்னால் அவர்களை மறக்க முடியாது. அவர்கள் என் கனவைத் தடுத்துவிட்டார்கள். என் வாழ்க்கையை அழித்துவிட்டார்கள். என் கௌரவம், என் எதிர்காலம், என் குடும்பம், என் தொழில்வாழ்க்கை அனைத்தையும் பாழாக்கிவிட்டார்கள்" என்று அந்தப் பெண் தனது பாதிக்கப்பட்டவர் வாக்குமூலத்தில் எழுதியுள்ளார்.

மொஹமட் (எம்.டி.) மாசும் (45) மற்றும் சோஹேல் ஹைதர் (56) ஆகிய இருவருக்கும் மனித கடத்தல் குற்றச்சாட்டுகள் உறுதிசெய்யப்பட்ட நிலையில், தண்டனை விபரங்களுக்காக வியாழக்கிழமை சஸ்காடூன் மாகாண நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

நீதிபதி எளிய முறையில் "பாலியல் பலாத்காரம்" என வகைப்படுத்திய மூன்று பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டுகளிலும் மாசும் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டார். நீதிமன்ற உத்தரவுப்படி பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளம் வெளியிடப்படாமல் பாதுகாக்கப்படுகிறது.

அவரது பெயர் வெளியிடப்படாதபோதிலும், பங்களாதேஷில் உள்ள தனது சொந்த ஊரில் பரவிய வதந்திகளால் தனது குடும்பத்தின் கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தனது உடன் பிறந்தவர்களின் எதிர்காலம் பாழாகிவிட்டதாகவும் அவர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தான் முன்பு சுயசார்புடனும், சுயமாக வாழக்கூடியவராகவும் இருந்ததாகவும், ஆனால் இப்போது மற்றவர்களின் உதவியை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அந்தப் பெண் கூறியுள்ளார். ஒரு வாடிக்கையாளருக்கு விற்கப்படும் ஒரு பொருளைப் போல உணர்ந்த கனடாவுக்கு வந்த தனது முடிவையே அவர் இப்போது கேள்விக்குட்படுத்துகிறார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் ஆகஸ்ட் 1, 2022 முதல் மார்ச் 31, 2023 வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கியவை. தற்காலிக வெளிநாட்டு ஊழியராக கனடாவில் தங்குவதற்கு உதவும் வகையில் உணவகம் ஒன்றில் வேலை தருவதாகக் கூறப்பட்டதை அடுத்து அந்தப் பெண் சஸ்காட்செவனுக்கு வந்துள்ளார்.

அவர் முதலில் Gull Lake ஹைதர் நடத்தி வந்த உணவகத்தில் பணியாற்றினார், பின்னர் வுளைனயடந லில் மாசும் நடத்தி வந்த உணவகத்திற்கு வேலைக்கு அனுப்பப்பட்டார். அந்தப் பெண்ணுக்கு முறையான வேலை அனுமதிப் பத்திரங்களை அவர்கள் வைத்திருக்கவில்லை, ஆனால் அதற்கான வேலைகளைச் செய்து வருவதாகக் கூறினர். அவருக்கு முறையான ஊதியம் வழங்கப்படவில்லை என்பதோடு, வாரத்தில் ஆறு நாட்கள் நீண்ட நேரம் வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இறுதியில் அவருக்கு வேலை அனுமதிப் பத்திரம் கிடைத்தபோது, அது நுடசழளந உள்ள வேறு ஒரு உணவகத்திற்காக இருந்தது. அங்கு வந்து சேர்ந்த சிறிது நேரத்திலேயே, அவர் நிலைமையைக் கண்டு கவலையடைந்த சிலரின் உதவியுடன் அங்கிருந்து தப்பிச் சென்றார்.

நம்பிக்கை துரோகம் இழைக்கப்பட்டுள்ளது: அரசுத்தரப்பு வாதம்
மனித கடத்தல் குற்றத்திற்கு குறைந்தபட்சம் 4 ஆண்டுகள் கட்டாயச் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

அரசுத்தரப்பு வழக்கறிஞர் லெஸ்லி டன்னிங் வாதாடுகையில், மாசும் செய்த குற்றங்களுக்கு - ஒரு மனித கடத்தல் மற்றும் மூன்று பாலியல் வன்கொடுமைகள் - மொத்தமாக 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றும், மனித கடத்தலுக்காக ஹைதருக்கு 5.5 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றும் கோரினார்.

குற்றவாளிகள் இருவருமே அந்தப் பெண்ணின் நம்பிக்கைக்குரிய மற்றும் அதிகாரமிக்க இடத்தில் இருந்துகொண்டு, அவர் சஸ்காட்செவனுக்கு வந்த பிறகு "அவரது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும்" தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து அந்த நம்பிக்கையைத் துஷ்பிரயோகம் செய்ததாக டன்னிங் வாதிட்டார்.

மேலும், உடல்ரீதியான வன்முறைகள் உட்பட பல பாலியல் வன்கொடுமைகள் மூலம் மாசும் அந்தப் பெண்ணை "தனது சுய பாலியல் இன்பத்திற்காக" சுரண்டியுள்ளார் என்றும் டன்னிங் சுட்டிக்காட்டினார்.

மாசும்-ன் வழக்கறிஞர் சக்கரி கார்ட்டர், 7 முதல் 9 ஆண்டுகள் வரையிலான தண்டனையே போதுமானது என்றும், அதுவே ஒரு "குறிப்பிடத்தக்க" தண்டனை என்றும் வாதிட்டார்.

ஹைதரின் வழக்கறிஞர் கிறிஸ் கிரேட்டன், தண்டனையை உயர்த்தக்கூடிய கூடுதல் தீவிரமான காரணிகள் ஏதும் இல்லாததால், குறைந்தபட்ச கட்டாயத் தண்டனையான 4 ஆண்டுகளை வழங்குமாறு வாதிட்டார்.

நீதிபதி மிகுயல் மார்ட்டினெஸ் வியாழக்கிழமை பிற்பகலில் தனது தண்டனைத் தீர்ப்பை வழங்கினார்.

ஹைதருக்கு குறைந்தபட்ச கட்டாயத் தண்டனையான 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற கிரேட்டனின் வாதத்தை நீதிபதி ஏற்றுக்கொண்டார்.

மாசும்-க்கு மொத்தமாக 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

கனேடிய - அமெரிக்க வர்த்தகம் குறித்துக் கலந்துரையாடல்?

எல்லை தாண்டிய வர்த்தகம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடன் புதன்கிழமை காலை தான் தொடர்பில் இருந்ததாகக் கனடியப் பிரதமர் Mark Carney தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தேர்தலில் கனடா தலையிடுவதாக அமெரிக்க அதிகாரிகள் குற்றம் சாட்டி வரும் நிலையில், புதன்கிழமை காலை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடன் உரையாடியதாகப் பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து விரிவாகக் கேட்கப்பட்டபோது, "வர்த்தகம் தொடர்பான விஷயங்கள்" குறித்து விவாதித்ததாகக் குறிப்பிட்டார்.

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த அமெரிக்க இடைக்காலத் தேர்தல் விரைவாக நெருங்கி வரும் நிலையிலும், இரு நாடுகளுக்கும் இடையே நீடித்து வரும் வர்த்தகப் போருக்கு மத்தியிலும், கனடா இன்னும் அமெரிக்கர்களுடன் புதிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டவில்லை.

"நாங்கள் பரந்த அளவிலான விஷயங்கள், பல பிரச்சினைகள் மற்றும் ஈரானில் உள்ள சூழ்நிலை குறித்து விவாதித்தோம்" என்று கார்னி கூறினார்.

"சில நாட்களுக்கு முன்பு நாங்கள் உக்ரைன் பற்றியும் அங்குள்ள அம்சங்கள் பற்றியும் பேசினோம்," என்று அவர் மேலும் கூறினார். "மத்திய கிழக்கிலுள்ள பிற அம்சங்கள் குறித்தும் பேசினோம், மேலும் வர்த்தகம் தொடர்பான சில விஷயங்கள் குறித்தும் பேசினோம்."

ஒன்டாரியோ முதலமைச்சர் Doug Ford உடன் இணைந்து புதன்கிழமை ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே பிரதமர் இந்த கருத்துக்களைத் தெரிவித்தார். வர்த்தகப் போரினால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு ஆதரவாக $9 பில்லியன் நிதியுதவியை இவர்கள் இருவரும் அறிவித்தனர்.

இதற்கிடையில் அமெரிக்க அரசியல் களத்தில் கனடாவின் செயல்பாடுகளைத் தங்கள் அரசாங்கம் கண்காணித்து வருவதாகக் கூறி அமெரிக்க அதிகாரிகள் புதன்கிழமை தகவல் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அந்த அறிக்கை தொழில்துறை அமைச்சர் மெலனி ஜோலி ஐந்து முறை குறிப்பிடப்பட்டுள்ளது உட்பட கனடிய அதிகாரிகளின் ஆவணங்கள் மற்றும் தோற்றங்களைச் சுட்டிக்காட்டி அவற்றை இடைக்காலத் தேர்தலில் தலையிடுவதற்கான எடுத்துக்காட்டுகள் எனக் உரிமை கோருகிறது.

கனடாவின் பதில் வரி விதிப்புகளால் குடியரசுக் கட்சியின் மாகாணங்களை அதிகம் பாதிக்கும் தயாரிப்புகளைக் கனடா இலக்கு வைப்பதாக ஜோலி கூறியது, மற்றும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ரீகனைக் குறிப்பிட்ட சர்ச்சைக்குரிய ஒன்டாரியோவின் வரிக் குறைப்பு விளம்பர பிரச்சாரம் ஆகியவை இதில் சில உதாரணங்களாகும்.

அமெரிக்க இடைக்காலத் தேர்தலுக்கு முன்னதாக அமெரிக்க அரசியலில் தலையிட வேண்டாம் என்று கனடாவிற்கான அமெரிக்க தூதர் பீட் ஹோக்ஸ்ட்ரா கனடியர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கனடாவிற்கான அமெரிக்க தூதர், "The Reality big show" அளித்த பேட்டியில் இதேபோன்ற எச்சரிக்கையை விடுத்தார்.

அதில் அவர் கனடிய அரசியல்வாதிகளை அமெரிக்க அரசியலில் இருந்து விலகி இருக்குமாறு எச்சரித்ததுடன், "அமெரிக்க இடைக்காலத் தேர்தலில் சாத்தியமான அரசியல் தலையீட்டை" அமெரிக்க அதிகாரிகள் கண்காணித்து வருவதாகவும் கூறினார்.

திங்களன்று இடம்பெற்ற Alberta வின் தனிநாடு தொடர்பான கருத்துக்கணிப்பில் அமெரிக்காவின் தலையீடு குறித்து கனடாவில் கவலைகள் எழுந்த சில வாரங்களிலேயே இந்தக் குற்றச்சாட்டு வந்துள்ளது.

பிரிவினைவாதத் தலைவர் என்று அழைக்கப்படும் Jeffrey Roth சில மாதங்களுக்கு முன்பு CTV நேர்காணலில் தான் அமெரிக்க வெளியுறவுத்துறை அதிகாரிகளைச் சந்தித்ததாகக் கூறினார்.

மேலும் இந்த மாத தொடக்கத்தில் Alberta - Prosperity Project இன் தலைவரான Jeffrey Roth முக்கிய பிரிவினைவாதத் தலைவர்களுக்கும் அமெரிக்காவில் உள்ள குடியரசுக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விரிவான புலனாய்வுச் செய்தியொன்றை Globe and Mail வெளியிட்டது.

புதன்கிழமை வெளியிடப்பட்ட தகவல் அறிக்கை குறித்த கேள்விக்குப் பதிலளித்த கார்னி, "இந்த வர்த்தக நடவடிக்கைகளைத் தொடங்கியதே அமெரிக்காதான்" என்று கூறினார்.



"கனடிய வேலை வாய்ப்புகளைப் பாதுகாக்கவும், கனடிய நிறுவனங்களைப் பாதுகாக்கவும், எங்களது பொருளாதாரத்தை மேம்படுத்தவும் நாங்கள் அதற்குப் பதிலளித்துள்ளோம்" என்றும் அவர் மேலும் கூறினார்.

புதன்கிழமை இந்த கேள்விக்குப் பதிலளித்த Fort "அமெரிக்கத் தேர்தலில் தலையிடுவதில் எனக்கு எந்த விருப்பமும் இல்லை" என்று கூறினார்.

தொடரும் வர்த்தகப் போர் ஆகஸ்ட் மாதத்தில் வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் கடுமையாக முறிந்ததைத் தொடர்ந்து, இரு நாடுகளும் பரஸ்பரம் இறக்குமதிகள் மீது புதிய வரிகளை விதித்தன. அந்த நேரத்தில், டிரம்பும் அவரது நிர்வாகமும் கனடாவை அவமதிக்கும் வகையில் பல AI-ஆல் உருவாக்கப்பட்ட மீம்களை இணையத்தில் பதிவேற்றியதுடன் Lake Ontario - "அமெரிக்க ஏரி" என பெயர் மாற்றவும் முற்பட்டனர்.



பின்னர், செப்டம்பர் தொடக்கத்தில், டிரம்ப் கனடாவுக்கு எதிரான அமெரிக்க வர்த்தக நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினார். மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மதுபானங்கள் உட்பட சில கனடிய தயாரிப்புகளின் இறக்குமதியை முற்றிலுமாக தடை செய்ய புதிய நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

மேலும் கனடா இறுதியில் "51வது மாகாணமாக மாறும்" என்று டிரம்ப் கடந்த வாரம் கூறினார். இந்த அச்சுறுத்தலை அவர் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகக் கூறி வருகிறார்.

கனடா நம்மை மிகவும் மோசமாக நடத்துகிறது என்று அரினோசாவின் புல்ஹெட் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அவர் கூறினார். அவர்கள் எப்போதும் அப்படித்தான். ஆனால் இனி அப்படி இருக்காது. டிரம்ப் நகருக்குள் வந்த பிறகு இது முற்றிலும் வேறுபட்ட விளையாட்டு.

டிரம்புடன் தனிப்பட்ட அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் உட்பட வழக்கமாகப் பேசுவதாக கார்னி முன்னதாகக் கூறியிருந்தார். பரஸ்பர நன்மையளிக்கும் ஒப்பந்தத்தை எட்டுவதற்கு அமெரிக்காவுடன் "அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்த கனடா தயார்" என்று அவர் புதன்கிழமை மீண்டும் வலியுறுத்தினார்.

உலகக் கண்ணோட்டம்

BEHIND ME MEDIA

சவுதி அரேபியாவிற்கான பயண எச்சரிக்கையைப் புதுப்பித்த கனடா



சவுதி அரேபியாவின் தலைநகர விமான நிலையம் மீது தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு மத்தியில், அங்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு கனடியர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். "தொடர்ந்து நடைபெற்று வரும் ராணுவ நடவடிக்கை காரணமாக, ரியாத்தில் உள்ள King Khalid International Airport மற்றும் தம்மாமிலுள்ள King Fahd International Airport ஆகியவற்றுக்குச் செல்லும் அனைத்துப் பயணங்களையும் தவிர்க்கவும்" என்று கனாடாவின் Global Affairs Canada வியாழக்கிழமை வெளியிடப்பட்ட தனது பயண எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது. "சவுதி அரேபியாவில் உள்ள விமான நிலையங்கள் மீது நடத்தப்பட்ட ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்கள் பல விமான நிலையங்களின் இயக்கத்தைப் பாதித்துள்ளன மற்றும் விமானச் சேவைகளில் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளன."

கனடாவின் உலகளாவிய விவகாரங்கள் துறை சவுதி அரேபியாவிற்கான தனது பயண எச்சரிக்கையை அக்டோபர் 22, 2026 அன்று புதுப்பித்தது. கிங் காலித் சர்வதேச விமான நிலையம் தற்போது மூடப்பட்டுள்ளதுடன், மேலும் தாக்குதல்கள் நடைபெற்றால் சவுதி வான்வெளியும் மூடப்படலாம் என்று உலகளாவிய விவகாரங்கள் துறை மேலும் குறிப்பிட்டுள்ளது.

"கனடா அரசாங்கத்தின் உதவியை நம்பியிராமல், நாட்டை விட்டு வெளியேறுவதற்கான மாற்றுத் திட்டங்களைத் தயாராக வைத்துக் கொள்ளுங்கள்" என்று அந்த எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், சவுதி அரேபியாவின் Asir, Jazan மற்றும் Najran மாகாணங்களுக்கும், யேமன் எல்லைக்கு உட்பட்ட 30 கிலோமீட்டர் சுற்றளவுக்குள் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் "எந்தவொரு பயணத்தையும் தவிர்க்குமாறு" கனடியர்களை உலகளாவிய விவகாரங்கள் துறை எச்சரித்துள்ளது.

ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகள், ட்ரோன்கள் மற்றும் வழக்கமான ஆயுதங்களைப் பயன்படுத்தி சவுதி அரேபியாவுக்கு எதிராகப் போரிட்டு வருவதுடன், விமான நிலையத்தின் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஹூத்திகள் அரசிற்க்கு எதிராகப் போராடி வரும் நிலையில், பாதுகாப்புக் முன்னெச்சரிக்கையாக ரியாத்தில் உள்ள அலுவலக ஊழியர்களை வீட்டிலிருந்தே வேலை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

Ansarallah என்றும் அழைக்கப்படும் ஹூத்திகள், 2024 ஆம் ஆண்டில் Ottawa வால் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டனர். உள்ளூர் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும், பாதுகாப்பான இடங்களில் தங்குவதற்குத் தயாராக இருக்குமாறும், உள்ளூர் மற்றும் சர்வதேச நிலவரங்களைக் தொடர்ந்து கவனிக்குமாறும் பயணிகளுக்கு கனடா அறிவுறுத்துகிறது. "ராணுவ தளங்கள், செயல்பாடுகள் அல்லது சேதங்கள் தொடர்பான படங்களை எடுப்பது, புகைப்படம் எடுப்பது மற்றும் அவற்றை ஆன்லைனில் பகிர்வது போன்ற செயல்கள் இப்பகுதி முழுவதும் உள்ள உள்ளூர் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின் கீழ் கடுமையான தண்டனைகளுக்கு வழிவகுக்கும்" என்று அந்த அறிவிப்பு எச்சரித்துள்ளது. ஒட்டாவாவைப் போலவே அமெரிக்காவும் சவுதி அரேபியாவிற்கான தனது பயண எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. "ஈரான் ஆதரவு பெற்ற ஹூத்திகள், பொதுமக்கள் வாழும் விமான நிலையங்கள் மற்றும் பிற முக்கிய உள்கட்டமைப்பு மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட சவுதி அரேபியாவுக்கு எதிரான விரோதப் போக்கில் ஈடுபட்டுள்ளனர். இது பொதுமக்களின் உயிரிழப்புகளுக்கும் கடுமையான பயணத் தடைகளுக்கும் வழிவகுத்துள்ளது" என்று புதன்கிழமை வெளியிடப்பட்ட பாதுகாப்பு எச்சரிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. "இந்த விரோதப் போக்குகள் அந்த உடனடிப் பகுதிக்கு அப்பாலும் விரைவாக தீவிரமடையும் ஆற்றலைக் கொண்டுள்ளன.

பிரித்தானியாவைத் தாக்கியுள்ள ஆஸ்டன் புயல் பிரைட்டனின் வரலாற்றுச் சிறப்புமிக்க West Pier கடலுக்குள் இடிந்து வீழ்ந்தது!

பிரித்தானியாவைத் தாக்கியுள்ள ஆஸ்டன் (ளுவழசஅ யுரளவநெ) புயலின் சீற்றத்தால், இங்கிலாந்தின் தெற்குக் கடற்கரை நகரமான பிரைட்டனில் அமைந்துள்ள புகழ்பெற்ற றுநளவ ீநைச பாலத்தின் ஒரு பெரிய பகுதி வெள்ளிக்கிழமை காலை கடலுக்குள் இடிந்து வீழ்ந்துள்ளது.



கடுமையான காற்றுடன் எழுந்த ராட்சத அலைகள், ஏற்கனவே சேதமடைந்த நிலையில் காணப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பாலத்தின் இரும்புக் கட்டமைப்பைத் தாக்கியதைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தை நேரில் காணொளியாகப் பதிவு செய்த சைமன் ஹ.ஃபென்டன் (ளுஅைழெர்யககநனெநெ) என்பவரின் காட்சிகளில், கடலில் எழுந்த பாரிய அலைகள் West Pier கட்டமைப்பைத் தாக்குவதும், அதனைத் தொடர்ந்து பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுவதும் பதிவாகியுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக, பாலத்தின் வலதுபுற இணைப்புப் பகுதி கடுமையான அலைத் தாக்குதலால் சேதமடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தச் சம்பவம் பிரைட்டன் நகரின் வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாகத் திகழும் றுநளவ ீநைச-இன் எதிர்காலம் குறித்த கவலையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது.

ஆஸ்டன் புயல் காரணமாக Sussex உள்ளிட்ட தெற்கு இங்கிலாந்தின் பல பகுதிகளுக்கு பிரித்தானிய வானிலை ஆய்வு மையமான Met Office மஞ்சள் நிற எச்சரிக்கையை விடுத்துள்ளது. சில கடற்கரைப் பகுதிகளில் மணிக்கு 60 முதல் 70 மைல் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும், தென்மேற்கு இங்கிலாந்தின் அதிகம் வெளிப்படும் பகுதிகளில் மணிக்கு 80 மைல் வரையான காற்று வீசக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக வீசிய புயல்களாலும் கடல் அரிப்பாலும் அதன் பல பகுதிகள் இடிந்து விழுந்துள்ளன.

பாலத்தின் எஞ்சியுள்ள கட்டமைப்புகளும் படிப்படியாக இடிந்து விழும் நிலையில் இருப்பதாக றுநளவ ீநைச வுசரளவ ஏற்கனவே எச்சரித்திருந்தது.

ஆஸ்டன் புயலின் தாக்கம் தொடர்வதால் பிரைட்டன் உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகளுக்குச் செல்லும் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

ஷமோண்டா கால்நடை வைரஸ் மனிதனைத் தாக்கியது!



கால்நடைகளைப் பாதிக்கும் Shamonda (ஷமோண்டா) வைரஸ் மனிதர் ஒருவர் உடலில் கண்டறியப்பட்டுள்ளதாகவும், அந்த நபர் கடந்த மாதத் தொடக்கத்தில் உயிரிழந்துள்ளதாகவும் பிரான்ஸ் சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மனிதரைக் கால்நடை நோய் தாக்கியுள்ள முதல் சம்பவம் இதுவென்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

"ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் பல தசாப்தங்களாகப் பரவி வந்தாலும், ஷமோண்டா வைரஸ் இதற்கு முன்னர் மனிதர்களில் கண்டறியப்பட்டதே இல்லை" என்று பிரான்ஸ் சுகாதார மற்றும் விவசாய அமைச்சுகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

"தற்போது பொதுமக்களுக்கு எந்தவிதமான சுகாதார அச்சுறுத்தலும் கண்டறியப்படவில்லை" என்று தெரிவித்த அவர்கள், இந்த மனிதத் தொற்று என்பது "கடுமையாக நோயெதிர்ப்புச் சக்தி குறைந்த (immunocompromised) ஒரு நோயாளியைப் பாதித்த ஒரு விதிவிலக்கான நிகழ்வாகும்" என்றும் சேர்த்துக் கொண்டனர்.

இந்த வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

"தற்போதைய தகவல்கள் மற்றும் நெருங்கிய தொடர்புடைய பிற வைரஸ்களின் பரவல் குறித்த அறிவின்படி, இது ஒரு தனிப்பட்ட மனிதத் தொற்றாகும், மேலும் இது தற்போதைய நிலையில் பரவலாகப் பரவுவதற்கான வாய்ப்புகள் குறைவு" என்று உலக சுகாதார அமைப்பு Reuters செய்தி நிறுவனத்துக்கு அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

1960களின் நடுப்பகுதியில் நைஜீரியாவில் முதன முதலில் கண்டறியப்பட்ட இந்த ஷமோண்டா வைரஸ், பூச்சிகள் மூலம் பரவக்கூடிய Orthobunyavirus வகையைச் சேர்ந்தது. 138 இனங்களைக் கொண்ட இந்த வைரஸ் இனம், முக்கியமாகக் கால்நடைகளைக் குறிப்பாக மாடுகளைப் பாதிக்கிறது.

இது Culicoides எனப்படும் கடிக்கும் ஈக்கள் மூலம் பரவுகிறது.

இந்த வைரஸ் பல ஆண்டுகளாக ஆபிரிக்கா மற்றும் ஜப்பானில் உள்ள விலங்குகளிடம் கண்டறியப்பட்டு வருவதுடன், இந்த ஆண்டு ஐரோப்பா முழுவதும் பரவி வருகிறது. இதுவரை இது மனிதர்களுக்குப் பரவக்கூடியது என்று கருதப்படவில்லை.

பிரான்ஸ் விவசாய அமைச்சின் வலைப்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பின்படி, "விசாரணையின் இந்தக் கட்டத்தில், கிழக்கு பிரான்ஸில் குலிகொய்ட் ஈக்கள் கடித்ததன் மூலம் இது பரவியிருக்கலாம் என்பதே அனுமானமாக உள்ளது. இப்பகுதியில் கடந்த 2026 ஆம் ஆண்டு வசந்த மற்றும் கோடை காலத்தில் விலங்குகளிடையே இந்த வைரஸ் பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது" எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மனித, விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் சுகாதார நிபுணர்களால் உயிரியல், மருத்துவ மற்றும் தொற்றுநோயியல் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐரோப்பிய நோய்த்தடுப்பு மையத்தின் அதிகாரிகளுக்கு இந்தச் சம்பவம் குறித்து அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்தியச் செய்திகள்

BEHIND ME MEDIA

தமிழகம் முழுவதும் திமுக மகளிர் அணி ஆர்ப்பாட்டம்



ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள தவெக அரசை கண்டித்து திமுக மகளிர் அணி சார்பில் அக்.31-ல் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அக்கட்சி வெளியிட்ட அறிக்கையில், 'தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப் பொருள் விற்பனை ஆகியவை அதிகரித்து சட்டம் - ஒழுங்கு பெரியளவில் சீர்கேட்டு இருப்பதோடு, பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குழந்தைகள் கடத்தல் ஆகியவை மிகப் பெரிய அளவில் அதிகரித்து தமிழகத்தை பாதுகாப்பற்ற மாநிலமாக தவெக ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

இதுபோன்ற குற்றச் செயல்களில் ஆளும் தவெகவினரே பெரிய அளவில் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளி வருகின்றன. இந்த அரசு சட்டம் - ஒழுங்கை பாதுகாப்பதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை தடுப்பதற்கும், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்கும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

ஒரு பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகத்தை படுகுழியில் தள்ளி உள்ள தவெக அரசை கண்டித்து திமுக மகளிர் அணியின் சார்பில் வருகிற அக்.31-ல் (சனிக்கிழமை) காலை 10 மணியளவில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஆண் குழந்தை பிறக்கும்" என குறி சொன்ன பூசாரி சுட்டுக்கொலை

இந்தியாவின் உத்தரபிரதேசத்தில் குறி சொன்ன பூசாரி ஒருவரை, தனக்கு ஆண் குழந்தைக்குப் பதிலாகப் பெண் குழந்தை பிறந்த ஆத்திரத்தில் தந்தை மற்றும் மகன் இணைந்து துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், கொலையை வேறு நபர் மீது திசைதிருப்ப அவர்கள் நாடகமாடியதும் விசாரணைகளில் அம்பலமாகியுள்ளது.

உத்தரபிரதேச மாநிலம், முசாபர்நகர் மாவட்டம், பாரா காலன் கிராமத்திலுள்ள சிவன் கோயில் ஒன்றில் 75 வயதுடைய சுவாமி தேவானந்த் பாரதி பூசாரியாகப் பணியாற்றி வந்துள்ளார். இந்நிலையில், கடந்த 13 ஆம் திகதி அவர் கோயில் அருகே சுடப்பட்டு உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இது குறித்துத் தகவலறிந்த பொலிஸார் உடனடியாக விசாரணைகளை ஆரம்பித்தனர். முதற்கட்ட விசாரணைகளில், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பூசாரியைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பியோடியமை தெரியவந்தது. மேலும், கொலை நடந்த இடத்தில் உள்ளூரைச் சேர்ந்த ஹரிந்திரா என்பவரின் புகைப்படம் கிடந்துள்ளது. இதனைக் கொண்டு பொலிஸார் ஹரிந்திராவைப் பிடித்து விசாரித்த போதிலும், அக்கொலைக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது உறுதியானதால் அவர் விடுவிக்கப்பட்டார்.

"ஜீஷனின் மனைவி கர்ப்பமாக இருந்தபோது, அவர்களுக்கு ஆண் குழந்தை மீது அதிக நாட்டம் இருந்துள்ளது. வைத்தியசாலைகளில் சிசுவின் பாலினத்தைக் கண்டறிவது சட்டவிரோதம் என்பதால், அவர்கள் கோயிற் பூசாரியான சுவாமி தேவானந்த் பாரதியிடம் குறி கேட்டுள்ளனர். அப்போது பூசாரி, அவர்களுக்கு "ஆண் குழந்தைதான் பிறக்கும்" எனத் தெரிவித்துள்ளார். இதனால் அவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். எனினும், கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் ஜீஷனின் மனைவிக்கு ஆண் குழந்தைக்குப் பதிலாகப் பெண் குழந்தை பிறந்துள்ளது. பூசாரி கணித்தது தவறிப்போனதால் ஆத்திர மடைந்த தந்தையும் மகனும், அவரைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டுள்ளனர். மேலும், தங்களின் நீண்டகால எதிரியான ஹரிந்திராவை எப்படியாவது பழிவாங்கும் நோக்கில், பூசாரியைக் கொலை செய்ததன் பின்னர் அந்த இடத்தில் ஹரிந்திராவின் புகைப்படத்தை வேண்டுமென்றே போட்டுவிட்டுத் தப்பியுள்ளனர்" என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ரசிகரின் கனவை மெய்பித்த ஏ.ஆர்.ரஹ்மானின் "ராமாயணம்'



வரும் நவம்பர் 5 ஆம் தேதி ராமாயணம் திரைப்படம் உலகமெங்கும் வெளியாக உள்ளது. இந்த படத்தின் விளம்பர நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. இதில் அந்த படத்தின் கதாநாயகன் ரன்பீர் கபூர், சாய் பல்லவி, யாஷ், ரகுல் ப்ரீத் சிங் ஆகியோரும், படத்தின் இசையமைப்பாளர் ஏஆர் . ரஹ்மான் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். பலரும் இந்த திரைப்படத்தில் பணியாற்றிய அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் தனது ரசிகரின் கனவு நனவானதை நெகிழ்ச்சியுடன் மேடையில் தெரிவித்தார்.

ராமாயணம் விளம்பர நிகழ்ச்சியில் பேசிய ரஹ்மான் , "ராமாயணம் திரைப்படத்தில் பணியாற்றியது கற்றலுக்கான ஒரு பயணமாகும். ராமாயணம் ஒருவர் பெற்றோரிடம், மனைவியுடன், குழந்தைகளிடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை கற்பிக்கிறது. இது அறநெறிகளை கற்பிக்கும் ஒரு கதாபாத்திரத்தை பற்றியது , இதில் கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது . நிதேஷ், யாஷ், ரன்பீர், சாய் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி". நான் உங்களிடம் ஒரு செய்தியை சொல்ல விரும்புகிறேன்.

2014- ஆம் ஆண்டு எனக்கு ஒரு இமெயில் வந்தது. அதில், "வெள்ளிக்கிழமை அதிகாலையில் நீங்கள் என் கனவில் வந்தீர்கள், உலகில் பலரையும் நீங்கள் ஊக்கப்படுத்துவது போல என்னையும் நீங்கள் ஊக்கப்படுத்தினீர்கள். அதனால் இதை உங்களிடம் தெரிவிக்க நான் நினைத்தேன். ஏனெனில் எனது இந்த கனவு நிச்சயம் நிஜமாகும் என்று நம்புகிறேன். என் கனவில் நீங்கள் இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் ஒரு இசை நிகழ்ச்சியின் மூலம் மாயாஜாலங்கள் ஏற்படுத்துவதை பார்த்தேன். சினிமாவின் முன்னணி நடிகர்களுடன் இணைந்து மிகச்சிறந்த காவியமான இராமாயணத்தை நீங்கள் செதுக்கி உள்ளீர்கள். இந்த நிகழ்ச்சி மாயமாகவும், மயக்கும் வண்ணமாகவும் இந்த உலகிற்கு அவசியமான அன்பு, கடமை, வாழ்க்கை ஆகிய அடிப்படை கொள்கையை பரப்புவதாக இருக்கிறது." என்று இருந்தது.

2014 ஆம் ஆண்டு அந்த இமெயிலை அனுப்பிய, நியூயார்க்கில் உள்ள சதீஷ், மீண்டும் எனக்கு மெயில் அனுப்பி, எனது முந்தைய மெயில் ஞாபகம் இருக்கிறதா? என்று கேட்டார் .2026 ஆம் ஆண்டு நடைபெறும் நிகழ்வை 2014 ஆம் ஆண்டு ஒருவர் எனக்கு தெரிவித்திருந்தார். அது எனக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது, அவரது கனவு நடந்து விட்டது

மேலும் தொடர்ந்த ரஹ்மான் இந்திய இசையில் பக்தி நிரம்பி உள்ளது இசையின் அடிப்படையே பக்தி தான். ராமாயணம் போன்ற திரைப்படங்களுக்கு எப்படி ராகங்களை பயன்படுத்த வேண்டுமென்று ஒரு இசையமைப்பாளருக்கு கற்றுத்தர தேவையில்லை. நாங்கள் 3 வருடங்களை மெட்டுக்களை கொடுத்தோம், இப்போது முழு ஆல்பம் தயாராகி விட்டது, என்று கூறினார்.

தமிழகத்தில் முதல்வரின் ஆசியோடு தான் ரவுடிகள் ராஜ்ஜியம் நடக்கிறதா?



"அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தில் மே 4-க்குப் பிறகு சட்டம் - ஒழுங்கு என்பது சாம்பிளுக்குக் கூட இல்லை. முதல்வரின் ஆசியோடுதான் தமிழகத்தில் ரவுடிகள் ராஜ்ஜியம் நடக்கிறதா?" என சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'அமைதிப் பூங்காவாக இருந்த தமிழ்நாட்டில் மே 4-க்குப் பிறகு சட்டம் - ஒழுங்கு என்பது சாம்பிளுக்குக் கூட இல்லை என்பது மிகப் பெரிய வேதனை. நாளிதழ்களில் இன்றைய கொலைப்பட்டியல் என்று தனி வரிசை (Column) போடும் அளவுக்கு ஒவ்வொரு நாளும் கொலைகள் எல்லை மீறி நடக்கின்றன.

சமீபத்தில் மதுரை மேலூர் அருகே மாயமான 7 வயது சிறுவன், உடலில் காயங்களோடு சடலமாக கண்டெடுக்கப்பட்டு இருக்கிறான். சேலத்தில் ரவுடி டேவிட் என்பவரை பட்டப்பகலில் ஒரு கும்பல் வெட்டிக்கொலைச் செய்துள்ளது.

ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள ஒரே தொகுதியில் 40 இடங்களுக்குப் போய் டிராக்டர் ஓட்டி, டீ குடித்து, முருங்கைப் பறித்த முதல்வர், சட்டம் - ஒழுங்கைக் காப்பாற்ற ஒரே ஒரு ஆய்வுக்கூட்டத்தையாவது நடத்துவாரா?

ஒருவேளை அத்தகைய கூட்டங்களை நடத்தி இருந்தால் இன்னும் கொலைகள் தொடர்வது ஏன்? டம்மி முதல்வரின் ஆசியோடு தான் தமிழ்நாட்டில் ரவுடிகள் ராஜ்ஜியம் நடக்கிறதா?" எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடியின் தந்தை குறித்த கார்கே பேச்சை கண்டித்து பாஜக ஆர்ப்பாட்டம்

பிரதமர் நரேந்திர மோடியின் தந்தை குறித்த மல்லிகார்ஜுன கார்கேவின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து டெல்லி, லக்னோ, பெங்களூரு, ஜம்மு, பாட்னா என நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாஜகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது கூட்டத்தில் இருந்த ஒருவர், பிரதமர் மோடி எங்கும் செல்ல மாட்டார் என அவருக்கு ஆதரவாக குரல் எழுப்பினார். இதனால், கோபமடைந்த கார்கே, மோடி மட்டுமல்ல, அவரது அப்பாவும் செல்வார் என ஆவேசமாகக் கூறினார்.

பிரதமர் மோடியின் மறைந்த தந்தை குறித்து ஒருமையில் பேசியதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் பாஜகவினர் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கார்கேவின் இந்தப் பேச்சு குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பாஜக மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான ராஜ்நாத் சிங், "பிரதமர் நரேந்திர மோடியின் மறைந்த தந்தை குறித்த கார்கேவின் பேச்சு மிகுந்த மனவேதனையை அளிக்கிறது, பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. இவ்வாறு பேசியது ஒரு சாதாரண தொண்டரோ, இளம் தலைவரோ அல்ல. நாட்டின் மிகப் பழமையான அரசியல் கட்சி என தங்களை அழைத்துக்கொள்ளும் ஒரு தேசிய கட்சியின் தலைவரே இவ்வாறு பேசியுள்ளார்.

தனது நடத்தையின் மூலம் காங்கிரஸ் தலைவர் கோடிக்கணக்கான நமது நாட்டு மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தியுள்ளார். காங்கிரஸ் கட்சி இதோடு நின்றுவிடவில்லை. கார்கேவின் வார்த்தைகளை நியாயப்படுத்த முயல்வதன் மூலம் அவர்கள் மக்களின் உணர்வுகளை மேலும் புண்படுத்தி வருகின்றனர்" என தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகை சில கனடியப் பொருட்கள் மீதான 50% வரியை உண்மையில் நீக்குகிறதா?



வெள்ளை மாளிகை கனடியப் பொருட்கள் மீதான தனது வரி விதிப்பில் மீண்டும் ஒரு பரந்த அளவிலான மாற்றங்களைச் செய்துள்ளது.

அந்தப் பொருட்களில்: கடல் பாசிகள், பொதி செய்யும் பெட்டிகள் மற்றும் சில ப்ளைவுட் தாள்கள் ஆகியவை நீக்கப்பட்டுள்ளன. கோக்கோ தூள், தரைவிரிப்புகள் மற்றும் ஷாம்புகள் ஆகியவை புதிதாகச் சேர்க்கப் பட்டுள்ளன.

50 சதவீத வரியை முகம்கொடுக்கும் பொருட்களின் முழுப் பட்டியல் இங்கே கிடைக்கப்பெறுகிறது. இந்த மாற்றங்கள் மாத இறுதியில் அமலுக்கு வரும்.

கனடா-அமெரிக்க வர்த்தக அமைச்சர் Dominic LeBlanc அலுவலகம் கூறுகையில் அரசாங்கம் சமீபத்திய வரி நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யும் என்றும், அமெரிக்காவுடன் "மிகவும் பரஸ்பரம் பலனளிக்கக்கூடிய வர்த்தக உறவை நோக்கி ஆக்கபூர்வமாகவும் நல்லெண்ணத்துடனும் இணைந்து செயல்படக் கனடா தயாராக உள்ளது" என்றும் தெரிவித்தது.

"என்றைக்கும் போல எங்களது கவனம் தெளிவாகவே உள்ளது தொழில்கள், வணிகங்கள், விவசாயிகள் மற்றும் அனைத்து கனடியர்களுக்கும் வலுவான போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதே அதுவாகும்" என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது. வெள்ளிக்கிழமை காலை, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த Maine, செனட்டர் Susan Collins, உள்நாட்டு விவசாயத்தை வலுப்படுத்துவதற்காக பல்வேறு கனடியப் பொருட்களுக்கு வரிவிலக்குகளைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

"மைனின் விவசாயத் தொழில்களுக்கு முக்கியமான ப்ளூபெரி, உருளைக்கிழங்கு, ஆப்பிள் மற்றும் கடல்பாசி உற்பத்தியாளர்கள் உட்பட கூடுதல் வரிவிலக்குகளைப் பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று அவர் வெள்ளிக்கிழமை எக்ஸ் (X) தளத்தில் எழுதினார். அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி ஜேமிசன் கிரீயர், கருவூலச் செயலர் Howard Lutni உம் - இவர்கள் இருவரும் கனடாவுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர் - மற்றும் மூத்த ட்ரம்ப் நிர்வாக அதிகாரிகளுடனான விவாதங்களின் போது காலின்ஸ் வரி நிவாரணம் கோரியதாகக் கூறினார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கனடாவுடனான வர்த்தக ஒப்பந்தம் நெருங்கி வருவதாகக் கூறிய சில மணி நேரங்களுக்குப் பிறகு இந்தச் செய்தி வந்துள்ளது. மெக்ஸிகோவுடனான ஒப்பந்தம் குறித்த முன்னேற்றம் பற்றி வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், தனது நிர்வாகம் "மிகவும் நல்ல" ஒப்பந்தத்திற்கு "மிக அருகில்" இருப்பதாகக் கூறினார். "கனடாவின் விஷயமும் அதேதான். எங்களுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்த கனடா மிக கடுமையாக உழைத்து வருகிறது. நான் இதைச் சொல்ல வெட்கப்படுகிறேன், ஆனால் எங்களிடம்தான் அனைத்து சீட்டுகளும் உள்ளன" என்றார் அவர்.

ஆகஸ்ட் மாதத்தில் பேச்சுவார்த்தைகள் முறிந்ததிலிருந்து கனடா-அமெரிக்க வர்த்தக விவகாரத்தின் முன்னேற்றம் மந்தமாகவே உள்ளது. அமெரிக்க பொருளாதார உறவுகள் குறித்த பிரதமர் ஆயசம ஊயசநெல ஆலோசனைக் குழு வியாழக்கிழமை ஒன்றரை மாதங்களுக்கும் மேலாக தனது முதல் கூட்டத்தைக் கூட்டியதாக தெரிவித்தனர். இதற்கிடையில், சர்வதேச வர்த்தக வழக்கறிஞர் Barry Appleton வெள்ளிக்கிழமை CTV நியூஸ் சேனலுக்கு அளித்த பேட்டியில் வாஷிங்டனின் ஒட்டுமொத்த வரி கொள்கை அப்படியே மாறாமல் உள்ளது என்றார்.

வெள்ளிக்கிழமை எடுக்கப்பட்ட இந்த முடிவு, வாழ்க்கைச் செலவு மக்களைப் பாதித்துள்ளதைக் குறிக்கிறது என்று அப்பிள்டன் கூறினார். காலின்ஸை கனடாவின் "மிக நல்ல நண்பர்" என்று அவர் அழைத்தார், இருப்பினும், "ஒரு அமெரிக்க செனட்டர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றால்... அவர்கள் வரிகளைக் குறைக்க வேண்டும்" என்று அவர் மேலும் கூறினார். இஸ்தான்புல்லில் நள்ளிரவு செய்தியாளர் சந்தி1ப்பின் போது, ட்ரும்பின் கருத்துகளுக்கு சில மணி நேரங்களுக்கு முன்பு பேசிய கனடா பிரதமர் "அமெரிக்க அரசரியத்துடன் தொடர்ந்து தொடர்பில் உள்ளது" என்றார். "நம் இருவரின் நலனுக்கும் உகந்த வர்த்தக ஒப்பந்தத்தை பேச்சுவார்த்தை மூலம் நல்லெண்ணத்துடன் அமர்ந்து பேச நாங்கள் தொடர்ந்து தயாராக இருக்கிறோம்" என்றார் அவர். "அமெரிக்கா தயாராக இருந்தால் இன்றைக்கே நாங்கள் அதில் ஐஒப்பந்தத்தில்ஸ கையெழுத்திடலாம்" என்று பிரதமர் செய்தியாளர்களிடம் கூறினார்.

மார்ச் 2025 இல், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கனடாவின் எ.ஃ.கு (steel) மற்றும் அலுமினியத் துறை மீது 25 சதவீத வரிகளை விதித்தார், பின்னர் அந்த ஆண்டு ஜூன் மாதம் அந்த வரிகளை 50 சதவீதமாக உயர்த்தினார். அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கூ27.6 பில்லியன் மதிப்பிலான பொருட்களுக்கு, குறிப்பாக எ.ஃ.கு, பால் பொருட்கள், உபகரணங்கள், விவசாய உபகரணங்கள், கூழ் மற்றும் காகிதம் மற்றும் மின்னணு சாதனங்கள் மீது கனடா எதிர் வரிகளை விதித்துள்ளது.

இத்தாலியில் மீண்டும் போராட்டங்கள்: பாதுகாப்புப் பணியில் இராணுவத்தினர்!



இத்தாலியின் பல்வேறு நகரங்களில் மீண்டும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்புப் பணிகளுக்காக இராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மிலான், ரோம், டுரின், நேபிள்ஸ், போலோன்யா மற்றும் புளோரன்ஸ் உள்ளிட்ட நகரங்களில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பேரணிகளில் பங்கேற்றனர். சமூக மற்றும் அரசியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

சில போராட்டக்காரர்கள் போத்தல்கள், கற்கள் மற்றும் பட்டாசுகளை வீசியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிலானில் நடைபெற்ற பேரணி அமைதியான முறையில் இடம்பெற்ற நிலையில், அங்கு பாதுகாப்புக்காக இராணுவத்தினரும் பொலிஸாரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேலும், பல ஆடம்பரப் பொருட்கள் விற்பனை நிலையங்களின் ஜன்னல்கள் சேதங்களைத் தவிர்க்கும் வகையில் மூடிப் பாதுகாக்கப்பட்டன.

பொதுமக்களின் பாதுகாப்பையும் அமைதியான முறையில் போராட்டம் நடத்துவதற்கான உரிமையையும் பாதுகாத்த சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு இத்தாலியப் பிரதமர் ஜோர்ஜியா மெலோனி நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைத்தளமான எக்ஸ் (X) தளத்தில் பதிவிட்ட அவர், போராட்டம் நடத்துவதற்கான உரிமை எப்போதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை, மக்கள் தங்கள் நகரங்களில் பாதுகாப்பாக வாழ்வதற்கான உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.



BEHIND ME MEDIA

லண்டனில் ஆசியச் செல்வாக்காளர் விருதை வென்ற இளம் ஊடகவியலாளர் சதீஷ்!



லண்டனில் நான்காவது முறையாக Centurion Staunch Nexus அமைப்பினால் நடத்தப்பட்ட Asian Influencers Awards 2026 விருது வழங்கும் விழா, கடந்த ஒக்டோபர் 24 ஆம் திகதி சனிக்கிழமை, லண்டன் ஹீத்ரோவில் அமைந்துள்ள Radisson Blu ஹோட்டலில் சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு ஆசிய நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட, சமூக மற்றும் ஊடகத் தளங்களில் செல்வாக்குச் செலுத்தும் ஆளுமைகளை அடையாளம் கண்டு, அவர்களின் சாதனைகளையும் சமூகப் பங்களிப்புகளையும் அங்கீகரிக்கும் நோக்கில் இவ்விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பிரதான ஊடகங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்களில் தனித்துவமான பங்களிப்புகளை வழங்கி, மக்கள் மத்தியில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்திவரும் ஆளுமைகள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

குறிப்பாக, Fashion & Lifestyle, Entertainment & Arts, Food & Travel, Business & Professional, Health & Wellbeing, Content Creators மற்றும் Community Impact உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இவ்விருது விழாவில், தமிழ் மக்கள் மத்தியில் 'சதீஷ்' என அறியப்படும் ஊடகவியலாளர் சத்தியமூர்த்தி சதீஷன், 'Community Impact Influencer' விருதை வென்றுள்ளார்.

ஈழத்தமிழரான சதீஷ், ஊடகத்துறையில் நீண்டகால அனுபவத்தைக் கொண்டவர் என்பதுடன் அரசியல், சமூகம் மற்றும் கலைத்துறை சார்ந்த நிகழ்ச்சிகளின் ஊடாகத் தமிழ் மக்கள் மத்தியில் தனக்கென ஓர் அடையாளத்தை உருவாக்கியவர். 2008ஆம் ஆண்டு இலங்கையின் வெற்றி எ.ஃப்.எம். வானொலியில் அறிவிப்பாளராகத் தனது ஊடகப் பயணத்தை ஆரம்பித்த சதீஷ், பின்னர் சக்தி தொலைக்காட்சியில் ஒளிபரப்பான பிரபலமான 'Shakthi the Debater' நிகழ்ச்சியின் முதலாவது தொடரின் தயாரிப்பாளராகவும் பணியாற்றியிருந்தார்.

பின்னர் புலம்பெயர்ந்து லண்டனில் குடியேறிய அவர், அங்கு இயங்கிவந்த ஐடீஊ தமிழ் வானொலியின் நிகழ்ச்சிப் பணிப்பாளராகப் பணியாற்றினார். அதனைத் தொடர்ந்துஎஐடீஊ தமிழ் ஊடக நிறுவனத்தில் வானொலிப் பிரிவின் தலைமைப் பொறுப்பையும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்புப் பொறுப்புகளையும் வகித்திருந்தார். குறிப்பாக, அவர் வானொலியில் தொகுத்து வழங்கிய 'மனங்கள் பேசட்டும்' நிகழ்ச்சி, சமூகத்தில் வெளிப்படையாகப் பேசத் தயங்கப்படும் பல்வேறு விடயங்களை விவாதத்திற்கு உட்படுத்தியதன் மூலம் கவனம் பெற்றிருந்தது.

அதேபோன்று, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் அவர் நெறிப்படுத்திய அரசியல் நிகழ்ச்சிகள், அரசியல் மற்றும் சமூகத் தளங்களில் பல்வேறு விவாதங்களையும் அதிர்வலைகளையும் ஏற்படுத்தியிருந்தன. புலம்பெயர் தேசங்களில் இயங்கும் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் ஒருபுறமும், இலங்கை மற்றும் இந்திய அரசியல்வாதிகள் மறுபுறமும் எனப் பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும் நேர்காணல்களையும் உள்ளடக்கி அவர் தயாரித்து நெறிப்படுத்திய 'செய்திகளுக்கு அப்பால்' நிகழ்ச்சி, அக்காலப்பகுதியில் தமிழ் அரசியல் பரப்பில் குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றிருந்தது.

கடந்த சில ஆண்டுகளாக 'வெற்றித் தமிழா' (Vettri Thamizha) என்ற பெயரில் தனது சொந்த லுழரவுரடிந மற்றும் டிஜிட்டல் ஊடகத் தளத்தை நடத்தி வருகின்றார். இதனூடாக அரசியல், சமூகம், கலை மற்றும் பொழுதுபோக்கு சார்ந்த விடயங்களைத் தமிழ் மக்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

London Oxford தெருவில் பாதசாரிகளுக்கு மட்டுமே அனுமதி



பிரிட்டனின் லண்டன் நகரில் உள்ள பிரபலமான Oxford தெருவில், போக்குவரத்துக்கு தடை விதித்து, பாதசாரிகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்கும் திட்டம் நேற்று முதல் அமலுக்கு வந்தது.

லண்டனின் முக்கிய வர்த்தகப் பகுதிகளில் ஒன்றான ஆக்ஸ்போர்டு தெருவுக்கு தினமும் உலகளவில் லட்சக்கணக்கானோர் ஷாப்பிங் செய்ய வருகின்றனர். இங்கு வாகனப் போக்குவரத்தால் ஏற்படும் நெரிசலை குறைத்து, பாதசாரிகள் சுதந்திரமாக நடந்து சென்று ஷாப்பிங் செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஆர்ச்சர்டு தெரு முதல் கிரேட் போர்ட்லேண்ட் தெரு வரையிலான சுமார் ஒரு கி.மீ., தூரப் பகுதியில் பஸ்கள், கார்கள், டாக்சிகள் உள்ளிட்ட வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. பஸ்கள் மாற்றுப் பாதைகளில் இயக்கப்படுகின்றன. அவசர கால வாகனங்களுக்கு அனுமதி அளிக்கப்படும். சரக்குகளை இறக்குவதற்கான வாகனங்களுக்கும் குறிப்பிட்ட நேரங்களில் அனுமதி வழங்கப்படும்.

ஆக்ஸ்போர்டு தெருவை மேம்படுத்தும் திட்டத்தின் அடுத்த கட்டமாக, 2027ல் 50க்கும் மேற்பட்ட மரங்கள், 100க்கும் அதிகமான இருக்கைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மக்கள் ஓய்வெடுப்பதற்கும், பொழுதுபோக்குவதற்கும் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

கொரோனா பெருந்தொற்றுக்கு பின் பாதிக்கப்பட்ட வர்த்தகத்தை மீட்டெடுத்து, சுற்றுலாப் பயணிகளையும் வாடிக்கையாளர்களையும் அதிக அளவில் ஈர்ப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

ஐரோப்பாவில் வலுக்கும் போராட்டங்கள்!

ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், ஸ்பெயின், இத்தாலியில் கல்வி, வீட்டு வசதி, ஓய்வூதியம், ஊழல் மற்றும் விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்னைகளை முன்வைத்து நடக்கும் போராட்டங்கள் நேற்று தீவிரமடைந்தன் சில நகரங்களில் வன்முறை வெடித்தது.

ஐரோப்பாவின் பல நாடுகளில் இளைஞர்கள், மாணவர்கள், தொழிற்சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்விக்கான நிதி ஒதுக்கீடு, ஊழல் ஒழிப்பு, மலிவு விலையில் வீட்டு வசதி, ஓய்வூதிய பாதுகாப்பு, விலைவாசி உயர்வு ஆகியவை போராட்டங்களுக்கான முக்கிய காரணங்களாக உள்ளன.

கடந்த வாரம் பிரான்சில் நடந்த போராட்டம் பெரும் வன்முறையாக மாறியது. இது, மற்ற நாடுகளுக்கும் பரவியது. கடந்த சில நாட்களாக போராட்டங்கள் தணிந்த நிலையில், நேற்று முன்தினம் பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் உள்ளிட்ட நாடுகளில் மீண்டும் போராட்டங்கள் வெடித்தன.





பிரான்ஸ் : பிரான்ஸ் முழுதும் 4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாரிஸ், லியோன், ரென்னெஸ், மார்சேய் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் போராட்டக்காரர்கள் பட்டாசுகள், பாட்டில்கள், கற்களை வீசியதால் மோதல் ஏற்பட்டது. சில இடங்களில் தீ வைப்பு சம்பவங்களும் நிகழ்ந்தன. இதையடுத்து, 70 ஆயிரத்து கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டனர். தண்ணீரை பீய்ச்சி அடித்தும், கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கூட்டத்தை கட்டுப்படுத்தினர்.

ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். தேசிய அளவிலான வேலைநிறுத்தங்களை தொடரப் போவதாக தொழிற்சங்கத்தினர் அறிவித்தனர்.

இத்தாலி : இத்தாலி தலைநகர் ரோமில், நேற்று நடந்த பேரணியின்போது பியாசா டெல்லா ரிபப்ளிகா என்ற பகுதியில் போலீசாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

ரோமின் முக்கிய வணிகப் பகுதிகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.
ரோமின் 2,000 ஆண்டு பழமையான கொலோசியம் எனும் வட்ட வடிவ கட்டடத்திற்குள் அத்துமீறி சில போராட்டக்காரர்கள் நுழைய முயன்றனர். அவர்களை போலீசார் வெளியேற்றினர். டூரின் நகரிலும் போராட்டக்காரர்களுக்கும் போலீசாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. மிலன் நகரில் நடந்த பேரணி பெரும்பாலும் அமைதியாக நடந்தது.

ஸ்பெயின் : ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் சமூக ஊடகங்கள் வாயிலாக விடுக்கப்பட்ட அழைப்பைத் தொடர்ந்து, நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பிளாசா டி கட்டலூனியா பகுதியில் திரண்டனர்.

கருப்பு முகமூடி அணிந்த சிலர் சாலை தடுப்புகளை தீயிட்டு எரித்ததுடன், குப்பைத் தொட்டிகளுக்கும் தீ வைத்தனர் கடைகளுக்குள் புகுந்து பொருட்களை கொள்ளை அடித்தனர். போலீசார் மீது கற்கள் மற்றும் பாட்டில்களை வீசினர். இதில் வணிக நிறுவனங்கள் சேதமடைந்தன அல்லது கொள்ளையடிக்கப்பட்டன. 100க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு உள்ளனர் அவர்களில் 25 பேர் சிறுவர்கள்.

ஸ்பெயினின் தாக்கத்தில் போர்ச்சுகல் தலைநகர் லிஸ்பனிலும் மலிவு விலையில் வீட்டு வசதி கோரி மக்கள் போராட்டம் நடத்தினர்.

அல்பேனியா : மற்றொரு ஐரோப்பிய நாடான அல்பேனியாவில் நடந்த போராட்டமும் வன்முறையில் முடிந்தது. தலைநகர் திரானாவில் கல்விக் கட்டணத்தைக் குறைக்கவும், கல்வித் துறையில் அரசு முதலீட்டை அதிகரிக்கவும் கோரி பள்ளி, கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின்போது சிலர் அரசு கட்டடங்களுக்கு தீ வைத்ததுடன், போலீசார் மீது பொருட்களை வீசித் தாக்கினர்.

வரலாற்று சாதனை படைக்க தயாராகிறது ஜப்பான்!

செவ்வாய் கிரகத்தின் துணை கோளான போபோஸ் (ீழடிழள) மீது விண்கலத்தை தரையிறக்கி, அங்கிருந்து மண் மாதிரிகளைச் சேகரித்து பூமிக்குக் கொண்டுவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க விண்கலப் பயணம் ஆரம்பமாகியுள்ளது.

ஜப்பான் விண்வெளி ஆய்வு மையமான துயுஓயு (ஜாக்சா)தலைமையிலான மார்ஸ் மூன்ஸ் எக்ஸ்ப்ளோரேஷன் விண்கலம், ஜப்பானில் உள்ள தனேகஷிமா விண்வெளி மையத்திலிருந்து விண்ணுக்குச் சென்றது.

இந்த முயற்சி வெற்றி பெற்றால், செவ்வாய் கிரகம் அல்லது அதன் துணைக் கோள்களிலிருந்து மாதிரிப் பொருட்கள் பூமிக்குக் கொண்டுவரப்படுவது முதல் சந்தர்ப்பமாக இது வரலாற்றி பதிவாகும்.

2027ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் போபோஸை சென்றடைய திட்டமிட்டுள்ள இந்த விண்கலம், மற்றுமொரு துணைக் கோளான டெமோஸையும் ஆய்வு செய்துகொண்டு போபோஸில் தரையிறங்க திட்டமிடப்பட்டுள்ளது.

செவ்வாயின் ஈர்ப்பு விசைக்கும் போபோஸின் குறைந்த ஈர்ப்பு விசைக்கும் இடையே உள்ள சவால்களைக் கடந்து, வெறும் 10 கிராம் அளவுக்கு கோளின் மாதிரி துகள்கள் சேகரிக்கப்படவுள்ளன.

இந்த மாதிரிகள் ஒரு சிறிய கெப்சூலில் அடைக்கப்பட்டு 2031ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் வூமேரா பாலைவனத்தில் வந்து சேரும்.

செவ்வாயின் துணைக் கோள்கள் ஆரம்பத்தில் விண்கல் மோதலால் உருவானதா அல்லது செவ்வாயின் ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்பட்ட வெளி சூரியக் குடும்பத்தின் சிறுகோள்களா என்ற நீண்டகாலக் கேள்விக்கு இந்த ஆய்வு விடை அளிக்கும் என்று நம்பப்படுகிறது.

மேலும், செவ்வாயில் ஏற்படும் தாக்கங்களால் போபோஸில் பதிந்திருக்கக்கூடிய செவ்வாயின் துகள்களும் ஆய்வுக்குக் கிடைக்கும் என்பதால், இது விண்வெளி வரலாற்றில் மிக முக்கியமான திருப்பமாகக் கருதப்படுகிறது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் கணினி அமைப்புகள் முடக்கப்பட்டதா?

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் கணினி அமைப்புகளை முடக்கிய ஹேக்கர்கள் கிரிப்டோகரன்சியில் 50,000 டொலர்களை கோரியுள்ளனர் என்ற பரபரப்பு தகவலை நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார்.

தேசிய விமானசேவை நிறுவனம் இன்னமும் சைபர் தாக்குதல்களுக்கு உள்ளாகும் ஆபத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். 2026ஜுன் மாதத்தில் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் கணினி அமைப்புகள் ஊருவப்பட்டன என தெரிவித்துள்ள அவர் பின்னர் டார்க்வெப்பில் ஹக்கர்கள் இந்த தாக்குதலிற்கு பொறுப்பேற்றனர் என குறிப்பிட் டுள்ளனர்.

ஹேக்கர்கள் விமானநிறுவனத்தின் கட்டுப்பாட்டை தங்கள் வசம் வைத் திருப்பதாக தெரிவித்து வீடியோ வொன்றை வெளியிட்டதுடன் கிரிப்டோ கரன்சியில் 50000 மில்லியன் டொலர்களை கப்பமாக கோரினார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

செம்மணி விசாரணை நேர்மையான முறையில் நடைபெறுகிறது - பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒருபோதும் மதத்தை வைத்து அரசியல் செய்யாது. மதத்தை வைத்து நாங்கள் ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள முயற்சிகளை மேற்கொள்ள மாட்டோம். மதம் மதம் வேலையை செய்யும், ஆட்சியாளர்களான நாங்கள் எங்களுடைய வேலையை செய்வோம் என பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் துறை பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று (26) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போது இதனை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தேரர்களுடைய போராட்டம் மற்றும் கொழும்பிலே கூடாரமிட்டு தங்கியிருப்பது எல்லாமே ஒரு அரசியல் நாடகம் என்பது இன்று சிறிய குழந்தைக்கு கூட தெரிந்த விடயமாக இருக்கிறது.

இந்த நாட்டிலே கடந்த காலத்திலே ஊழல் செய்து தவறிழைத்தவர்களுக்கு எதிராக சட்டம் தன் கடமையை சரியாக செய்கின்ற பொழுது, இந்த அரசியல்வாதிகள் மிகவும் கவலை அடைந்து, பயம் கொண்டு, கூக்குரலிடுகின்றனர். அதனுடைய விளைவாக இந்த அரசாங்கத்தினுடைய அதிகாரத்தை குழைப்பதற்கு அல்லது ஆட்சியை மாற்றுவதற்கு அவர்கள் இறுதியாக எடுத்த ஒரே ஆயுதம் இந்த மதம். எனவே, இதுவும் இன்று தோல்வி அடைந்த நிலையிலே இருக்கிறது.

ஏனென்றால் பெரும்பான்மையான மக்கள் மத்தியிலே அவர்களுடைய போராட்டம், அவர்களுடைய குறிக்கோள் நன்கு தெரிந்த விடயமாக இருக்கிறது. எனவே, மக்கள் தெளிவாக இருக்கிறார்கள். அதேபோல அவர்களுக்கு பின்னுக்கு யார் யார்? எந்தெந்த அரசியல்வாதிகள் இருக்கின்றார்கள்? என்பது நாளுக்கு நாள் வெளிச்சமாகிக் கொண்டு வருகிறது.

ஏனென்றால் அவர்கள் முதல் நாள் இந்த போராட்டத்தை தொடங்குகின்ற பொழுது, யார் இதற்கு அனுசரணை வழங்கியது, யார் யார் இந்த போராட்டத்திலே பங்கு பற்றினார்கள் என்பது ஊடக நண்பர்கள் ஊடகத்துக்கும் வெளிப்படையான உண்மையாக தெரிந்த விடயம்.

கஸ்ஸப்பதேரர் தற்பொழுது கொழும்பிலே சில விடுதிகளிலும் சென்று வரக்கூடிய காட்சிகள் ஊடகத்திலே நாங்கள் பார்த்திருந்தோம். எனவே, சரத் வீரசகர என்பவர் யார் என்பது உங்களுக்கு தெரியும். கடந்த காலத்திலே ஆட்சியிலிருந்த இனவாதிகள் தான் அவர்களை வழிநடத்துகிறார்கள். அவருடைய தேவையை பூர்த்தி செய்யப் பார்க்கிறார்கள் என்பது வெளிப்படையான உண்மை. யார் என்ன செய்தாலும், யார் என்ன கூக்குரலிட்டாலும், என்ன போராட்டம் செய்தாலும் நாங்கள் இந்த நாட்டிலே உன்னதமான, நேர்மையான ஒரு பணியினை செய்து கொண்டிருக்கிறோம்.

மக்கள் எதற்காக எந்த நம்பிக்கையின் அடிப்படையில் எங்களுக்கு வாக்களித்தார்களோ, எந்த எதிர்பார்ப்போடு எங்களுக்கு ஆதரவு அளித்தார்களோ, அந்த எதிர்பார்ப்பும் ஆதரவிற்கும் பங்கம் விளைவிக்க ஒரு துளியேனும் நாங்கள் செயற்பட மாட்டோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒருபோதும் மதத்தை வைத்து அரசியல் செய்யாது. மதத்தை வைத்து நாங்கள் ஆட்சியை தக்கவைத்துக்கொள்ள முயற்சிகளை மேற்கொள்ள மாட்டோம். மதம் மதம் வேலையை செய்யும், ஆட்சியாளர்களான நாங்கள் எங்களுடைய வேலையை செய்வோம்.

இலங்கையில் இருக்கின்ற எல்லா மதங்களுக்கும் நாங்கள் பூரண ஒத்துழைப்பையும், அவர்களுக்கான அனுசரணைகளையும், அவர்களுக்குரிய எல்லா நன்மைகளையும் நாங்கள் செய்து கொடுப்போமே ஒழிய எங்களுடைய தேவைகளுக்காக, எங்களுடைய செயற்பாடுகளுக்காக பகடைக்காயாக பகடைக்காயாக ஒரு நாளும் மதத்தை நாங்கள் பயன்படுத்த மாட்டோம். செம்மணி விசாரணையில் எந்தவித தலையீடோ அல்லது எந்த விதமான செல்வாக்கையுமோ நாங்கள் செலுத்தாமல் அது நேர்மையான முறையில் நடைபெறுகிறது.

செம்மணி விவகாரத்தை பொறுத்தவரையிலே கடந்த எந்த அரசும் செய்யாத வேலைகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. எனவே, பலர் பல கருத்துக்களை சொன்னாலும், நாங்கள் எந்த விசாரணையில் எந்தவித தலையீடும் அல்லது எந்த விதமான செல்வாக்கும் நாங்கள் செலுத்தாமல் நேர்மையான முறையில் அது நடைபெறுகிறது.

செம்மணி மாத்திரமல்ல, எல்லா விசாரணைகளையும் நேர்மையான முறையிலே செயற்படுத்துவதற்கு நாங்கள் பூரண சுதந்திரத்தை வழங்கி இருக்கிறோம். நான் நினைக்கிறேன். செம்மணி விவகாரத்தில் சிலவற்றுக்கு உள்நாட்டு பொறிமுறைகள் போதுமானதாக இருக்கிறது. நேர்மையான முறையில் நடைபெற்று வருகிறது. எனவே, மக்கள் தற்பொழுது இந்த அரசாங்கத்தின் மீது, நீதிமன்றத்தின் மீது முதல்முறையாக இந்த நாட்டில் இருக்கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் அனைவரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த நம்பிக்கை அடிப்படையில் தான் நாளுக்கு நாள் நாளுக்கு நாள் சில நிகழ்வுகள் நடந்தவண்ணம் இருக்கின்றன. எனவே, இந்த நம்பிக்கையின் அடிப்படையில் எல்லா அநீதிகளுக்கும் நீதி நிச்சயமாக கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பை நாங்கள் கொடுத்திருக்கிறோம் என தெரிவித்தார்.





Toronto தமிழ்ப் புத்தக அரங்கம்...

Toronto தமிழ்ப் புத்தக அரங்கம் நிகழ்வு கடந்த வாரம் மிகச் சிறப்பாக நிறைவு பெற்றுள்ளது. Toronto தமிழ்ப் புத்தகக் கண்காட்சி 2026, தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு என அனைத்தையும் ஒன்றிணைத்த மேற்படி நிகழ்வில் நூல் அறிமுக நிகழ்வுகள், எழுத்தாளர் சந்திப்புகள் கவிதை நிகழ்வுகள் மற்றும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளுடன் இரண்டு நாட்கள் தமிழ் இலக்கியத் திருவிழாவாக நடைபெற்று முடிந்துள்ளது.



தமிழில் தலித்திலக்கிய முன்னோடி டானியலுடைய எழுத்தின் காலம் என்பது அவரது எழுத்தூழியத்தின் ஆயுள் மட்டுமல்ல ஒடுக்கப்படும் சமூகத்தின் வராலாற்றின் நீண்ட காலமுமாகும். அந்தளவிற்கு நிலைத்து நிற்கும் பெறுமதி அவரது எழுத்துக்கு உண்டு. அதன் முக்கியத்துவமே அவரை நினைவு கூருதலும் அவர் பற்றியும் அவரது எழுத்துக்கள் பற்றியும் இன்றும் நாம் பேசுவதுமாகும்...









நிகழ்வில் நினைவு கூரப்பட்ட அமரர் கே. டானியலை அவர்கள் குறித்து...

ஈழத்தின் தமிழ்ப்புனைகதை வரலாற்றில் சமூக மெய்மையை அதன் இரத்தமும், சதையும் புலப்படும் வண்ணம் வெளிப்படுத்திய படைப்பாளிகளுள் முதன்மைக் கணிப்பிற்குரியவர்தான் டானியல்" என அமரர் டானியலின் எழுத்துக்கள் பற்றிய பதிவாக மறைந்த பேராசிரியர் சிவத்தம்பியின் மதிப்பீடு அமைந்துள்ளது அவர் மேலும் அமரர் டானியல் பற்றிக் குறிப்பிடும் போது "டானியலுடைய மொத்த நாவல்களையும் ஒரு தொடர் வாசிப்பிற்கு உள்ளாக்கும் பொழுது யாழ்ப்பாணத்தினுடைய சமூகத்தின் ஒரு மொத்த வரலாறு கிடைக்கின்றது. யாழ்ப்பாணத்தின் சமூக ஏற்றத்தாழ்வுகளை, சாதிவழி வரும் தீண்டாமையை, அது ஏற்படுத்தும் மனிதாயச் சிதைவுகளை, அவற்றால் பாதிக்கப் பட்டவராய், பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து அந்நியப்படாதவராய் அவர்களில் ஒருவராக வாழ்ந்து எழுதியவர் டானியல்." என்கிறார் கா. சிவத்தம்பி.

கே. டானியல் 1927இல் யாழ்ப்பாணத்தில் பிறந்து, தனது 59வது வயதில், மருத்துவ சிகிச்சைக்காக தமிழகத்திற்கு சென்றிருந்த சமயம் தஞ்சையில் (1989) மரணித்தார். வடக்கில் இருந்த போர் நிலை காரணமாக அவரது உடலை அன்று அவரது பிறந்த மண்ணுக்கு கொண்டு வர முடியாத நிலையில் தஞ்சையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. தனது 23 வயதில் ஒடுக்கப்படும் மக்களின் துயரங்களை அவர்களது பாடுகளை எழுதத் தொடங்கிய அவர் கிட்டத்தட்ட 27 வருடங்கள் தீவிரமாக எழுதினார். டானியலுடைய எழுத்தின் காலம் என்பது அவரது எழுத்தூழியத்தின் ஆயுள் மட்டுமல்ல ஒடுக்கப்படும் சமூகத்தின் வராலாற்றின் நீண்ட காலமுமாகும். அந்தளவிற்கு நிலைத்து நிற்கும் பெறுமதி அவரது எழுத்துக்கு உண்டு. அதன் முக்கியத்துவமே அவரை நினைவு கூருதலும் அவர் பற்றியும் அவரது எழுத்துக்கள் பற்றியும் இன்றும் நாம் பேசுவதுமாகும்.

6வது வகுப்புக்கு மேல் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாத ஏழ்மை, மற்றும் சமூகச் சூழல் காரணமாக மேல்கல்வியை பெற முடியாது இருந்தும் தனசுய தேடலும் வாசிப்பும் செயற்பாட்டு அனுபவமும் தந்த அறிவாலும், எழுத்தூக்கத்தாலும்,



ஒரு தவிர்க்க முடியாத ஆளமை யாக நிராகரிக்க முடியாத குரலாக எழுந்து நின்றவர். தமிழில் தலித்திலக்கிய முன்னோடி கே. டானியல்தான் என ஆய்வு, கல்விச் சமூகம் அடையாளம் கண்டவர் கே.டானியல்.

அவர் எழுதிய நாவல்களான பஞ்சமர் (1972), போராளிகள் காத்திருக்கின்றனர் (1975), கானல் (1980), கோவிந்தன் (1983), அடிமைகள் (1984), தண்ணீர் (1987), பஞ்சகோணங்கள் (1993), சிறுகதைத் தொகுப்பான 'உலகங்கள் வெல்லப்படுகின்றன (1974), சுயசரிதையான 'என் கதை (1986) என்பன இன்றும் அதிகம் படிக்கப்படுவதுடன், பல மீள்பதிப்பும் கண்டு வருகின்றன. தன் இளவயதில் யாழ்ப்பாணத்தில், 1950 களிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து செயற்பட்டவர் அவர். அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையின் உறுப்பினராகவும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் ஸ்தாபக உறுப்பினராகவும் இருந்தவர். 1962 இல் 'அடிமை விலங்கறுப்போம் 'எனும் நூலை எழுதிய அவர், நிலமற்ற, கல்வி மறுக்கப்பட்ட, ஒடுக்கப்படும் சமூகத்தின் ஆவேசமிகு போராளியாகவும் தீவிர செயற்பாட்டாளருமாவார். அரசியல் கருத்து நிலையின் காரணமாக என். சண்முகதாசன், மு. கார்த்திகேசன் போன்ற இடதுசாரித் தலைவர்களுடன் இணைந்து நின்றதற்காக, இலங்கை அரசாங்கத்தின் ஆட்சிக் கவிழ்ப்பு குற்றச்சாட்டை எதிர்கொண்டு 14 மாதங்கள் சிறைவாசம் கண்டவர்.

தன் வாழ்வின் பெரும் பகுதியை ஒடுக்கப்படும் மக்களுக்காக அர்ப்பணித்த அவரது நூறாண்டு நினைவை, யாழ்ப்பாணம், அக்கரைப்பற்று, ஹட்டன், சென்னை என நினைவு கூர்ந்து கொண்டிருக்கும் இத் தருணத்தில் , டொரொண்டோ தமிழ் புத்தக அரங்கம் - 2026 இல், அமரர் கே. டானியலை நினைவு கூர்ந்து , கௌரவித்து, அவரது மீள்பதிப்புக் கண்ட நூல்களை காட்சிப்படுத்துவது எமது கடமையும், வரலாற்று மதிப்பளிப்பும் எனக் கருதுகிறோம்.

நன்றி : எம்.பௌசர்

BEHIND ME MEDIA

ஜேர்மனியில் "துகள்" அமைப்பு நடாத்திய தமிழ் நாடக விழா!



ஜேர்மனியின் குசயமெகரசவ நகரில் "துகள்" அமைப்பின் சார்பில் மாபெரும் தமிழ் நாடக விழா வெற்றிகரமாக நடைபெற்றது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் கலைத்திறனை உலகிற்குப் பறைசாற்றும் வகையில் இந்தத் திருவிழா அரங்கேறியது.

இலங்கை, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து,நோர்வே மற்றும் நெதர்லாந்து ஆகிய பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்த தமிழ் நாடகக் கலைஞர்கள் இதில் பங்கேற்றனர். கலை மற்றும் தமிழ் மொழியின் விழுமியங்களை வெளிப்படுத்தும் விதமாக 10 தரம் வாய்ந்த நாடகங்கள் ஒரே மேடையில் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





BEHIND ME MEDIA
2026 October, 27
219, Kandy Road Jaffna.
Tel : +94762390159,
+14376883493
Email:
info@behindmemedia.com,
website:
www.behindmenews.org

வீடற்றோர் பிரச்சனையை எதிர்கொள்வது Ontario வின் புதிய மேயர்களுக்கு முக்கிய சவாலாக அமையும்?

வீடற்றோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, அடுத்த வாரம் Ontario முழுவதும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள மேயர்களும் கவுன்சிலர்களும் எதிர்கொள்ள வேண்டிய மிகவும் அவசரமான பிரச்சினைகளில் ஒன்றாகும். அதே வேளையில் வீட்டுவசதி, மனநலம் மற்றும் போதைப்பொருள் ஒழிப்புச் சேவைகளுக்கான நிதி திரட்டும் போராட்டமும் தொடர்கிறது.

ஒன்ராறியோ நகராட்சிகளின் சங்கம் கடந்த ஆண்டு வெளியிட்ட ஒரு முக்கியமான ஆய்வறிக்கை, இந்த மாகாணம் வீடற்றோர் பிரச்சினையில் ஒரு "முக்கிய ஆபத்தான கட்டத்தை" எட்டியுள்ளதாக எச்சரித்தது.

2024 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 80,000 ஒன்ராறியோ வாசிகள் வீடற்றவர்களாக இருந்ததாக அது கண்டறிந்துள்ளது. இந்த எண்ணிக்கை 2025 இல் சுமார் 85,000 ஆக உயர்ந்தது, மேலும் இந்த எண்ணிக்கை மீண்டும் உயரும் என்று சங்கம் எதிர்பார்க்கிறது.

"நாம் எவ்வளவு வசதியான ஒரு மாகாணத்தில் வாழ்கிறோம் என்பதைக் கருத்தில் கொள்ளும்போது, 85,000 என்ற எண் மிகவும் அதிர்ச்சியளிக்கக்கூடியதாக உள்ளது," என்று மாகாணத்தின் 444 நகராட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் யுஆழு அமைப்பின் தலைவர் Riley Brockington கூறினார்.

இந்த மக்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஆறு மாதங்களுக்கும் மேலாக வீடற்றவர்களாக வாழ்ந்து வருகின்றனர் என்று சங்கம் தெரிவித்துள்ளது.

ஒன்ராறியோவின் பெரும்பான்மையான நகராட்சிகள் இந்தப் பிரச்சினையுடன் போராடி வருகின்றன, மேலும் இது அவர்களின் வருடாந்திர வரவுசெலவுத் திட்டத்தில் பெரும் பகுதியை விழுங்குகிறது என்று பிராக்கிங்டன் கூறினார். பற்றாக்குறை பட்ஜெட் நடத்த முடியாத நிலையில், இது நகராட்சிகளைப் பெரும் நெருக்கடியில் தள்ளுகிறது.



AMO அமைப்பின் கோரிக்கை மிகவும் பெரியது: 10 ஆண்டுகளில் $11 பில்லியன் டாலர்கள். இது 75,000 பேருக்கு ஆதரவு, தற்காலிக மற்றும் சமூக வீட்டுவசதிகளை வழங்குவதோடு, தடுப்புத் திட்டங்களுக்கும் நிதியளிக்கும். கடந்த ஆண்டு ஒன்ராறியோ முழுவதும் சுமார் 2,000 தற்காலிக முகாம்கள் இருந்ததாகக் கூறிய சங்கம், அவற்றைக் கையாளுவதற்கு 8 ஆண்டுகளில் $2 பில்லியன் டாலர்களைக் கோருகிறது. புகலிடங்கள் இல்லாத பல சிறிய நகரங்கள் உட்பட மாகாணம் முழுவதும் இந்த முகாம்கள் உருவாகி வருகின்றன.

"Ontario வில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு இரவும் தங்குவதற்குப் பாதுகாப்பான இடம் தேவை என்று நாங்கள் நம்புகிறோம், ஆனால் அது மிகவும் செலவு குறைந்ததல்ல," என்று பிராக்கிங்டன் கூறினார். "இதனால்தான் இந்தச் சுமையை நகராட்சிகளின் தோள்களில் மட்டுமே சுமத்த முடியாது."

நகராட்சிகளுக்கு ஏமாற்றமளிக்கும் விஷயம் என்னவென்றால், அனைத்து அரசாங்க நிலைகளும் ஒரே தீர்வை ஒப்புக்கொள்கின்றன. அதிக வீடுகள், குறிப்பாக ஆதரவு வீடுகளை உருவாக்குவதுதான் அது.

"நகராட்சிகள் பட்ஜெட் போடவும், எதிர்காலத்திலும் இந்த நிதி கிடைக்கும் என்ற உத்தரவாதத்தைப் பெறவும் முடியும்," என்று அவர் கூறினார். விட்டால் நீண்டகாலமாக திட்டமிட முடியாது, ஒவ்வொரு ஆண்டும் இதே போன்ற போராட்டமே தொடரும் என்றார். Ontario வின் நிதிப் பொறுப்புக்கூறல் அலுவலகத்தின் சமீபத்திய அறிக்கை, வீடற்றோர் திட்டங்களுக்கான மாகாணச் செலவு 2020 முதல் ஏற்ற இறக்கங்களைக் கண்டுள்ளது, பின்னர் 2026-27 இல் $948 மில்லியனை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், காலவரையறையுடைய நிதியுதவி காரணமாக இந்தத் தொகை 2028-29 இல் $708 மில்லியனாகக் குறையும் என்று அறிக்கை கூறியுள்ளது.

வடக்கு மற்றும் கிராமப்புற ழுவெயசழைவில் வீடற்றோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது, ஒரே ஆண்டில் வடக்கு ஒன்ராறியோவில் 37 சதவீதமும், பெரும்பாலும் கிராமப்புற சமூகங்களில் 31 சதவீதமும் அதிகரித்துள்ளது என்று AMO கண்டறிந்துள்ளது. சங்கம் வெளிப்படுத்திய மற்றொரு ஆபத்தான புள்ளிவிவரம் மாகாணம் முழுவதும் சுமார் 20,000 இளைஞர்கள் வீடற்றவர்களாக உள்ளனர்.

மேலும் Toronto வில் ஏதேனும் ஒரு இரவில், 1,000 க்கும் மேற்பட்ட சிறுவர்களும் குழந்தைகளும் நகரத்தின் புகலிடங்களிலோ அல்லது தெருக்களிலோ தங்கியுள்ளனர்.

நெருக்கடியில் உள்ள இளைஞர்களுக்குச் சேவை செய்யும் கனடாவின் மிகப்பெரிய தொண்டு நிறுவனமான Ovenant House Toronto தலைமை நிர்வாக அதிகாரி Mark Aston தடுப்பு நடவடிக்கைகளே முக்கியமாகும். கோவெனன்ட் ஹவுஸ் ஒரு அவசரகால புகலிடத்தைக் கொண்டுள்ளது, தற்காலிக வீட்டுவசதி மற்றும் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆதரவு உள்ளிட்ட விரிவான ஆதரவு சேவைகளை வழங்குகிறது.

"பல்வேறு காரணங்களால் இளைஞர்கள் இந்தச் சூழ்நிலையிலிருந்து வெளியேறுவது மிகவும் கடினமாகி வருகிறது: விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்புச் சந்தை, மற்றும் சிறப்புச் சேவைகள் தேவைப்படும் தீவிர மன உளைச்சல் மற்றும் இயலாமை நிலைமைகள்," என்று அவர் கூறினார்.

"நம்மிடம் தீர்வுகள் உள்ளன, இதன் மீது கவனம் செலுத்தி இதை விரிவாக்க வேண்டும்," என்று கூறிய Aston, இந்தத் திட்டம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் இருக்க வேண்டும் என்று வாதிட்டார். கோவெனன்ட் ஹவுஸ் தனது சொந்த வளாகத்திலேயே ஒரு பள்ளியைக் கொண்டுள்ளது, இது இளைஞர்கள் தங்கள் மேல்நிலைக் கல்வியை முடிக்க உதவுகிறது.

காரணம் எளிதானது என்று Aston கூறினார்.

"Ontario முழுவதிலும் உள்ள மேயர்கள் இளைஞர்களின் வீடற்ற நிலையை முடிவுக்குக் கொண்டுவர உறுதிபூண வேண்டும் என்று நான் நினைக்கிறேன்," என்று அவர் கூறினார்.

முக்கியமான முடிவை எதிர்கொள்ளும் கனடா வங்கி

உயர்ந்து வரும் எரிபொருள் விலைகள் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை கவனத்தில் கொண்டு, கனடா வங்கி இந்த வாரம் தனது வட்டி விகிதத்தை உயர்த்தும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்து வருகிறது.

LSEG தரவு மற்றும் பகுப்பாய்வு தகவல்களின்படி, வெள்ளிக்கிழமை பிற்பகல் நிலவரப்படி, வட்டி விகித உயர்வுக்கான நிதிச் சந்தையின் வாய்ப்பு கிட்டத்தட்ட 78 சதவீதமாக இருந்தது.

கனடா வங்கி தொடர்ந்து ஏழு கூட்டங்களாக தனது கொள்கை வட்டி விகிதத்தை 2.25 சதவீதமாகவே தக்க வைத்துள்ளது.

வளர்ந்து வரும் பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் மத்திய வங்கி ஒரு "முக்கியமான முடிவை" எதிர்கொள்வதால், கால் புள்ளி வட்டி விகித உயர்வு இருக்கும் என்று தாம் இப்போது எதிர்பார்ப்பதாக பொருளாதார நிபுணர்கள் வியாழக்கிழமை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பிய குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கில் தொடரும் போர் காரணமாக பெட்ரோல் விலைகள் உயர்ந்ததால், செப்டம்பரில் வருடாந்த பணவீக்க விகிதம் 3.1 சதவீதமாக அதிகரித்துள்ளதாக கனடா புள்ளியியல் திணைக்களம் கடந்த வாரம் அறிவித்திருந்தது.

அதேவேளை, இம்மாத தொடக்கத்தில் வெளியான தொழிலாளர் சந்தை தரவுகளின்படி, செப்டம்பரில் பொருளாதாரம் 68,000 வேலைவாய்ப்புகளை இழந்ததால், வேலைவாய்ப்புச் சந்தை தொடர்ந்து இரண்டாவது மாதமாக முடக்கத்தைக் கண்டுள்ளது.

இருப்பினும், இந்த வட்டி விகித உயர்வு குறித்த தங்களது கணிப்பில் "மிகக் குறைந்த நம்பிக்கையே" இருப்பதாகக் கூறியுள்ள பொருளாதார நிபுணர்கள் இதற்குப் பதிலாக டிசம்பர் அல்லது ஜனவரியில் வட்டி விகிதத்தை உயர்த்துவதற்கான ஆயத்தமாக இக்கூட்டத்தை கனடா வங்கி பயன்படுத்தக்கூடும் என்பதற்கும் அதிக வாய்ப்புள்ளதாகப் பார்க்கின்றனர்.

கனடா வங்கியின் ஆளநர் Tiff Macklem சமீபத்திய கருத்துக்களே இந்த எதிர்பார்ப்பு மாற்றத்திற்குக் காரணம் என்று RBC இன் உதவி தலைமை பொருளாதார நிபுணர் நாதன் ஜான்சன் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பேங்காக்கில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டத்தின் போது பேசிய ஆநாடநஅ உலகளாவிய ரீதியில் தொடர்ந்து உயர்ந்து வரும் எரிபொருள் விலைகள் உள்நாட்டில் பணவீக்க முன்னறிவிப்பை உயர்த்தும் என்று எச்சரித்திருந்தார்.

உயர்ந்து வரும் கச்சா எண்ணெய் விலைகள் எதிர்காலத்தில் பரந்த பணவீக்க அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடும் என்பது குறித்து மத்திய வங்கி அதிக கவலையடைந்துள்ளது என்பதையே இது முக்கியமாக சுட்டிக்காட்டுகிறது.


சித்திரச்
சிறுகதைகள்




BEHIND ME MEDIA
BEHIND ME
MEDIA


- சிறுகதை -
மழை தந்த மகிழ்ச்சி
ஒரு சிறிய கிராமத்தில் கண்ணன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு மழையில் விளையாடுவது மிகவும் பிடிக்கும். ஆனால், அவனுடைய தாய் மழையில் நனைந்து நோய்வாய்ப்பட்டுவிடுவாய் என்று கூறி அவனைத் தடுத்துவிடுவார்.
ஒரு நாள் காலையில் வானம் கருமேகங்களால் சூழப்பட்டது. குளிர்ந்த காற்று வீசியது. சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது. மரங்களும் செடிகளும் மழையில் நனைந்து அழகாகக் காட்சியளித்தன.
அப்போது கண்ணன் வீட்டின் ஜன்னல் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். வீட்டின் அருகிலிருந்த ஒரு சிறிய குருவி மழையில் நனைந்து, பறக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தது. அதைக் கண்ட கண்ணன் உடனே தாயிடம் ஓடிச் சென்று கூறினான்.
தாயும் மகனும் சேர்ந்து அந்தக் குருவியைப் பாதுகாப்பாக ஒரு கூடையில் வைத்தனர். அதற்குச் சிறிது தண்ணீரும் உணவும் கொடுத்தனர். மழை நின்றதும் குருவி மகிழ்ச்சியாகச் சிறகடித்துப் பறந்து சென்றது.
இதைக் கண்ட கண்ணன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். அவனுடைய தாய், "மகனே, மழை நமக்கு மகிழ்ச்சியை மட்டுமல்ல, பல உயிரினங்களுக்கும் வாழ்வைத் தருகிறது. நாம் இயற்கையையும் உயிரினங்களையும் நேசிக்க வேண்டும்" என்று அன்புடன் கூறினார்.
அன்றிலிருந்து கண்ணன் மழையை ரசிப்பதுடன், பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் உதவி செய்து வந்தான்.
நீதி: பிற உயிர்களிடம் அன்பு காட்டுவதே உண்மையான மனிதநேயம்.


யார் முதலில்
கீழே சென்றடைவார்?
1
2
3
4


உலகத்துலயே
கலப்படம்
இல்லாதது
கரண்ட்தான்.
சந்தேகம்
இருந்தா
நக்கி பாருங்க


குறிஞ்சி நிலம்
– காதலும் கண்ணியும் மலையும் –
குறிஞ்சி நிலம் என்பது மலைகள் சூழ்ந்த இயற்கை அழகால் நிரம்பிய நிலம். இங்கு குளிர்ந்த காற்றும், நீர்வீழ்ச்சிகளும், மலர்களும், காடுகளும் நிறைந்திருக்கும். இந்நிலம் சங்க இலக்கியத்தில் காதலின் நிலமாகக் குறிப்பியப்படுகிறது. "குறிஞ்சி" மலர் இந்நிலத்தின் அகையாளம். இந்த மலர் மலரும் காலமே காதலர்கள் இனனயும் காலமாகக் கருதப்படுகிறது.
குறிஞ்சி நிலத்தின் மக்கள்
இந்த நிலத்தில் வாழ்ந்தவர்கள் குறவர் இன மக்கள். அவர்கள் வேட்டை, மலைவாழ்வு, தேன் சேகரித்தல் ஆகியவற்றை வாழ்வாதாரமாக கொண்டவர்கள். அவர்களின் வாழ்க்கை இயற்கையோடு இனனந்ததாக இருந்தது.
இயற்கையும் வாழ்க்கையும்
மலைச்சரிவுகள், அருவிகள், மூங்கில் காடுகள், மலர்ந்த குறிஞ்சி மலர்கள், குரங்குகள், மான், காட்டு யானைகள் என பல்வேறு விலங்குகள் இந்த நிலத்தின் சிறப்புகள். மழைநீர், குளிர்ந்த காலநிலை, செழிப்பான மலைச்சரிவுகள் இங்கு காணப்படும்.
குறிஞ்சி நிலத்தின் சிறப்பு
இந்நிலம் காதல், உணர்ச்சி, இனைவு, நம்பிக்கை ஆகியவற்றின் குறியீடாகும். குறிஞ்சி மலர் 12 ஆண்டுகளுக்கு ஒருமறை மலர்வது போல, உண்மையான காதலும் சரியான காலத்தில் மலரும் என்பதே இதன் உண்மை.
குறிஞ்சி நிலம்
இயற்கையின் அழகும்,
காதலின் இனிமையும் கலந்த நிலம்...

விடுகதை
கசக்கிப் பிழிந்தாலும்
கடைசிவரை இனிப்பான்.
அவன் யார்?
A. கரும்பு B. பலா
C. மாம்பழம் D. திராட்சை
சரியான விடையை கண்டுபிடியுங்க


ஒரு மரக்கிளையில்
5 பறவைகள் அமர்ந்திருந்தன.
வேடன் ஒருவன் அதில் 2 பறவைகளை
சுட்டுக் கொன்றான்.
இப்போது கிளையில் எத்தனை
பறவைகள் மீதமிருக்கும்?


1
தீபாவளி ஸ்பெஷல்
அச்சு முறுக்கு
செய்முறை
2
தேவையான பொருட்கள்
அரிசி மாவு – 2 கப்
உளுத்தம் மாவு – 2 டேபிள்ஸ்பூன்
கடலை மாவு – 1 டேபிள்ஸ்பூன்
வெண்ணை – 1 டேபிள்ஸ்பூன்
எள்ளு – 1 டீஸ்பூன்
சீரகம் – 1 டீஸ்பூன்
உப்பு – தேவையான அளவு
தண்ணீர் – தேவையான அளவு
எண்ணெய் – பொரிக்க தேவையான அளவு
3
மாவு தயாராக்கவும்
ஒரு பாத்திரத்தில் அரிசி மாவு, உளுத்தம் மாவு, கடலை மாவு, எள்ளு, சீரகம், உப்பு சேர்த்து நன்றாக கலக்கவும்.
வெண்ணை சேர்த்து நன்றாக கலந்து கொள்ளவும்.
தண்ணீர் சிறிது சிறிதாக சேர்த்து இட்லி மாவு போன்ற மிருதுவான மாவாக பிசையவும்.
மாவை 10–15 நிமிடம் முடி வைத்து ஊற விடவும்.
4
அச்சை தயாராக்கவும்
கடாயில் தேவையான அளவு எண்ணெய் ஊற்றி காய விடவும்.
அச்சு முறுக்கு அச்சை எண்ணெயில் போட்டு நன்றாக சூடு செய்யவும்.
அச்சு நன்றாக சூடானதும், அச்சை எண்ணெயிலிருந்து எடுத்து மாவில் (பாதி வரை) நனைக்கவும்.
5
முறுக்கு பொரிக்கவும்
மாவில் நனைத்த அச்சை மீண்டும் எண்ணெயில் மெதுவாக விடவும்.
சிறிது நேரம் கழித்து அச்சை ஆட்டி, முறுக்கு தானாக பிரியும்.
இருபுறமும் பொன்னிறமாக முறுகி வரும் வரை பொரிக்கவும்.
பொரிந்தவுடன் எடுத்துக் கொண்டு, அதிக எண்ணெயை வடித்துவிடவும்.
6
சுவையான அச்சு முறுக்கு ரெடி!
முழுவதும் ஆறிய பிறகு மட்டுமே டப்பாவில் சேமிக்கவும்.
சரியான பதத்தில் மாவு இருந்தால், முறுக்கு அழகாகவும் மொறுமொறுப்பாகவும் வரும்.
அரிசி மாவு நன்றாக மிருதுவாக இருந்தால் முறுக்கு crisp-ஆக வரும்.
இந்த தீபாவளிக்கு வீட்டிலேயே சுவையான அச்சு முறுக்கு செய்து பாருங்கள்!


புதினாவின் வெவ்வேறு வகைகள்
ஸ்பியர்மிண்ட்
(நெட்டியான புதினா)
பெப்பர்மிண்ட்
(மிளகு சுவை புதினா)
ஆப்பிள் மிண்ட்
(ஆப்பிள் வாசனை புதினா)
சாக்லேட் மிண்ட்
(சாக்லேட் சுவை புதினா)
மொராக்கான் மிண்ட்
(மொராக்கான் புதினா)
கர்லி மிண்ட்
(சுருள் இலை புதினா)
பைனாப்பிள் மிண்ட்
(அன்னாசி வாசனை புதினா)
ஆரஞ்சு மிண்ட்
(ஆரஞ்சு வாசனை புதினா)
இஞ்சி மிண்ட்
(இஞ்சி சுவை புதினா)
வாட்டர் மிண்ட்
(நீர் புதினா)
கார்ன் மிண்ட்
(சோள புதினா)
ஜப்பானீஸ் மிண்ட்
(ஜப்பானீஸ் புதினா)


இதில் எது சரியாக
பொருந்தும்?
1
2
3
4


தாகமான காகம்
கடுமையான வெயிலில் ஒரு காகத்திற்கு தாகம் எடுத்தது. அது ஒரு குடத்தில் சிறிது தண்ணீர் இருப்பதைக் கண்டது.
அதன் அலகு தண்ணீரை எட்டவில்லை.
அருகிலிருந்த சிறு கற்களை ஒன்று ஒன்றாக குடத்தில் போட்டது.
தண்ணீர் மேலே உயர்ந்தது.
காகம் தண்ணீர் குடித்து தாகத்தைத் தீர்த்தது.


1
நேர்மையான குரங்கு
ஒரு குரங்கு மரத்தில் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் தரையில் ஒரு பழக்கூடை கிடந்தது. அது தனக்குச் சொந்தமல்ல என்று நினைத்து உரிமையாளரைத் தேடியது. சிறிது நேரத்தில் ஒரு சிறுவன் அழுதபடி வந்தான். குரங்கு கூடையை அவனிடம் கொடுத்தது. சிறுவன் மிகவும் மகிழ்ந்து குரங்கிற்கு சில பழங்களைப் பரிசாகக் கொடுத்தான். குரங்கு, "நேர்மை எப்போதும் நல்ல பலனைத் தரும்" என்று நினைத்தது.
நீதி: நேர்மை உயர்வைத் தரும்.


2
சிறிய எறும்பு
ஒரு எறும்பு தினமும் சிறிது சிறிதாக உணவைச் சேமித்தது. வெட்டுக்கிளி அதை பார்த்து சிரித்தது. மழைக்காலம் வந்தபோது வெட்டுக்கிளிக்கு உணவு இல்லை. எறும்பு சேமித்த உணவை உண்டு மகிழ்ந்தது. வெட்டுக்கிளி உழைப்பின் மதிப்பை அறிந்தது.
நீதி: உழைப்பே உயர்வு.


???
5 லிட்டர் பால் கொடுங்கள்
பால்
15 லிட்டர்
6 லிட்டர்
4 லிட்டர்
அவர் எப்படி 5 லிட்டர் பால் அளக்க முடியும்?